வாழ்வும் இலக்கியமும்

முனைவர் க.த.திருநாவுக்கரசு

வெளியீடு :
மணியகம்
3/30 இரண்டாவது பிரதான சாலை,
கோட்டூர்த் தோட்டம்,
கோட்டூர்புரம், சென்னை 600 085.
செல்பேசி : 94444 53737

வாழ்வும் இலக்கியமும்

முனைவர் **க.த.திருநாவுக்கரசு**

M.A., (Tamil), M.A., (History),
M.Lit ., Dip .Ing., Ph.D.,

வெளியீடு

மணியகம்

3/30 இரண்டாவது பிரதான சாலை,
கோட்டூர்த் தோட்டம், கோட்டூர்புரம்
சென்னை - 600 085.
செல்பேசி : 94444 53737

நூற் குறிப்பு

பெயர்	:	வாழ்வும் இலக்கியமும்
ஆசிரியர்	:	முனைவர் க.த.திருநாவுக்கரசு
மொழி	:	தமிழ்
முதல் பதிப்பு	:	டிசம்பர் 1977
2ம் பதிப்பு	:	அக்டோபர், 1979
மறு பதிப்பு	:	அக்டோபர் 2025
நூல் அளவு	:	டெம்மி 1/8
படிகள்	:	25 பிரதிகள்
எழுத்துரு	:	டாம்.இளங்கோ, எழுத்தளவு 10.5
பக்கங்கள்	:	VI + 130
ஒளிஅச்சு	:	ஜெயஸ்ரீ கிராபிக்ஸ், மதுரை. 9842293915
வெளியீடு	:	**மணியகம்** 3/30, இரண்டாவது பிரதான சாலை கோட்டூர்த்தோட்டம், கோட்டூர்புரம், சென்னை – 600 085. செல்: 94444 53737
அச்சகம்	:	அரசு ஆர்ட்ஸ் 78, ஸ்ரீனிவாச பெருமாள் சன்னதி, முதல் தெரு, இராயப்பேட்டை, சென்னை–14.

இலவச வெளியீடு

ISBN : 978-93-48345-02-8

இரண்டாம் பதிப்பின் பதிப்புரை

டாக்டர் க.த.திருநாவுக்கரசு அவர்களுடைய வாழ்வும் இலக்கியமும் எனும் இந்நூல், இப்பதிப்பகத்தின் முதல் வெளியீடாகும். இரண்டு ஆண்டுகளுக்குள் இவ்விரண்டாம் பதிப்பினை வெளியிடும் வாய்ப்புக் கிடைத்தமை இப்பதிப்பகத்தின் வளர்ச்சிக்குத் தமிழுலகம் அளித்துவரும் ஆதரவைப் புலப்படுத்துகிறது. ஆதரவு அளித்து எங்களை இப்பணியில் ஊக்குவித்து வரும் அன்பர்கள் அனைவருக்கும் எங்கள் உளங்கனிந்த நன்றியினை உரித்தாக்குகிறோம்.

இப்பதிப்பில் பல புதிய செய்திகளை இடையிடையே ஆசிரியர் சேர்த்துள்ளார். அவை இந்நூலிற்கு வலிவும் பொலிவும் அளிக்கும் என நம்புகிறோம். முந்திய பதிப்பில், முன்னுரைக்கு அடுத்த, கட்டுரைகள் வெளிவந்த இதழ்கள் எனும் பகுதி இடம்பெற்றுள்ளது. இந்நூலில் உள்ள கட்டுரைகள் யாவும் 1976க்கு முன்பே, பல இதழ்களில் வெளிவந்துள்ளமையால் அக்குறிப்பை இப்பதிப்பில் நீக்கிவிட்டோம்.

இந்நூலில் இடம்பெற்றுள்ள கட்டுரைகள் யாவும் ஆராய்ச்சிக் கண்ணோட்டத்தில் அமைந்தவை; புதிய கண்ணோட்டத்தில் வாழ்க்கைக்கும் இலக்கியத்திற்கும் இடையே உள்ள நெருக்கமான தொடர்பினை அவை கோடிட்டுக் காட்டுகின்றன.

முற்போக்குச் சிந்தனையை வெளிப்படுத்தும் இத்தகைய நூல்கள் பலவற்றை வெளியிட்டு வரும் இப்பதிப்பகத்திற்குத் தமிழ் அன்பர்களை ஆதரவு நல்குமாறு வேண்டுகின்றோம்.

சென்னை

20.10.79 **பதிப்பகத்தார்.**

இரண்டாம் பதிப்பின் முன்னுரை

'இலக்கியத்தை வாழ்க்கையின் விரிவுரை; மதிப்புரை' எனப் பலவாறு போற்றுவர். இதனால் இலக்கியத்திற்கும் வாழ்க்கைக்கும் மிக நெருக்கமான தொடர்பு இருந்து வருவதை அறிகிறோம். இலக்கியம் மக்கள் வாழ்க்கையை மையமாகக் கொண்டது; வாழ்க்கையின் அடிப்படைப் பண்புகளை, உணர்வுகளை, உண்மைகளை, செயல்முறைகளைக் கற்பனை வண்ணத்தில் குழைத்துத் தருவது. இவ்வகையில் 'வாழ்வும் இலக்கியமும்' ஒன்றாக இணைந்தவை; பிரிக்க இயலாதவை.

'வாழ்வும் இலக்கியமும்' எனும் இந்நூலில் உள்ள எழுத்துரைகள் யாவும், 'இலக்கியங்கள் எவ்வாறு மனித வாழ்க்கையைப் பிரதிபலிக்கின்றன?' என்பதை வெவ்வேறு கோணங்களில் படம்பிடித்துக் காட்ட முயலுகின்றன.

இந்நூலினைப் பட்டப்படிப்பு மாணவர்க்குப் பாட நூலாக வைத்து, எனக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்துவரும் அன்பர்களுக்கு நன்றி. இத்தகைய உதவியாலேயே இந்நூலின் இரண்டாம் பதிப்பினைக் குறுகிய காலத்திற்குள் வெளியிடும் வாய்ப்பு எங்களுக்குக் கிடைத்துள்ளது.

இவ்விரண்டாம் பதிப்பினை வெளியிட முன்வந்த மணியகம் பதிப்பகத்தாருக்கும், நல்லமுறையில் அச்சிட்டு உதவிய ஏ.ஜி.ஜி.பிரிண்டர்சு நிறுவனத்தினருக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

சென்னை

15.10.79

க.த.திருநாவுக்கரசு.

முதற் பதிப்பின் முன்னுரை

பரந்துபட்ட அனுபவமும் அழியாப்பேருணர்வுகளும் மக்கள் வாழக்கையை மாண்புறச் செய்கின்றன. இத்தகைய மக்கள் வாழ்க்கையை மையமாகக் கொண்டு இலக்கியம் தோன்றுகிறது; மக்களுடைய எண்ணத்தின் எழுச்சியையும் இதயத்தின் மலர்ச்சியையும் படம்பிடித்துக் காட்டுகிறது; வாழ்க்கையின் இன்ப துன்பங்களைக் கற்பனை வண்ணத்தில் குழைத்துக் கவின்மிகு கலைப்படைப்பாக வெளிப்படுத்துகிறது; கற்பவர் உள்ளத்தை மகிழ்வுறுத்துவதோடு, செம்மைப்படுத்திச் சிறப்புறவும் செய்கிறது. இவ்வகையில் வாழ்வும் இலக்கியமும் ஒரு நாணயத்தின் இரு பக்கங்களாக இணைந்தும் இழைந்தும் இயங்குகின்றன. இதை, இந்நூல் கோடிட்டுக்காட்ட முயலுகிறது.

'வாழ்வும் இலக்கியமும்' எனும் இந்நூலில் கடந்த ஐந்து ஆண்டுகளில், வெளியிடப்பட்ட கட்டுரைகள் ஒன்பது இடம்பெற்றுள்ளன. இவற்றுள் இரண்டு (1, 4) தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கும், மனிதகுல அறிவு வளர்ச்சிக்கும் அருந்தொண்டாற்றிய இரு பேரறிஞர்களின் வாழ்வையும் வரலாற்றையும் விரித்துரைக்கின்றன. மற்ற ஆறு (2, 3, 5, 6, 8, 9) கட்டுரைகள், தமிழ் இலக்கியத்தின் தொன்மைச் சிறப்பையும், இடைக்கால எழிலையும், இக்கால ஏற்றத்தையும் எடுத்தியம்புகின்றன. ஏழாவது கட்டுரை, தமிழகக் கலைச்செல்வங்களின் மாட்சியை நம் மனக்கண் முன்னால் கொண்டுவந்து நிறுத்துகிறது. இவற்றால், இலக்கியச் சுவைஞர்களுக்கு இச்சிறு நூல் நல்விருந்தாக அமையுமென நம்புகின்றேன்.

இந்நூலினை, நல்லமுறையில் குறுகிய காலத்தில் அச்சிட்டுதவிய ஒப்புரவு அச்சகத்தினருக்கு என் உளங்கனிந்த நன்றி.

சென்னை

25.12.77 **க.த.திருநாவுக்கரசு.**

பொருளடக்கம்

1. தமிழ் வளர்த்த ஆங்கிலப் பேராசிரியர் 1
2. நல்லறம் 11
3. இளங்கோ கண்ட இயற்கை 19
4. நடு ஆசியாவின் நல்லறிஞர் 29
5. கண்ணனின் காதலி 41
6. முற்போக்குக் கல்வியின் முன்னோடி 61
7. தமிழ்நாட்டின் கலைச்செல்வங்கள் 71
8. இளைய செம்மல் 87
9. கி.பி.2000 97

1

தமிழ் வளர்த்த ஆங்கிலப் பேராசிரியர்

ஆங்கிலப் பேரரசில், ஆதவன் மறையாமல் ஒளி வீசிக் கொண்டிருந்த காலம் அது! பாரதத் தாயின் செல்வமும் செல்வாக்கும் மிக்க புதல்வர்களுள் பலர், மேற்கு நாடுகளின் நாகரிகத்தில் மூழ்கித் திளைத்த காலம் அது! ஆங்கிலக் கல்வியைப் பெற்ற ஒரு சில தமிழரும், "தமிழில் என்ன இருக்கிறது? ஷேக்ஸ்பியரின் 'ஹாம்லட்' (Hamlet) நாடகம் ஒன்று போதுமே! அதற்கு ஒப்பாகத் தமிழில் எதையாகிலும் நீங்கள் காட்ட முடியுமா? உங்களிடம் ஒரு 'மில்டன்' உண்டா? தமிழில் 'கீட்சையும்', 'ஷெல்லியையும்' காண இயலுமா?" என்று தங்கள் தாயகத் தோழர்களை நையாண்டி செய்த காலம் அது!

இத்தகைய ஏளனப் பேச்சும் கேலிச் சிரிப்பும் நிறைந்திருந்த அக்காலத்தில், "நமக்கு நல்லதோர் இலக்கியப் பாரம்பரியம், வாழையடி வாழையாக வளர்ந்து கொண்டு வந்துள்ளது! நம்மிடம் கற்பனைத் திறனும் கலைநயமுமிக்க இலக்கியச் செல்வங்கள் ஏராளம் உண்டு! நம் மொழியும் கலைகளும் தொன்மைச் சிறப்பு வாய்ந்தவை; புதுமைப் பொலிவு கொண்டவை; வளமிகு வாழ்வு பெற்றவை! நம் சமயம், அன்பின் வழியே ஆண்டவனை அடைய வழிகாட்டும் வான்பொருளாகும்! ஒருமுறை இவற்றைக்கண்டு, கேட்டு, உண்டு மகிழ்க! பின்னர், மேற்குநாட்டுப் பண்பாட்டின் மாட்சியைக் குறித்துப் பெருமிதம் கொள்க!" என்று ஆங்கிலத்தின் மூலம் அறைகூவல் விடுத்தார் ஒரு தமிழ்ப்பெருமகனார்! அவர், இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்திற்கு முன்பே தமிழ்ப் பணியாற்ற தொடங்கியராவார். 'அவர் யார்?' என்னும் வினாவினை, அன்பர்கள் பலர் ஆர்வத்தோடு எழுப்புவர். அவர், பேராசிரியர் மு.சு.பூரணலிங்கம் பிள்ளை அவர்களேயாவர்!

வாழ்வும் வரலாறும்

இளமைப் பருவம்

திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்த முந்நீர்ப்பள்ளம் என்னும் ஊரில், சிவ.சுப்பிரமணியப் பிள்ளைக்கும் வள்ளியம்மைக்கும் 24.5.1866இல், நம் பூரணலிங்கனார் பிறந்தார். பெற்றோரின் பெயர்களே அவர் சைவ மரபில் தோன்றியவர் என்பதைத் தெரிவிக்கின்றன. இதற்கு, அவருடைய திருப்பெயரும் சான்று பகருகிறது. திருநெல்வேலி இந்துக் கல்லூரியில், இடைநிலை வகுப்பில் (F.A.) சேர்ந்து அவர் பயின்றார். அப்பொழுது மனோன்மணீய நாடகத்தின் ஆசிரியரான பேராசிரியர் P.சுந்தரம்பிள்ளை அக்கல்லூரியின் முதல்வராக இருந்தார். அப்பருவத்தில், நம் பூரணலிங்கனாருக்குத் தமிழிலக்கிய ஆய்விலும், தமிழக வரலாற்று ஆராய்ச்சியிலும் தணியாத வேட்கை உண்டாயிற்று. இதற்குக் காரணமாக இருந்தவர் பேராசிரியர் சுந்தரம்பிள்ளையெனில், அது தவறாகாது. அக்காலத்தில் சுந்தரம்பிள்ளை, "தமிழ் இலக்கியத்தில் சில 'மைல்' கற்கள்" (Some Milestones in the History of Tamil Literature) எனும் ஆய்வுரையை வழங்கிப் புகழ் பெற்றிருந்தார். தம்மிடம் பயின்ற நம் பூரணலிங்கனாருக்குத் தமிழிலக்கிய ஆய்விலும், தமிழக வரலாற்று ஆராய்ச்சியிலும் பேரார்வத்தையும் பேராசிரியர் சுந்தரம்பிள்ளை ஊட்டினார்.

ஆசிரியப்பணி

கலை இளவல் வகுப்பில் சேருவதற்காக, பூரணலிங்கம்பிள்ளை சென்னைக்கு வந்தார்; கிறித்துவக் கல்லூரியில் ஆங்கில இலக்கியத்தையும், மெய்ப்பொருள் இயலையையும் சிறப்புப் பாடங்களாகக் கொண்டு, கலை இளவல் வகுப்பில் அவர் பயின்றார். 1886ஆம் ஆண்டில் நடைபெற்ற கலை இளவல் வகுப்புத் தேர்வில், பூரணலிங்கம் பிள்ளை முதல் மாணவராகத் தேர்ச்சியுற்றார். சிறிது காலம் அரசாங்கப் பணியில் எழுத்தராக அவர் பணிபுரிந்தார்; பாளையங்கோட்டையிலிருந்த இந்து உயர்நிலைப்பள்ளியின் தலைமையாசிரியராகவும், ஈரோட்டில் இன்று மகாசன உயர்நிலைப்பள்ளி என விளங்கும் கல்வி நிறுவனத்தின் (டவுன் உயர்நிலைப்பள்ளி) தலைமையாசிரியராகவும் சில ஆண்டுகள் அவர் பணியாற்றினார். பின்னர், எட்டையபுரம் அரசருடைய மகனுக்கு, மாவட்ட ஆட்சித்தலைவரால், ஆசிரியராக, அவர் அமர்த்தப்பட்டார். அதன் பின்னர், சென்னையிலுள்ள சட்டக்கல்லூரியில் சேர்ந்து, அவர் சட்டம் பயின்றார். அப்பொழுது டாக்டர் மில்லர், கிறித்துவக்

கல்லூரியின் முதல்வராக இருந்தார். பூரணலிங்கம் பிள்ளையைத் தம் கல்லூரியில் ஆங்கில விரிவுரையாளராக, டாக்டர் மில்லர் அமர்த்திக் கொண்டார். அக்கல்லூரியில் பூரணலிங்கம்பிள்ளை அவர்கள் நான்கு ஆண்டுகளே பணிபுரிந்தார்.

நூலாசிரியர்

அப்பொழுது பூரணலிங்கனார், **ஞானபோதினி** என்ற மாத இதழைத் தொடங்கி, தமிழ்ப்பணியாற்றத் தொடங்கினார். அச்சமயம் கிறித்துவக் கல்லூரியில் பரிதிமாற்கலைஞர் என்ற தமிழறிஞர் சிறப்புற்று விளங்கினார். பிள்ளையும் கலைஞரும் சேர்ந்து, தமிழின் அருமை பெருமைகளை உலகிற்கு உணர்த்த, பல திட்டங்கள் தீட்டினர். அத்திட்டத்தின் முதற்படியாகக் கலைஞர் அவர்கள், தமிழ்மொழி வரலாறு என்னும் நூலினை உலகிற்கு வழங்கினார்; நம் பிள்ளை, தமிழ் இலக்கிய வரலாற்றை, முதன்முதலாக ஆங்கிலத்தில் (History of Tamil Literature) எழுதி, நூலாக வெளியிட்டார். இந்த இரு நூல்களும் அண்மைக்காலம் வரையில் தமிழ்மொழி, இலக்கிய வரலாற்றுத் துறைகளில் தன்னிகரற்ற தனிப்பெரும் நூல்களாக இருந்து வந்தன.

1900ஆம் ஆண்டு, கோவையில் இருந்த செயிண்ட் மைக்கேல் கல்லூரியில், அவர் ஆங்கிலப் பேராசிரியராகப் பணிபுரியத் தொடங்கினார். மீண்டும் திருநெல்வேலிக்கும் சென்னைக்கும் சென்று அவர் ஆசிரியராகப் பணி புரிந்தார். 1911இல் கெமிசிஸ் (Camisis College) கல்லூரியைத் தொடங்கி, அதன் முதல்வராகப் பிள்ளை ஐந்தாண்டுகள் பணியாற்றினார். உடல்நலக்கோளாறு காரணமாகவும், குடும்பச்சிக்கல்கள் காரணமாகவும், நிலையாகத் தொடர்ந்து ஓரிடத்திலும் அவர் பணிபுரிய முடியாமல் வருந்தினார்.

பத்திரிகாசியர்

1917ஆம் ஆண்டு, சென்னையில் அவர் தங்கி இருந்தார். அப்பொழுது நீதிக்கட்சியினர் நடத்திய ஜஸ்டிஸ் (நீதி) எனும் ஆங்கில நாளிதழுக்குத் துணையாசிரியராக அவர் பொறுப்பேற்றிருந்தார். அச்சமயத்தில், அரிய பல பொருள்களைப் பற்றி ஆங்கிலத்தில், சிந்தனையைத் தூண்டும் கட்டுரைகள் சிலவற்றை அவர் எழுதியுள்ளார்.

ஆராய்ச்சி அறிஞர்

கடைசியாக, அவர் ஆசிரியப்பணி புரிந்தது திருச்சியிலாகும். 1922 முதல் 1929 வரை S.P.G. (பிஷப் ஈபர்) கல்லூரியில் ஆங்கிலப்

பேராசிரியராக அவர் அலுவல் பார்த்தார். அக்காலத்தில், அவர் ஆங்கிலத்திலும் தமிழிலும் பல ஆராய்ச்சி நூல்களை எழுதிக் குவித்தார். 1929ஆம் ஆண்டு, அவர் ஓய்வு பெற்றார். ஓய்வு பெறுவதற்கு முன்பு, தமிழிற்கென ஒரு பல்கலைக்கழகத்தை நிறுவ வேண்டும் என்பதற்காக, அரசுக்கு அவர் ஒரு விரிவான விண்ணப்பத்தை அனுப்பினார். அதன் அடிப்படையில் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தைத் தோற்றுவிக்க, அவர் அரும்பாடு பட்டார்; ஓய்வு பெற்றபின் 21 ஆண்டுகள் அவர் உயிர் வாழ்ந்தார். அவ்வோய்வுக்காலத்தில், ஒல்லும் வகையெல்லாம் ஓயாது அவர் தமிழ்ப்பணியாற்றினார்.

தமிழ்த்தொண்டு

பூரணலிங்கம் பிள்ளை ஆற்றிய தமிழ்த்தொண்டினை நாம் இருபெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம். ஆங்கிலத்தின் மூலமாக ஆற்றிய தொண்டு எனவும், தமிழின்வழி ஆற்றிய தொண்டு எனவும் அதை நாம் வகைப்படுத்தலாம். ஆங்கிலத்தின்வழி அவர் ஆற்றியுள்ள தொண்டே சிறப்புமிக்கதாகும்.

ஆங்கிலத்தின் மூலம் ஆற்றிய தமிழ்த்தொண்டு

ஆங்கிலத்தில், தமிழியல் (Tamilology) பற்றிப் பல கட்டுரைகளையும் நூல்களையும் அவர் எழுதியுள்ளார்.

1. இலக்கியத் திறனாய்வு நூல்கள்

தமிழ் இலக்கிய வரலாறு

பூரணலிங்கம் பிள்ளை அவர்களுடைய தமிழ் இலக்கிய வரலாறு (History of Tamil Literature) எனும் ஆங்கில நூல், தமிழ் இலக்கியத்தை மேற்கு நாட்டுத் திறனாய்வுக்கண் கொண்டு மதிப்பீடு செய்ததன் விளைவாக, எழுதப்பட்டதாகும். தமிழிலக்கியத்தின் அருமை பெருமைகளை ஆங்கில, கிரேக்க மொழி இலக்கியங்களோடு ஒப்பிட்டு, உலகிற்கு உணர்த்தும் பணியை மிகச்சிறப்பாக அவர் செய்துள்ளார். காலந்தோறும், தமிழ் இலக்கியம் அடைந்த வளர்ச்சியையும், உற்ற மாறுதல்களையும் வரலாற்று முறையில், நடுவுநிலைமை பிறழாத வகையில் அவர் விரித்துரைத்துள்ளார். செஞ்சொற் கவியின்பம் பயக்கும் தமிழ்ப்பாக்கள் பலவற்றை, அவர் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து இந்நூலில் தந்துள்ளார். இந்நூலின் மூலம், மேலை நாட்டினருக்குத் தமிழ் இலக்கியத்தின் சீரையும்

சிறப்பையும் முதன்முதல் அறிமுகப்படுத்திய பெருமையை, நம் பிள்ளை அவர்கள் பெற்றார்.

பெருந்தகை இராவணன் (Ravanan, the Great) என்னும் நூல், அவருடைய கம்ப இராமாயணப் புலமையையும், சிவபக்தனான இராவணனிடத்து அவருக்கு இருந்த ஈடுபாட்டையும் தெரிவிக்கிறது. இராவணனுடைய வீரதீரச் செயல்களையும், கலையுணர்வு மிக்க வாழ்க்கையையும், முறுகிய சிவ பக்தியையும் கம்பனின் பாடல்களிலிருந்து தக்க சான்றுகள் காட்டி, ஆசிரியர் விளக்கியுரைத்துள்ள திறன், நம்மை வியப்பில் ஆழ்த்துகிறது. இராவணனுடைய மாட்சியையும், தொல் பழங்கால இந்தியத் தலைவர்களின் அணியில் அவனுக்குரிய இடத்தையும் ஆசிரியர், பரிவுடன் இந்நூலில் மதிப்பிட்டுள்ளார்.

திருக்குறள் ஆராய்ச்சி

திருக்குறள் ஆராய்ச்சி (Critical Studies in Kural) எனும் நூல், பிள்ளை அவர்களின் மதிநுட்பத்தையும் ஆராய்ச்சித் திறனையும், தமிழில் அவர் பெற்றிருந்த ஆழ்ந்த புலமையையும் காட்டுகிறது. இந்நூலில் பல குறட்பாக்களுக்குப் பூரணலிங்கம்பிள்ளை புதிய உரை விளக்கம் தந்துள்ளதை நாம் காணுகின்றோம். திருவள்ளுவரின் கவித்திறனையும், உள்ளக் கிடக்கையையும் நாம் மட்டுமல்லாமல், பிற நாட்டவரும் அறிவதற்கு இந்நூல் 1929ஆம் ஆண்டில் வெளியிடப்பட்டது. அக்காலம் வரை, திருக்குறளைப் பற்றித் தமிழன் ஒருவனால், ஆங்கிலத்தில் எழுதப்பட்ட ஆராய்ச்சி நூல் வேறொன்றும் வெளிவந்ததில்லை என்பதை நாம் நினைவு கூர்தல் வேண்டும். இதைக் கருத்தில் கொண்டு நோக்குவோமானால், பிள்ளையவர்களின் தொண்டு, எத்தகைய சிறப்புடையது என்பது எளிதில் புலனாகும்.

உரைவிளக்க நூல்கள்

பூரணலிங்கம் என்னும் பெயரின் ஆங்கில எழுத்துகளை (Purnalingam)த் தலைகீழாக மாக்னில் அன்ரூப் (Magnil Anrup) என்று திருப்பி எழுதி, அதையே புனைபெயராகக் கொண்டு, அவர் எழுதிய நூல்கள் பல உள்ளன. 'ஷேக்ஸ்பியர் நாடகங்களுக்கும், 'கார்லைல்', 'கோல்ட்ஸ்மித்' போன்றோரின் கவிதைகளுக்கும் எளிய, இனிய நடையில் உரை விளக்கங்களும், திறனாய்வுகளும் அடங்கிய நூல்கள் பலவற்றை, அவர் இப்பெயரில் வெளியிட்டுள்ளார்.

வரலாற்று நூல்கள்

பண்டைத் தமிழரின் வரலாற்றைப் பற்றி முதன்முதலாக V.கனகசபைப்பிள்ளை என்னும் அறிஞர் '1800 ஆண்டுகட்கு முற்பட்ட தமிழர்' (The Tamils 1800 Years Ago) என்னும் ஆங்கில நூலை 1904ஆம் ஆண்டு வெளியிட்டார். அவருக்குப்பிறகு, 1927இல் தமிழருடைய வரலாற்றை, ஆங்கிலத்தில் எழுதி வெளியிட்ட சிறப்பு நம் பிள்ளையையே சாரும். இந்நூலிற்குத் தமிழ் இந்தியா (Tamil India) என்பது பெயராகும். இந்நூலில் தமிழரின் தோற்றம், தமிழ்மொழியும் இலக்கியமும், தமிழரின் சமயம், தமிழரின் உள்நாட்டு வெளிநாட்டு வாணிகம், தமிழரின் போர்முறை, தமிழரின் ஆட்சிமுறை, தமிழ்க்கலைகள், தமிழரின் அறிவியல், தமிழரின் மருத்துவக்கலை, தமிழரின் கல்வி முறை என்னும் தலைப்புகளில் தமிழருடைய நாகரிகத்தின் சிறப்பையும், பண்பாட்டையும் குறித்து விரிவாக அவர் எழுதியுள்ளார். இந்நூலில் காணப்படும் கருத்துகளும், தரப்பட்டுள்ள விளக்கங்களும் பண்டைத்தமிழரின் வரலாற்றிற்குப் புத்தொளி தருகின்றன.

தமிழ் ஞானிகள் பதின்மர் (The Ten Tamil Saints) எனும் நூல், சைவ சமயத் தொண்டர்களான ஞானசம்பந்தர் முதல் பட்டினத்தார் வரையில் வாழ்ந்த அருளாளர் பதின்மரின் அருள்மிகு வாழ்வையும் சமயத் தொண்டையும், இலக்கியப் பணியையும் இனிய நடையில் பக்திநலம் கமழ எடுத்துரைக்கின்றது.

மொழிபெயர்ப்பு நூல்

ஆங்கிலப் பேராசிரியரான பூரணலிங்கனார், திருக்குறளைச் செறிவுமிக்க ஆங்கிலத்தில் அருமையாக மொழி பெயர்த்துள்ளார். ஆங்கிலத்தில் திருக்குறள் (The Kural in English) எனும் நூல், திருக்குறளின் ஆங்கில மொழி பெயர்ப்புகளுள் இன்னும் பிறநாட்டு அறிஞர்களால் சிறப்பு மிக்கதாகப் போற்றப்படுகிறது.

தமிழின்வழி ஆற்றிய தமிழ்த்தொண்டு

பிறநாட்டு நல்லறிஞரின் ஏற்றமிகு எண்ணங்களைத் தமிழின் மூலம், தமிழருக்கு அறிமுகம் செய்து வைத்த சிறப்பும் நம் பிள்ளைக்குரியதாகும். தமிழில் பதினெட்டு நூல்களை அவர் இயற்றியுள்ளார். அவற்றை நாம் (1) சிறுவருக்குரிய நூல்கள் (2) புதினங்கள், (3) நாடகம், (4) ஆராய்ச்சி நூல்கள் என நான்கு வகையாகப் பாகுபடுத்தலாம்.

சிறுவருக்குரிய நூல்

இந்நூல்களை நாம் (அ) செய்யுள் நூல்கள் (ஆ) உரை நடை நூல்கள் என இருவகையாகப் பிரிக்கலாம்.

(அ) செய்யுள் நூல்கள்

இவை பெரும்பாலும் பழைய நூல்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட, சிறப்புமிக்க பாக்களைக் கொண்ட திரட்டு (Collections)நூல்களாகும். அவற்றுள் (1) வாசகத்திரட்டு (திருவாசகம்) (2) விவேக விளக்கம் (நீதி நூல்களிலிருந்து), (3) ஔவைக்குறள், (4) செய்யுட் கோவை (நீதிப் பாடல்களும் கதைப் பாக்களும் கலந்தவை) என்பன சிறப்பு மிக்கனவாகும். விவேக விளக்கத்தில் 400 பாடல்களும் செய்யுட் கோவையில் 1055 செய்யுட்களும் உள்ளன. இவற்றுக்கு அரும்பதவுரை வரைந்துள்ளார்.

(ஆ) உரைநடை நூல்கள்

இவற்றுள் பல, நீதிகளை விளக்கும் கதைகளாக உள்ளன. சில ஆங்கிலக் கதைகளின் தமிழாக்கங்களாகக் காணப்படுகின்றன. (1) இராயர் அப்பாசிக் கதைகள், (2) இரு திருடர் கதைகள் (டால்ஸ்டாயின் கதைகள்), (3) கதையும் கற்பனையும், (4) பன்னிரு பெண்மணிகள், (5) நீலமணிமாலை (கார்லைலின் 'The Diamond Necklace' இன் தமிழாக்கம்) என்பன கதை நூல்களாகும்.

மற்றும், மாணவர்களுக்குப் பயன்படும் வகையில், தமிழ்க்கட்டுரைகள் எனும் நூலை அவர் எழுதியுள்ளார். அறிவிற்கு விருந்தாக அமையத்தக்க பன்னிரண்டு கட்டுரைகள் இந்நூலில் இடம்பெற்றுள்ளன.

புதினங்கள்

இடைக்காலத்திய இந்திய மக்களின் வாழ்கையைப் பிரதிபலிக்கும் வகையில் (1) மருத்துவன் மகள் (2) தப்பிலி எனும் இரு புதினங்களைப் பூரணலிங்கம்பிள்ளையவர்கள் எழுதியுள்ளார். அன்றைய தமிழ்ச் சமுதாயத்தில், பெண்ணிற்கு இழைக்கப்பட்ட கொடுமைகளை முதல் புதினம் சித்திரிக்கிறது. உணர்ச்சியின் பிண்டமாக விளங்கும் மனிதன், எவ்வாறு சூழ்நிலையின் நெருக்கடிக்கு இரையாகி, அல்லற்படுகிறான் என்பதைத் 'தப்பிலி' எனும் கதை விளக்கியுரைக்கிறது.

நாடகம்

தமிழில் நாடகக்கலை நல்லமுறையில் இன்றுவரை வளர்ச்சியுறவில்லை என்பதை நாம் நன்கு அறிவோம். நாடகங்களுள் நகைச்சுவை நாடகம் என்பது ஒருவகை. அவ்வகை நாடகம், தமிழில் விரல்விட்டு எண்ணக்கூடியனவாகவே உள்ளன. ஆனால், இத்துறையில் பேராசிரியர் பூரணலிங்கம் பிள்ளை பேரார்வம் காட்டியுள்ளார். இந்நூற்றாண்டின் முப்பதுகளில், அவர் நகைச்சுவை நாடகங்கள் சிலவற்றை நடிப்பதற்காக எழுதிக் கொடுத்துள்ளார். அவற்றுள் காமாட்சி எனும் நவநகை நாடகம் நூலாக வெளியிடப்பட்டுள்ளது. நகைச்சுவை கலந்த நல்ல தமிழில், ஆசிரியர் இந்நாடகத்தை இயற்றியுள்ளார்; மேனாட்டு நாடகக் கலையின் பண்புகள் பலவற்றை அவர், இதில் பரிசோதனை செய்துள்ளார்.

ஆராய்ச்சி நூல்கள்

தமிழில் பூரணலிங்கனார் எழுதியுள்ள ஆராய்ச்சி நூல்கள் இரண்டு. அவை யாவும் சமயச் சார்புடையவையாகும். (1) **நவராத்திரி விரிவுரைகள்** எனும் நூல், சக்தி வழிபாட்டின் தொன்மையையும் சிறப்பையும் தத்துவ அடிப்படையில் விளக்குகிறது.

(2) **சூரபதுமன் வரலாறு** எனும் ஆராய்ச்சி நூல் சிறப்புமிக்கது. கந்தபுராணத்தின் அடிப்படையில், ஆசிரியர் சூரபதுமனின் பேராற்றலையும் பெருந்திறனையும், சிவபக்தியையும் சிந்தைக்கு இனிய விருந்து நல்கும் வகையில், சொல்லோவியமாகத் தீட்டிக் காட்டியுள்ளார்.

இவை யாவும், அவருடைய அரிய தமிழ்ப்பணிக்கு அழியாத சான்றுகளாகத் திகழுகின்றன. இவையல்லாமல், கல்லூரி மாணவர்களுக்கும் பள்ளி இறுதிநிலை (Matriculation) மாணவர்களுக்கும் பயன்படும் வகையில், பாடப்புத்தக விளக்க நூல்களும் அவர் எழுதியுள்ளார். சட்டக்கலை மாணவருக்குத் துணைபுரியும் வகையில் உரோமன் சட்டத்தொகுப்பு, மெயினுடைய பழங்காலச் சட்டம் (Maines Ancient Law), ஒப்பந்தச்சட்டம், இன உதவிச்சட்டம் போன்ற சட்டத்தொகுப்புகளுக்கு விளக்க நூல்களைப் பேராசிரியர் எழுதியுள்ளார்.

ஆங்கிலத்தின்வழி தமிழ் வளர்த்த பெரியார்

இன்றைய தமிழகத்தின் மறுமலர்ச்சிக்கு நல்லதோர் அடிப்படையை அமைத்த அறிஞர் சிலராவர். அவருள் பேராசிரியர்

மு.சு. பூரணலிங்கம்பிள்ளைக்கு, ஒரு தனி இடம் உண்டு. அவர் இரு மொழிகளில் எழுத்தாளராகவும் பேச்சாளராகவும் விளங்கினார்; கதாசிரியராகவும் நாடாகசிரியராகவும் சிறப்புற்றார்; ஆராய்ச்சியாளராகவும் திறனாய்வாளராகவும் திகழ்ந்தார்; படைப்பாசிரியராகவும் பத்திரிகையாசிரியராகவும் பெருமையுற்றார். ஆங்கிலக் கல்வியிலும், மேலைநாட்டு நாகரிகத்திலும் அவரடைய உள்ளம் தோய்ந்திருந்தது. எனினும், சிறப்புமிக்க வகையில் சைவ சமயப்பற்றுடையவராய் அவர் வாழ்ந்தார்; தமிழுணர்வோடு நம் பண்பாட்டைப் போற்றி வளர்த்தார். இவை யாவற்றையும் விட, தேமதுரத் தமிழோசையைத் தம் ஆங்கில நூல்கள் வாயிலாக உலகமெலாம் பரவுமாறு அவர் செய்தார். இப்பணியே, பூரணலிங்கம் பிள்ளையின் தமிழ்ப்பணிகளுள் முதன்மையானது; முக்கியமானது. அப்பெருமகனாருக்குத் தமிழ்கூறு நல்லுலகம் என்றும் நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறது.

"அவர் (திருவள்ளுவர்) மறைந்துவிட்டார்! எனினும், இன்னும் அவர் பேசிக்கொண்டே உள்ளார்! சிந்திப்பதே வாழ்வதற்காகத்தான்! இம் மண்ணக வாழ்வின் மெய்ம்மைகளையும் பொறுப்புகளையும், அவற்றின் பல திறப்பட்ட இயல்புகளையும் எளிதில் வெளிப்படுமாறு அவர் எடுத்துரைத்துள்ளார்! அவை இன்று இலட்சக்கணக்கான மக்களின் மனத்தில் 'வாழும் நினைவுகளாக' வாழ்ந்து கொண்டிருக்கின்றன!

பத்தொன்பது நூற்றாண்டுகள் கழிந்துவிட்டன. ஆயினும், வள்ளுவருடைய சிந்தனையின் பேராற்றல் வலிவுகுன்றி, வளமற்றுப் போய்விடவில்லை! அவர்! இன்னும் வாழ்ந்து கொண்டுள்ளார்! காலம் கடுகிச் செல்லச் செல்ல, அவருடைய புகழ் பெருகிக்கொண்டே போகும்!

உண்மையையும் நன்மையையும் மக்கள் போற்றுகின்ற நாள் வரையில், வள்ளுவருடைய வாய்மொழிகள் அவர்களுக்குப் பேரார்வத்தையும் புத்துணர்ச்சியையும் ஊட்டுவனவாக அமையும்! உலகப் பெருஞ்சிந்தனையாளர்கள் இடையே திருவள்ளுவர் பொன்றாப் புகழ் உடையவராகப் பொலிவுறுவார்!" என்பது மு.சு.பூரணலிங்கனாரின் பொய்யாமொழி ஆகும்.

2

நல்லறம்

இன்றைய சமுதாயம் 'எல்லார்க்கும் எல்லாம் என்றிருப்பதான இடம் நோக்கி நடக்கின்றது'; சாதியால், சமயத்தால், பொருளால், மொழியால் மக்களிடையே உண்டாகும் வேறுபாட்டை நீக்கி, 'தகுதிக்கேற்ற வேலை, உழைப்பிற்கேற்ற ஊதியம்' எனும் கொள்கை அடிப்படையில், சோசலிச சமுதாய அமைப்பிற்கு வழிகாண முயலுகிறது. இத்தகைய சூழ்நிலையில், தனி மனிதனுடைய ஆளுமை வளர்ச்சியுற வழி யாது என்பதைக் காண்போம்.

பெற்றோரும் மக்களும்

பிறருடைய உள்ளத்தைக் கவரத்தக்கதாய்ப், புறத்தே புலனாகும் ஒரு மனிதனுடைய பண்புநலனே, ஆளுமையாகக் கருதப்படுகிறது. அதனுள், ஒரு மனிதனுடைய உடலியல், மனவியல், உணர்வியல், சமூகவியல் பண்புகள் அனைத்தும் தொகுநிலையில் இணைந்தும் இழைந்தும் காணப்படுகின்றன. இத்தகைய ஆளுமையை உருவாக்கும் கூறுகளுள் ஒன்று, மரபுவழிப் (Heredity) *பண்பு என்பதை உளவியல் அறிஞர்கள்* (Psychologists) *ஒப்புக்கொண்டுள்ளனர். இதனை உயிரியல் அறிஞர்கள்* (Biologists) *உடன்படுகின்றனர். ஒரு மனினுடைய தோற்ற மதிப்பு* (Stature), *உள்ளுரம்* (Stamina), *உடல்நலம், பொதுத்திறமை, உளப்பாங்கு ஆகியவை அவனுடைய பெற்றோர்களிடமிருந்து – மூதாதையரிடமிருந்து – பெறப்படுவன என்பதை இக்காலத்திய அறிவியல் ஆராய்ச்சிகளும் தெளிவுறுத்தியுள்ளன.*

நம்முடைய பழங்காலப் பெரியார்கள், இதனை ஏழேழு பிறவிக்கு, 49 தலைமுறைகளுக்கு மரபுவழிப் பண்பாகத் தொடர்ந்து வரும் என்று கூறுவர். பெற்றோர்களிடம் இருந்து மரபுவழியாகப் பிள்ளைகளைச் சென்றடையும் பண்புகளுள் அறிவுத்திறனும் ஒன்றாகும்.

ஒரு குடும்பத்தில், தாய் தந்தையர் இருவரும் இசைக்கலையில் ஈடுபாடுடையவர்களாக – பயிற்சியுடையவர்களாக இருப்பார்களானால், அவர்களுடைய பிள்ளைகளும் அக்கலையில் தோய்ந்தவர்களாகவும், பயிற்சியும் தேர்ச்சியும் பெற்றவர்களாகவும் இருப்பதை நாம் காணலாம். இதனை மரபுவழிப் பண்பு என்பதைவிட,

சூழ்நிலையால் அமைந்த பண்பு என இக்கால அறிவியல் அறிஞர் கூறுவர். ஆயினும், அப்பிள்ளைகள் உள்ளத்தில் அடங்கிக் கிடந்த உள்ளுறு பண்பை வெளிப்படுத்துவதற்கு இச்சூழல், நல்லதொரு வாய்ப்பாய் அமைந்தது என்பர் உளவியல் அறிஞர். இவை இரண்டையும் ஒன்றுசேர்த்தே, நம் முன்னோர்கள் குடிமைப்பண்பு எனும் தொடரால் குறிப்பிட்டுள்ளனர்.

பரம்பரையாகக் குறிப்பிட்ட ஒரு தொழில் செய்யும் குடும்பத்தை எடுத்துக் கொள்ளுவோம். மரவேலை செய்யும் தச்சுத்தொழில் குடும்பத்தில் தோன்றிய இளைஞன் பண்டைக்காலச் சூழலில், அத்தொழிலில் எளிதில் திட்பமும் நுட்பமும் வாய்ந்தவனாக விளங்க முடிந்தது. இதற்குக் காரணம் ஓரளவிற்கு மரபுவழிப் பண்பாகும். மரபுவழிப் பண்பால் அமைந்த அறிவுத்திறன், 'அவனை' அக்கலையில் தேர்ச்சி மிக்கவனாக விளங்கச் செய்தது. இதைத்தான் 'குலவிச்சை (வித்தை) கல்லாமல் பாகம்படும்' எனும் பழமொழி தெரிவிக்கிறது.

இனி, வரலாற்றை நோக்குவோம். தமிழகத்தில் ஒரு பேரரசை நிறுவிய பெருமைக்குரியவன் முதலாம் இராசராச சோழனாவான். அவனுடைய சிறப்புமிக்க மகன் இராசேந்திரன் கடல்கடந்த நாடுகளில் – ஜாவா, சுமத்திரா போன்ற தென்கிழக்கு ஆசிய நாட்டுப் பகுதிகளில், சோழப் பேரரசை நிறுவினான்; இவ்வாறு இராசேந்திரன் கடல்கடந்த பேரரசை நிறுவியதற்கு அவனுடைய தந்தையான இராசராச சோழனின் அறிவும், அனுபவமும் அடிப்படையாக அமைந்தன. தந்தையின் முதிர்ந்த அறிவும் கனிந்த அனுபவமும் மகனுக்கு வெற்றி மேல் வெற்றியைக் குவிக்கத் தூண்டுகோலாக அமைந்தன. இதைப்போன்றே, மாசிடோனியாவின் மன்னன் பிலிப்சு கிரேக்க நாடுகள் அனைத்தையும் ஒரு குடையின்கீழ்க் கொண்டு வந்தான். அவனுடைய மகனான அலைக்சாண்டர், வெளிநாடுகளை வென்று பேரரசனாக விளங்கத் தூண்டியது பிலிப்சின் அறிவுத்திறனும் அனுபவமுமேயாகும். இராசராசனைப்போல் பெரியதொரு கோயிலைக் கங்கைகொண்ட சோழபுரத்தில் கட்டுவதற்கும், நாட்டாட்சியில் நல்ல பல பணிகளைச் செய்வதற்கும் இராசேந்திரனால் முடிந்தது என்றால், அது மரபுவழியாக அவன் பெற்ற அறிவுத்திறனாலேயேயாகும். இதைத்தான் 'மகனறிவு தந்தை அறிவு' எனச் சான்றோர்கள் கூறுவர். இதனை,

செந்நெல்லால் ஆய செழுமுளை; மற்றுமச்
செந்நெல்லே யாகி விளைதலால் - அந்நெல்
வயனிறையக் காய்க்கும் வளவய லூர!
மகனறிவு தந்தை யறிவு **(நாலடி.367)**

என்று நாலடியார் அறிவுறுத்துகிறது.

"செந் நெல்லினால் உண்டாகிய செழிப்பான முளை, பின்னும் அந்தச் செந்நெல்லேயாகி விளைகின்றதைப் பார்க்கின்றோம். அத்தகைய செந்நெல் வயல் நிறைந்து விளைகின்ற வளமிக்க மருத நிலத் தலைவனே! தந்தையின் அறிவே மகனுடைய அறிவாக அமையும்" என்பது இப்பாட்டின் பொருளாகும்.

'விரை (விதை) ஒன்று போட்டால் சுரை ஒன்று காய்க்குமா?' எனும் பழமொழியும் இக்கருத்தையே தெரிவிக்கிறது. நாம் எத்தகைய விதையை விதைக்கின்றோமோ, அவ்விதையின் இயல்பிற்கு ஏற்பவே, அப்பயிர் செழித்து வளரும். இக்காலத்தில் விவசாயிகளுக்குக் கூறப்படும் ஆலோசனைகளில் ஒன்று. 'தரமான விதைகளை விதைக்க வேண்டும்' என்பதாகும். தரமான விதை விதைத்தால், தரமான பயிர் வளரும்; அதனால் தரமான மகசூலும் கிடைக்கும் என்பது நாடறிந்த உண்மை. இதைப்போன்றது தான், 'தந்தையின் அறிவு எப்படிப்பட்டதோ, அப்படித்தான் மகனுடைய அறிவு அமையும்' என்பதுமாகும்.

இதனையே 'தந்தையர் ஒப்பர் மக்கள்' எனத் தொல்காப்பியர் (1093) எடுத்துரைத்துள்ளார். இதைச் சிறிது முறை மாற்றி, மக்களைக் கொண்டு தந்தை எப்படிப்பட்டவன் என்பதை அறியலாம்' என்னும் வகையில்,

தக்கார் தகவிலர் என்பது அவரவர்
எச்சத்தாற் காணப் படும் **(குறள்.114)**

என்று திருவள்ளுவர் தெளிவுறுத்தியுள்ளார்.

எனவே, நம் வழித் தோன்றல்கள் அறிவில் சிறந்தவர்களாயும். நல்லியல்பு உடையவர்களாயும் விளங்க வேண்டும் என நாம் கருதுவோமானால், முதலில் நாம் அறிவிலும் பண்பிலும் சிறந்து விளங்கும் தகுதியைப்பெற முயலவேண்டும் என்பதே இப்பாடலின் கருத்தாகும்.

கொடுங்கோன்மை

நெல்லும் உயிரன்றே நீரும் உயிரன்றே
மன்னன் உயிர்த்தே மலர்தலை யுலகம்

என்பது புறநானூற்றுப் பொன்மொழி. முடியாட்சியே சிறப்பு மிக்க ஆட்சியமைப்பாக நிலவிய காலத்தில், தோன்றிய முதுமொழி இது! "குடிமக்களுக்கு நெல்லும் (உணவும்) உயிர் அன்று! நீரும் உயிரன்று! நாடாளும் மன்னனே உயிர்!' என்பது அக்காலத்திய

சமுதாய அமைப்பில் அரசுக்கு – அரசனுக்கு இருந்த ஏற்றத்தை எடுத்தியம்புகிறது. இதனால், பண்பார்ந்த அரசன், நாட்டின் நல்வாழ்விற்கு முதன்மையான தேவையாகக் கருதப்பட்டான் என்பதை நாம் உணருகிறோம். உயிரைக் காக்கும் நீரையும் நெல்லையும் அரசனுடைய அறநெறி பிறழாத ஆட்சியில்தான் பெறமுடியும் என நம் முன்னோர்கள் நம்பினர் என்பதும் இதனால் புலனாகின்றது.

குடிநலன் கருதி, அறநெறியில் நிலையாக நின்று ஆட்சி புரியும் மன்னனைச் 'செங்கோலன்' எனக் கூறுவது வழக்கம். செம்மையான கோலன் – நேர்மையான கோலன் என்பது இதற்குப்பொருள். செம்மையான ஆட்சியைச் 'செங்கோன்மை' என்பர்.

யாரிடத்திலும் குற்றம் இன்னதென்று ஆராய்ந்து, தாட்சண்யம் காட்டாமல், நடுவு நிலையில் நின்று செய்யத்தக்கதை ஆராய்ந்து செய்வதே, நீதிமுறையாகும். உலகத்தில் உள்ள உயிர்கள் எல்லாம் மழையை நோக்கி வாழுகின்றன; அதைப்போல குடிமக்கள் எல்லாரும் அரசனுடைய செங்கோலை நோக்கி வாழுகின்றனர். அந்தணர் போற்றும் மறை நூலுக்கும் அறத்திற்கும் அடிப்படையாய் நின்று, உலகத்தைக் காப்பது அரசனுடைய செங்கோலாகும். நீதிமுறைப்படி செங்கோல் செல்லும் அரசனுடைய நாட்டில் பருவமழை தவறாது. அதனால், நிறைந்த விளைவும், குறையாத செல்வமும் பெருகும். ஓர் அரசனுக்கு வெற்றி பெற்றுத்தருவது வேல் அன்று; அரசனுடைய செங்கோலே ஆகும். அக்கோல் செங்கோலாய் இருக்குமானால் நன்று. உலகத்தை எல்லாம் அரசன் காப்பாற்றுவான்; நீதிமுறை கெடாதவாறு ஆட்சி செய்வானாயின், அரசனை அந்த முறையே காப்பாற்றும். குடிகளைப் பிறர் வருத்தாமல் காத்துத் தானும் வருத்தாமல் காப்பாற்றி, அவர்களுடைய குற்றங்களைத் தக்க தண்டனையால் ஒழித்தல் அரசனுடைய தொழில். அது அரசனுக்குப் பழியன்று. இக்குறள் கருத்துக்கள், செங்கோன்மை எத்தகையது என்பதை விளக்குகின்றன.

குடிமக்களுடைய நலனைக் கருத்தில் கொண்டு விருப்பு வெறுப்பு இல்லாமல், அறத்தைப் போற்றி ஆட்சி செய்வதே, சிறந்த அரசனின் பண்பாகப் பண்டைக்காலத்தில் போற்றப்பட்டது. இவ்வாறு அரசன் ஆட்சி செய்யாமல் போனால், அதை முறைகெட்ட அரசு – கொடுங்கோல் அரசு – என்பர். அந்தக் கொடுங்கோல் ஆட்சி எப்படிப்பட்டது என்பதை நம் முன்னோர்கள் நன்கு படம்பிடித்துக் காட்டியுள்ளார்.

அரசன் முறைகேடான செயல்களைச் செய்து மக்களை வருத்துவான்; அந்நிலையில் கொலைகாரனைவிட அரசன் கொடியவனாவான். ஆட்சிக்குரிய கோலை ஏந்திநின்ற அரசன், குடிகளைப் பொருள்

கொடுக்குமாறு வற்புறுத்துவதும் கொடுமைப்படுத்துவதும், வழிப்போக்கர்களை வழிமறித்துத் தன் கையிலுள்ள வேலைக் காட்டி, அவர்களிடத்தில் உள்ள பொருள்களைப் பறிக்கும் வழிப்பறி கொள்ளைக்காரனுடைய செயலைப் போன்றதாகும். நாள்தோறும் தன் ஆட்சியில் விளையும் நன்மை தீமைகளை ஆராய்ந்து, முறை செய்யாத அரசன், நாள்தோறும் பையப் பையத் தன் நாட்டை – அதிகாரத்தை – இழந்து வருந்துவான். ஆட்சி முறையைக் கெடுத்துக் கொடுங்கோலனாகி, ஆராயாமல் எதையும் செய்யும் அரசன், பொருளையும் குடிகளையும் ஒருசேர இழப்பான். அரசன் முறை தவறி நாட்டை ஆட்சி செய்வானானால், அந்த நாட்டில் பருவ மழை பெய்யாமல் போகும். நாட்டைக் காக்கும் தலைவன் முறைப்படி காக்காவிட்டால், அந்நாட்டில் பசுக்கள் பால் தருதலாகிய பயன் குன்றும்; அந்தணரும் அற நூல்களை ஓதுவதை மறந்து விடுவர் என்பது கொடுங்கோல் ஆட்சியின் இயல்பைப் பற்றிய சித்திரமாகும்.

இவற்றால், மக்கள் நலனை அரசு மறக்குமானால் நாடு, நாடாக இருக்காது; கொடும் புலி வாழும் காடாக மாறிவிடும் என்பது புலனாகின்றது. அதாவது மக்களுடைய வாழ்க்கையில் அமைதி கெடும்; நாட்டில் சட்டமும் ஒழுங்கும் நிலைபெறாது; எங்கள் குழப்பமும் கொந்தளிப்பும் உண்டாகும். அதனால், சமுதாய நடைமுறையே தலைகீழாக மாறிவிடும் என்பது தெளிவாகிறது. இதனை நாலடியாரில் உள்ள பாடல் ஒன்று நயமுற எடுத்துரைக்கிறது.

உடைப்பெருஞ் செல்வரும் சான்றோரும் கெட்டுப்
புடைப்பெண்டிர் மக்களுங் கீழும் பெருகிக்
கடைக்கால் தலைக்கண்ணதாகி குடைக்கால்போற்
கீழ்மேலாய் நிற்கும் உலகு **(368)**

'அரசன் செங்கோல் ஆட்சி செய்யத் தவறினால், நாட்டின் கதி என்னவாகும்?' என்பதையே இப்பாடல் உணர்த்துகிறது. ஒரு நாட்டிற்குப் பெருமையைத் தேடித் தருபவர் சான்றோரும் செல்வருமாவர். அவர்கள் கொடுங்கோல் ஆட்சியில், தங்கள் சிறப்புகுன்றி அழிவர்; சமுதாயத்தில் தீய சக்திகளும் கயவர்களும் பெருகுவர்; செல்வாக்கு அடைவர்; உலகின் நடைமுறை வாழ்க்கைத் தலைகீழாக – குடையின் கைப்பிடிப் பகுதி, தலைப்பகுதியாக மாறி நிற்குமானால், எவ்வாறு இருக்குமோ, அதைப்போன்று – தலைகீழாக மாற்ற முறும்' என்று நாலடியார் எச்சரிக்கை செய்கிறது! கொடுங்கோலாட்சியின் கொடுமைகளை இப்பாடல் தெரிவிக்கிறது. இதனால், கொடுங்கோல் ஆட்சி எவ்வகையிலும் விரும்பத்தக்கது அன்று என்பது புலனாகின்றது.

நட்பின் திறம்

'வாழ்க்கை வாழ்வதற்கே!' எனும் முழக்கம் எங்கும் கேட்கிறது. ஆனால் 'எத்தகைய வாழ்க்கை வாழ்வதற்கு?' எனும் வினாவினை எழுப்புவோமானால், பலர் 'வளமாக வாழ்வதற்கே' எனப் பதில் கூறுவர். ஆயினும், 'நலமாக வாழ்வதையே' சிறந்த வாழ்க்கையாக அறிஞர்கள் – சான்றோர்கள் போற்றுவதை நாம் நினைத்துப் பார்ப்பது இல்லை! எத்துணை வளம் இருந்தாலும், நலம் இல்லையென்றால் என்ன பயன்? எதைச்சாப்பிட்டாலும் செரிக்காத – சீரணமாகாத – நோயுடைய ஒருவன், எவ்வளவு செல்வத்தைப் பெற்றிருந்து என்ன பயன்? அப்பொருளை அவன் பார்த்துப் பார்த்துத்தான் மகிழலாம்; வேறென்ன செய்ய இயலும்? எனவே, வளமான வாழ்க்கையைவிட, ஒரு மனிதனுக்கு முக்கியமான தேவையாக இருப்பது, நலமான வாழ்க்கைதான். நலமான வாழ்க்கையை அடிப்படையாகக் கொண்டு, வளமான வாழ்க்கை அமையுமானால் உண்டாகும் பயனை அளவிட்டுக் கூற இயலாது.

நலமான வாழ்க்கை என்பது நோய் நொடியின்றி வாழும் உடல்நலத்தை மட்டும் குறிப்பதாகாது. மனிதன் உடல், உள்ளம், உயிர் எனும் ஆன்மா ஆகிய மூன்றினால் உருவாக்கப்பட்டுள்ளான். உடல்நலம் மனிதனுக்கு முதல் தேவை. அதற்கு அடுத்து மனநலம் அவனுக்கு மிகவும் தேவைப்படுகிறது. மனநிறைவினால் அமைவது மனநலம். மனநலம் இல்லாத மனிதன், பெருந்துன்பத்திற்கு ஆளாவான்; எந்நேரமும் அல்லற்பட்டு ஆற்றாது, அழுது கண்ணீர் வடித்துக் கொண்டே இருப்பான். அதன் முற்றிய நிலையில், அவன் பைத்தியக்காரனாகிவிடுவான். அந்நிலையில் சமுதாயத்திற்கும் நாட்டிற்கும் ஒரு 'சுமை'யாக அவன் அமைந்துவிடுவான்.

அவ்வாறானால், 'மனநலம் என்பது என்ன? அதை எப்படிப் பெறுவது?' என்னும் எண்ணம் நம் உள்ளத்தில் எழுவது இயற்கை. 'மனநலம் மன்னுயிர்க்கு ஆக்கம்' என வள்ளுவர் குறிப்பிடுகின்றார். மனநலம், மனத்தூய்மையையும் அதனால் உண்டாகும் மனவமைதியையும் பொறுத்து உண்டாவது. மனத்திலே அழுக்காறு, அவா, வெகுளி தோன்றாமல் காத்துக் கொள்ளுவோமானால், மனக்கவலை உண்டாகாது. மனக்கவலை இல்லையென்றால், மனவமைதி தானே வந்து அமையும்! இது, தனிமனிதன், தன்னுடைய உணர்ச்சிகளைக் கட்டிக்காத்துக் கொள்ளுவதால் பெறுவதாகும். ஆனால், பல சமயங்களில் மனிதன் புறச் சூழல்களால் தாக்கப்பட்டு, மனக்கலக்கம் அடைகிறான். அப்பொழுது மனத்தைக் கலங்காமல் காப்பதற்குரிய வழிகள் பல. அவற்றுள் தன்னுடைய துன்பத்தைப் பெரிதாகக் கருதாமல், சமுதாய

நலத்தைக் கருதிப் பணியாற்ற முயல்வது ஒரு வழியாகும். இதனைப் 'பிறருக்குப் பயன்பட வாழ முயல்வது' எனலாம்.

'பிறருக்குப் பயன்பட வாழ்தல்' என்பது நலமாக வாழ விரும்புவோர் கடைப்பிடிக்கும் நெறியாகும். நம்மைச் சார்ந்துள்ளவர்கள், ஊரைச் சேர்ந்தவர்கள், நாட்டைச் சேர்ந்தவர்கள் நலமாக வாழ்ந்தால்தான், நாமும் நலமாக வாழ இயலும் என்பதை நாம் உணரவேண்டும். தனி மனிதன் ஒருவன் தான் மட்டும், நலமாகவும் வளமாகவும் வாழ நினைத்தால், அது, தீவு ஒன்றில் தனித்துச் சிக்கி, அல்லற்பட்ட 'ராபின்சன் குரூசோ'வின் கதையாக முடியும். பிறருக்குப் பயன்பட வாழ்தலில், படிகள் பல உள்ளன. நம் உற்றார் உறவினருக்குப் பயன்பட வாழ்வது முதல்நிலை! நம் உயிருக்குயிராக உள்ள நண்பர்களுக்கு உதவியாக வாழ்வது இரண்டாவது நிலை! இவ்விரண்டாவது நிலைபற்றிப் பின்வரும் நாலடியார் பாட்டுச் சிறப்பாகப் பேசுகிறது. மிக நெருக்கமான நண்பன் ஒருவன் அவனுடைய மனக்குறையைத் தன் ஆருயிர்த் தோழனிடம் கூறி, அதைப்போக்குமாறு வேண்டினான். தோழனோ, நண்பனின் துயரை, துன்பத்தை, நோயைப் போக்குவதற்குச் சிறிதும் முயலாது வாழுகிறான். இதைக்காணுகின்ற சமண முனிவர். "நண்பனின் நோயை – மனக்குறையைப் போக்க முயலாமல் வாழ்வதைக் காட்டிலும் பக்கத்திலுள்ள மலையின் மீது ஏறிக்கீழே குதித்துத் தற்கொலை செய்து கொள்ளுவது நல்லது" எனச் சொல்லுகிறார்.

இனியார்தந் நெஞ்சத்து நோயுரைப்ப வந்நோய்
தணியாத வுள்ள முடையார் - மணிவரன்றி
வீழும் அருவி விறன்மலை னன்னாட!
வாழ்வின் வரைபாய்தல் நன்று **(369)**

என்பது நாலடியார் உணர்த்தும் நல்லறம்.

இப்பாடல், நட்பின் மாட்சியை நயம்பட எடுத்துரைக்கிறது. உடை நெகிழ்ந்தவனுடைய கை, உடனே உதவிக்காப்பது போல, நண்பனுக்குத் துன்பம் வந்தால், அப்பொழுதே சென்று துன்பத்தை நீக்குவது நண்பனின் கடமை. நண்பன் ஒருவன், தன் துன்பத்தை வாய்விட்டுச் சொல்லியும் மற்றொரு நண்பன், அதைப்போக்க முயலாது அமைதியாக அதைப் பார்த்துக்கொண்டு இருப்பது கொடுமை! இவ்வாறு இருப்பதைவிட தற்கொலை செய்து கொண்டு சாவது நல்லது. 'வாழ்ந்தால் பிறருக்குப் பயன்பட வாழவேண்டும்! இல்லையென்றால் சாகவேண்டும்' எனும் அறநெஞ் சத்தினுடைய சீற்றத்தின் எதிரொலியை, இந்நாலடியார் பாட்டில் நாம் கேட்கின்றோம்.

இத்தகைய நயமிகு நல்லறங்கள், நாட்டு வாழ்க்கைக்கும் வீட்டு வாழ்க்கைக்கும் நலம் பயக்கும் அறவுரைகள் நாலடியாரில் நிறைய உள்ளன. இதனால்தான், திருக்குறளை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்த ஜி.யூ. போப், நாலடியாரையும் முழுமையாக ஆங்கிலத்தில் தந்துள்ளார்.

பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் நாலடியார், திருக்குறளுக்கு அடுத்த இடத்தைப் பெற்றுள்ளது. இது சமண சமயச் சார்பான நூல். எனினும், நாலடியார் உணர்த்தும் அறங்கள் யாவும், அன்றாட வாழ்க்கையில் மனிதன் கடைப்பிடித்து ஒழுகக் கூடியனவாகவே உள்ளன. நாலடியார், இலட்சிய நோக்கில் நடைமுறைக்கு ஒவ்வாத அறிவுரைகளைப் போதிக்கவில்லை. மனிதன் மனிதனாக வாழவதற்கு, அன்பும் பண்பும் நிறைந்ததாக வாழ்க்கையை அமைத்துக்கொள்ளுவதற்கு, நாலடியார் காட்டும் நல்லறம் என்றும், எப்பொழுதும் உறுதுணையாக விளங்கும்.

3

இளங்கோ கண்ட இயற்கை

தமிழ் கூறும் நல்லுலகத்தில், பெண்ணின் பெருமையைப் பேசுவதற்கு முன்வந்த முதற்பெரும் பாவலர் இளங்கோ! அறத்தின் ஆற்றலை அவனிக்கு அறிவுறுத்திய அறவோர் இளங்கோ! ஊழ்வினையின் பேராற்றலை மக்கள் உள்ளத்தில் ஆழப்பதியுமாறு செய்த மெய்யுணர்வாளர் இளங்கோ!

அவர் இயற்றிய முத்தமிழ்க் காப்பியமாகிய சிலப்பதிகாரம் ஒரு கலைக்கருவூலம். அதில் இளங்கோவடிகளின் கற்பனைத்திறனும், கலையுணர்வும், நுண்மாண் நுழைபுலனும் சிறந்த முறையில் இணைந்தும் இழைந்தும், கலந்தும் கரந்தும் உறவாடுகின்றன.

இயற்கை

இயற்கை இன்பத்தின் இருப்பிடம்; அழகின் பிறப்பிடம்; கருத்தின் உறைவிடம்; கற்பனையின் ஊற்று; கலைஞரின் காதல் கருவூலம்; அறவோர்க்கு உள்ளொளி ஊட்டும் அறிவுச் சுடரொளி! எனப் பலவாறாக, இன்று நாம் அதை விளக்கியுரைக்கலாம். சங்ககாலச் சான்றோரான நக்கீரர் பெருமான், 'கைபுனைந்து இயற்றாக் கவின் பெறுவனப்பே' இயற்கை என்று எடுத்தியம்பியுள்ளார்.

'இயற்கை' எனும் தமிழ்ச்சொல்லினை, 'இயல்', 'கை' என்னும் இரண்டு சொற்களாக நாம் பகுக்கலாம். 'இயல்' என்னும் பகுதிக்கு, 'சாயல்', 'நடை'[1] என்பன பொருளாகும். 'கை' எனும் சொல்லிற்கு 'ஒழுக்கம்' என்பது பொருளாகும்[2] இதனோடு வேறு சில பொருள்களும் 'கை' எனும் சொல்லிற்கு உண்டு என்பதைப் பிங்கல நிகண்டு எடுத்துரைக்கிறது:

ஒப்பனை படையுறுப் பொழுக்கஞ் சிறுமை
கரமும் பின் பிறந் தாளுங் கையே **(பிங்க.3429)**

*இவ்வறுவகைப் பொருளுள் **ஒப்பனையும், ஒழுக்கமும் இயல்பாக அமைந்த நிலையே, இயற்கை** என்பது புலனாகின்றது.*

---

1. இயலே சாயல் நடை என்றாகும் (திவாகரம், பக்.245).
2. (திவாகரம், பக்.187).

இவ்வியற்கையின் எழிலில் ஈடுபடாத புலவர்களே உலகில் இல்லை! கவிஞரின் கற்பனை இரண்டு அரங்குகளில் களிநடம் புரிகிறது. ஒன்று மனித அரங்கு; மற்றொன்று இயற்கை அரங்கு. ஒன்று நாடக மேடையாக அமைகிறது; மற்றொன்று அம்மேடையில் நடிகராக உயிர்பெற்று எழுகிறது.

'இயற்கையை இயற்கையழகின் இன்பத்திற்காகவே', சிறப்பித்துப் பண்டைத் தமிழ்ப்புலவோர் பாடவில்லை! இயற்கை அழகை வாழ்க்கைப் போருக்குப் பயன்படுத்திப் பாடும் முறையே, அவர்கள் போற்றிய இலக்கிய நெறியாகும்.

வாழ்க்கை இருவகைப்படும். அவை அக வாழ்க்கை, புறவாழ்க்கை என்பனவாகும். புறவாழ்க்கையைப் போற்றிப் பாடுவதே பெருவழக்கு. ஆனால், பண்டைத் தமிழ்ச் சான்றோர்கள், இதற்கு ஒரு விதிவிலக்கு. அவர்கள் பெரிதும் மனித உள்ளத்தின் நுட்பமான உணர்ச்சிகளை நுனித்து அறிந்து, அவற்றின் வன்மை மென்மைகளை இல்வாழ்க்கையோடு – அக வாழ்க்கையோடு – இணைத்து எழிலோவியம் ஆக்கியுள்ளனர். நாகரிக வளமும், அமைதியும் பெற்று வாழ்ந்து வந்த ஓரினத்து மக்களுக்குக் 'கலை' என்பது பெரும்பாலும் அகவாழ்க்கையைப் பற்றி அமைவது இயல்பு. இக்காரணம் பற்றியே, அவர்கள், காதல் ஒழுக்கமாகிய உரிப்பொருளைப் பாட்டின் உயிராகக் கொண்டனர். இயற்கையும் இயற்கையோடு இயைந்த வாழ்க்கையுமாகிய முதற்பொருளையும் கருப்பொருளையும் பாட்டின் உடலாகக் கொண்டு அவர்கள் போற்றினர். "பழந்தமிழ்ப் பாட்டுக்களில் இயற்கைக்கு முதலிடம் இல்லை; வாழ்க்கைக்கே முதலிடம் அமைந்துள்ளது. ஆயின், அவ்வாழ்க்கையை விளக்குவதற்கு இயற்கை பல்வேறு வகையாகத் துணைசெய்து அடுத்த இடம்பெறுகிறது. வாழ்க்கை பாட்டின் உயிராக நிற்பினும், வாழ்க்கையும் இயற்கையும் பிணைத்து, பிரிக்க முடியாமல் ஒன்றி நிற்றலையும் நாம் இங்குக் காணுகின்றோம்."[3]

அடிகளின் இயற்கை ஈடுபாடு

சங்ககாலச் சான்றோர்களை அடியொற்றியே, குணவாயிற் கோட்டத்து அரசு துறந்திருந்த இளங்கோவடிகளும், இயற்கையை மக்கள் வாழ்க்கைக்குப் பின்னணியாகக் கொண்டு பல சொல்லோவியங்களைத் தீட்டியுள்ளார். இளங்கோவின் இயற்கை அறிவு, தெளிவும் நிறைவும் பெற்று விளங்குகிறது. அவர் 'மலரிடையே உலவியும் தென்றலில் தவழ்ந்தும், பறவைகளிடையே பறந்தும், ஆற்றிலும் ஊற்றிலும் குடைந்து நீராடியும் மலையிடை இவர்ந்தும் கடலிடை

3. வரதராசனார், மு., பழந்தமிழ் இலக்கியத்தில் இயற்கை, பாரி நிலையம், சென்னை, 1964, பக்.46.

நீந்தியும் இன்னோரன்ன செயல்களால் இயற்கையின் ஒவ்வொரு நுட்பத்தையும் ஆங்காங்கே குறிப்பெடுத்துக் கொண்டு சென்றாரோ?' என வியப்புடன் நினைக்கும் அளவிற்குச் சிலப்பதிகாரத்தில் இயற்கையின் எழிலோவியங்களைச் சித்திரித்துள்ளார்.

இலக்கணமும் இயற்கையும்

தமிழ் இலக்கியத்தின் முதற்பெருந் திறனாய்வாளர் தொல்காப்பியராவர். கூத்தர்கள் நாடக மேடை அமைத்து, அதனிடத்துப் பல வண்ணத்திரைகள் விரித்து, அவ்வரங்கின்கண் வேடந்தாங்கித் தோன்றி, ஒருவருக்கொருவர் வினாவும் விடையுமாய் உரையாடல் நிகழ்த்திக் காண்போரை மகிழ்விப்பதைப்போல, புலவனும், முதல், கரு, என்னும் இயற்கைப்பொருள்களினால் காலமும் இடனும் ஆகிய அரங்கினைப் படைத்து, அதில் 'மனித வாழ்க்கை' எனும் நாடகத்தைத் தன் கற்பனைத் திறனால் நடித்துக்காட்டுகின்றான். இம்முறையினைப் பொருள் இலக்கணமாகத் தொல்காப்பியர் விரித்துரைத்துள்ளார்.

நிலமும் (இடம்), பொழுதும் முதற்பொருளின் பாற்படும். உலகினை 'நானிலம்' என்பது பண்டைய வழக்கு. மலையும் மலைசார்ந்த பகுதியும் குறிஞ்சி நிலம்; காடும் காடு சார்ந்த பகுதியும் முல்லை நிலம்; ஆற்றுவெளியும் வயல் நிலமும் நிறைந்த பகுதி மருதநிலம்; கடலும் கடலைச் சார்ந்த பகுதியும் நெய்தல் நிலம். இந்நால்வகை நிலங்களைக் கொண்டது உலகம். எனவே, உலகினை 'நானிலம்' என்பர். ஐந்தாவதாகப் 'பாலை' என்றொரு நிலத்தைக் குறிப்பிடுவர். தமிழகத்தைப் பொறுத்தமட்டில் 'பாலை' என்றொரு தனி நிலம் கிடையாது. கதிரவன் வெப்பத்தால் மலைப்பகுதியும், காட்டு நிலமும் பாழ்பட்டுப் பொட்டல் காடாக மாறுவதனால் தோன்றுவதே 'பாலை' நிலம். இதனை,

> **முல்லையும் குறிஞ்சியும் முறைமையில் திரிந்து**
> **நல்லியல் பிழந்து நடுங்குதுய ருறுத்துப்**
> **பாலை என்பதோர் படிவம் கொள்ளும்** **(சிலப்.11:64-66)**

என்று இளங்கோவடிகள் அறிவிக்கின்றார். இது அவருடைய இயற்கை அறிவின் திறத்திற்கு ஓர் உரைகல்லாகும்.

காப்பியப் பகுப்பில் கவினார் இயற்கை

சிலப்பதிகாரத்துள் முப்பது காதைகள் உள்ளன. அவற்றுள் காடுகாண்காதை, நாடுகாண்காதை, ஊர்காண்காதை என்னும் மூன்றும் நேரடியாக நிலத்தினை நிலைக்களனாகக் கொண்டவை.

இவற்றிற்கு அடுத்தநிலையில் வேட்டுவ வரி, ஆய்ச்சியர் குரவை, குன்றக்குரவை என்னும் மூன்று காதைகளும் முறையே, பாலை, முல்லை, குறிஞ்சி நில இயல்புகளைப் படம்பிடித்துக் காட்டுகின்றன. 'காட்சிக்காதை' என்னும் பகுதியில், மலைவளத்தின் (குறிஞ்சி நிலத்தின்) மாட்சியை, அடிகள் ஓடும் திரைப்படமாக்கிக் காட்டியுள்ளார்.

கண்ணகியை அழைத்துக்கொண்டு, இரவோடு இரவாக மதுரை மாநகரை நோக்கிக் கோவலன் புறப்படுகின்றான். இவ்விருவரோடு கவுந்தியடிகள் வழித்துணையாக வந்து சேருகின்றார். அவர்

காடு இடையிட்ட நாடுநீர் கழிதற்கு
அரிது; இவள் செவ்வி அறிகுநர் யாரோ? **(1053-54)**

என்று கண்ணகிக்காகப் பரிவு கொள்ளுகிறார். மதுரை செல்லும் வழியின் அருமைபற்றிக் கவுந்தியடிகள் விரித்துரைக்கின்றார். அந்நகருக்குச் செல்வதற்குரிய மூன்று வழிகளின் இயல்புகளை அவர் கூறுகிறார். சோலையும், தோட்டமும் நிறைந்த வழியில் செல்லுவதன் சிக்கலையும், பிற வழிகளின் இயல்பையும், காவிரி ஆற்றின் ஒலியும், பறவைகளின் ஓசையும், உழவரின் ஒலியும், பாட்டும் நாட்டின் உயிர்ப் பொலியாகப் பிரதிபலிப்பதை கவுந்தியடிகளின் வாயிலாக ஆசிரியர் தெரிவிக்கின்றார்.

முதற்பொருளில் முன் நிற்பது

முதற்பொருளில் முன் நிற்பது இடம். இடம் என்பது நாட்டினைக் குறிக்கும். நாட்டு அமைப்பும் அதன் வளமார் சிறப்பிற்குரிய ஆறுகளையும் பாடுவது கவிமரபு. காவிரியாற்றின் அருமை பெருமைகளையும், அவ்வாற்றினால் வளங்கொழிக்கும் சோழநாட்டின் செழிப்பையும் சிறப்பையும்,

கரியவன் புகையினும் புகைக்கொடி தோன்றினும்
விரிகதிர் வெள்ளி தென்புலம் படரினும்
கால்பொரு நிவப்பின் கடுங்குரல் ஏற்றொடும்
சூல்முதிர் கொண்மூப் பெயல் வளம்சுரப்ப,
குடமலைப் பிறந்த கொழும் பல்தாரமொடு
கடல்வளன் எதிரக் கயவாய் நெரிக்கும்
காவிரிப் புதுநீர்க் கடுவரல் வாய்த்தலை
ஓ இறந்த ஒலிக்கும் ஒலியே அல்லது

ஆம்பியும் கிழாரும் வீங்கிசை ஏத்தமும்
ஓங்குநீர்ப் பிழாவும் ஒலித்தல் செல்லா
பல்வேறு குழுஉக்குரல் பரந்த ஓதையும் (10:102-118)

என்று இளங்கோவடிகள் வருணித்துள்ளார்.

'காட்சிக்கதை' என்னும் பகுதியில், மலைப்பக்கத்தில் எழும் பல்வேறு ஓசைகளை,

குன்றக் குரவையொடு கொடிச்சியர் பாடலும்
வென்றிச் செவ்வேள் வேலன் பாணியும்
தினைக்குறு வள்ளையும் புனத்து எழுவிளியும்
நறவுக்கண் உடைத்த குறவர் ஓதையும்
பறையிசை அருவிப்பயம் கெழும் ஓதையும்
கலிகெழு மீமிசைச் சேணோன் ஓதையும்
பயம்பில் வீழ்யானைப் பாகர் ஓதையும்
இயங்குபடை அரவமொடு யாங்கணும் ஒலிப்ப (25:24-32)

என்று இழுமெனும் ஒலிநயத்தோடு நம் காதிலும் அவற்றை ஒலிக்குமாறு அவர் செய்துள்ளார்.

பருவகாலமும் பொழுதுகளும்

முதற்பொருளுள் இரண்டாவது இடத்தைப் பெறுவது 'பொழுது' என்பதாகும். பொழுதினை இருவகையாகப் பாகுபடுத்துவர். அவை பெரும்பொழுது, சிறுபொழுது என்பன. ஓர் ஆண்டின் அறுவகைப் பருவத்தினைப் 'பெரும்பொழுது' என்றும், ஒரு நாளின் ஆறு பகுதிகளைச் 'சிறுபொழுது' என்றும் போற்றுவது பண்டைத்தமிழ் மரபாகும். இன்றமிழ்க் காப்பியம் இயற்றிய இளங்கோவடிகள், இவ்வறுவகைப் பொழுதுகளையும் மிகச்சிறந்த முறையில் காப்பியச் சுவை நலம் கனியுமாறு பயன்படுத்தியுள்ளார்.

கோவலன் மதுரை மாநகரின் புறத்தேயுள்ள புறஞ்சிறை மூதூரில், கவுந்தியடிகளையும் கண்ணகியையும் தங்கச் செய்கிறான். அவன் மட்டும், மதுரை நகருக்குச் செல்லுகின்றான். அப்பொழுது மதுரை மாநகரத்து மங்கையர் அறுவகைப் பருவத்தில் தாம் பெற்ற இன்பத்தினை நீடு நினைந்து 'அந்த நாளும் வந்திடாதோ?' என்று எண்ணி யேங்கும் காட்சியை, அடிகள் படம்பிடித்துக் காட்டுகிறார். அப்பருவங்களின் இயல்பையும், அவற்றால் மக்களின் எண்ணத்தில் உண்டாகும் எழுச்சியையும், இதயத்தில் உண்டாகும் மலர்ச்சியையும் அவர் புனையா ஓவியமாகப் புனைந்துரைக்கின்றார்.

ஏங்க வைக்கும் இளவேனில்

இளவேனிற் பருவம் இயற்கைக்கு எழிலூட்டுவது. 'அழகிற்கோர் அழகு செய்வதை'ப் போன்று இயற்கை அன்னை, பொலிவு பெற்று ஒளிருமாறு செய்வது இளவேனில்! எங்கும், எதிலும், இளமையும் புதுமையும் இணைந்து மிளிரும் காலம் அது! மதுரை மாநகருக்கு வந்த இளவேனில் பருவம், ஏரும் எழிலும் வாய்ந்தது; கொத்துக் கொத்தாகப் பூக்கும் மாதவிக் கொடிகள் மணம் வீசிப் பரவின; காவும் கானமும் நறுமலர்களை ஏந்தின; தென்னவன் பொதியமலைப் பிறந்த தென்றலோடு அம்மலர்களின் மணமும் கலந்து, அம்மன்னவனின் கூடல் நகரில் புகுந்தன! அங்குக் கூடி இன்புறும் காதலர்களைத் தழுவி மகிழ்வுறுத்தின! இத்தகைய 'இன்களி மகிழ்நகை' யூட்டும் "இனிய இளவேனிலான்' வேறெங்கே உள்ளான்?" என்று காதல் மகளிர் எண்ணியேங்குகின்றனர்.

கோதை மாதவி கொழுங்கொடி யெடுப்பக்
காவும் கானமும் கடிமலர் ஏந்தத்
தென்னவன் பொதியில் தென்றலொடு புகுந்து
மன்னவன் கூடல் மகிழ்துணை தழுஉம்
இன்னிள வேனில் யாண்டுளன் கொல்? என்று
உருவக் கொடியோர் உடைப்பெரும் கொழுநரோடு
பருவம் எண்ணும் படர்தீர் காலை **(14:113-119)**

என்பது இளங்கோவடிகள் காட்டும் இளவேனிற் பருவத்தின் எழிலோவியமாகும்.

இதைப்போன்றே, பிற பருவங்களையும் கற்பனை வளஞ் சிறக்க கவிஞரேறு பல கோணங்களில் மக்கள் வாழ்க்கையோடு இணைத்துக் காட்டுந்திறன் வியப்பூட்டுவதாகும்.

மயக்கும் மாலை

ஒரு நாளின் பல்வகைப் பிரிவுகளுள், மாலைப் பொழுது மாண்புமிக்கது. 'மயக்கும் மாலை' என்று பாராட்டப்படுவது அது! பிரிந்த காதலரின் உள்ளத்தையும் உயிரையும், உணர்வையும் அறிவையும் மயங்கச் செய்யும் பேராற்றல் வாய்ந்தது அது! அம்மாலைப் பொழுதைச் சேரநாட்டுச் செம்மல் கலையுணர்வு என்னும் எழுதுகோலைக் கொண்டு, கற்பனை எனும் வண்ணத்தில் தோய்த்து, மொழியெனும் கிழியில் சோகமே வடிவமான சித்திரமாக வரைந்துள்ளார்.

கதிரவன் மறைந்தனனே! காரிருள் பரந்ததுவே!
எதிர்மலர் புரையுண்கண் எவ்வநீர் உகுத்தனவே!
புதுமதி புரைமுகத்தாய்! போனார் நாட்(டு) உளதாங்கொல்?
மதியுமிழ்ந்து கதிர்விழுங்கி வந்தவிம் மருள்மாலை! (7:41)

இப்பாட்டு, காதலனைப் பிரிந்த காதலியின் உள்ள வேதனையையும் ஏக்கத்தையும், அவளுக்கு மாலைக் காலத்திடத்து உண்டான வெறுப்புணர்ச்சியையும் ஒருங்கே வெளிப்படுத்துகின்றது. "கதிரவனை விழுங்கி, மதியினை வெளியே உமிழ்ந்த இம்மயக்கும் மாலை, அவர் போயிருக்கும் நாட்டிலே வருவது இல்லையா?" என்று தோழியைப் பார்த்துத் தலைவி வினவும் நிலையில், நாம் அவளுடைய உள்ள வேதனையை உணருகின்றோம்.

இம்மாலைப் பொழுதினை, 'அந்திமாலைச் சிறப்புச் செய்காதையில்' புலவர் பெருமான், வேறு வகையாக விரித்துரைக்கும் பாங்கும் இங்குக் குறிப்பிடத்தக்கதாகும்.

மாலை நேரம் மதியை மயக்குவது; இளமைத் துடிப்புமிகு காதலர் உள்ளத்தைக் கரைந்துருகச் செய்வது; அத்தகைய நிலையில் காமன், இருவகையான மயக்கங்களைக் காதலருக்கு உண்டாக்குகிறான். தம்முள் கூடினார் இன்பத்திலே திளைத்து, அதன் காரணமாக மயங்கி நிற்கின்றனர். இது ஒருவகை மயக்கம். காதலரைப் பிரிந்தமையால் காதலாகிக் கசிந்துருகிக் கண்ணீர் மல்கிக் கருத்தழிந்து நிற்போர் மற்றொரு வகையான மயக்கத்திற்கு ஆட்பட்டவராவர். கோவலனோடு உள்ளத்தாலும் உடலாலும் கூடியிருந்த மாதவியும், அவனால் கைவிடப்பட்டு மனம் கலங்கிய கண்ணகியும், ஒருநாள் மாலைப்பொழுதிலே இருந்த இருவேறு விதமான மயக்கநிலைகளை 'அந்திமாலைச் சிறப்புச் செய் காதையில்' இளங்கோவடிகள் விளக்குகிறார். 'அம் மாலைக் காலம் எவ்வாறு வந்தது?' என்பதை, அவர் இனிது எடுத்துரைக்கின்றார். நிலமாகிய காதலி, கதிரவனாகிய தன் காதலனைக் காணாது, கண்ணீர் சிந்திக் கதறியழும் காட்சியாக அதை அவர் காட்டுகிறார்.

விரிகதிர் பரப்பி உலகமுழு தாண்ட
ஒருதனித் திகிரி உரவோற் காணேன்
அங்கண் வானத்து அணிநிலா விரிக்கும்
திங்களஞ் செல்வன் யாண்டுளன் கொல்லெனத்
திசைமுகம் பசந்து செம்மலர்க் கண்கள்
முழுநீர் வாரா முழுமையும் பனித்துத்
திரைநீ ராடை, இருநில மடந்தை
அரைசு கெடுத்து அலம்வரு அல்லற்காலைக்

.....

தாழ்துணை துறந்தோர் தனித்துயர் எய்தக்
காதலர்ப் புணர்ந்தோர் களிமகிழ் வெய்தக்...
மல்லல் மூதூர் மாலை வந்திறுத்தென **(4:1-20)**

என்பது இளங்கோவடிகளின் ஏற்றமிகு வருணனை.

கருப்பொருள் காட்டும் கற்பனைவளம்

கருப்பொருள் என்பது ஒரு நிலத்தில் கருக்கொண்டு எழும் இயற்கைப் பொருளாகும். அது பதினான்கு வகைப்படும். அவற்றுள் காப்பியப் புலவர்களால் பெரிதும் போற்றப்படுவது ஆறு. சோழ நாட்டின் வளத்திற்கு உயிர் நாடியாக இருந்து வருவது காவிரியாறு.

அவ்வாற்றின் இரு பக்கமும் வண்டுகள் மிகுதியாக ஆரவாரம் செய்கின்றன; அழகிய பூவின் ஆடையைப் போர்த்திக் கொண்டு, கயல்மீன்களாகிய கண்களினால் விழித்து நோக்கிப் பைய நடந்து செல்லுகிறாள் காவிரி மடந்தை. அதன் இரு கரைகளிலும் பூக்கள் மலிந்த சோலைகள் உள்ளன. அச்சோலைகளில் வண்ண மயில்கள் வான்முகிலைக் கண்டு மகிழ்ந்தாடுகின்றன: கீதமினிய குயில்கள் தாமே ஆர்வத்தோடு இசைபாடுகின்றன; ஆற்றின் மீது படிந்துள்ள பூக்கள் கவர்ச்சிமிக்க வண்ணப் பூமாலையாக அருகில் அசைந்து செல்லுகின்றன. இவ்வெழில்மிகு இயற்கைக் காட்சியை,

மருங்கு வண்டு சிறந்தார்ப்ப
மணிப்பூ வாடை யதுபோர்த்துக்
கருங் கயல்கண் விழித்தொல்கி
நடந்தாய் வாழி காவேரி!...
பூவர் சோலை மயிலாலப்
புரிந்து குயில்கள் இசைபாட
காமர் மாலை அருகசைய
நடந்தாய் வாழி காவேரி **(7:25-26)**

என்று அவர் சித்திரித்துள்ளார்.

இங்குக் 'காவிரி ஆற்றினை'க் கவிஞர் இளங்கோவடிகள், கலையரசி மாதவியின் மனப்போக்கிற்குக் கருத்தூற்றம் தருகின்ற கவின்மிகு காரிகையாகப் படைத்துள்ளமை, நம் சிந்தைக்கினிய விருந்தாகும். மானிட உணர்ச்சியின் சாயல்களைக் கொண்டே, இயற்கை புனையப்படுகிறது என்பர் திறனாய்வாளர். இங்கு மாதவியின் உள்ளத்தே குமுறியெழும் உணர்ச்சிகள், மிக விரைவாக

எதிரொலிக்கின்றன. தன் ஆருயிர்க்காதலன், தன் மீது வீணாக ஐயுறவு கொண்டுவிட்டானே என்று அப்பெண்ணின் உள்ளம் வெதும்புகிறது! தான் ஒரு பாவமும் அறியாதவள் என்பதையும், கற்பு நெறியிலிருந்து தவறாதவள் என்பதையும் அவனுக்கு அறிவுறுத்தத் துடிக்கிறது அவன் உள்ளம்!

அந்நிலையில், தன்னுடைய உணர்ச்சிகளைக் காவிரிப் பெண்ணின் மீது ஏற்றிக்கூறி, 'தன் உண்மைநிலையென்ன?' என்பதை மெய்ப்பிக்க அவள் முயலுகிறாள். அதற்குரிய கருவியாகக் காவிரியை அவள் பயன்படுத்திக் கொள்வதை அடிகள் குறிப்பாகப் புலப்படுத்துகிறார்.

இக்கானல்வரிப் பாடல்களில், மாதவியின் வாழ்க்கைக்குப் பின்னணியாகவே, இயற்கை அமைக்கப்பட்டுள்ளது. பொதுவாக மானிடரின் காதல் உணர்ச்சிகளைக் கருத்தோவியங்களாகப் பதிவு செய்வதற்கு, மிகச்சிறந்த பின்னணியாக அமைவது இயற்கைக் காட்சி என்னும் உண்மை இதனால் தெரிகிறது.

மதுரை மாநகரினைப் பொலிவுறச் செய்வது வையை ஆறு. ஒரு பெண்ணாக அதை ஆசிரியர் உருவகப்படுத்தியுரைக்குந் திறன், அவருடைய கற்பனையாற்றலுக்கு மணிமுடி கவித்தாற்போலப் பொலிவுறுகிறது.

வையையின் இருமருங்கிலும் கோட்டுப் பூக்களும், கொடிப்பூக்களும் எங்கும் கலந்து ஒளிருகின்றன. அதன் உயர்ந்த இரு கரைகளும் மலர்க்கோவையாகிய மேகலைத்தவழும் இடையினைப் போன்று அழகுறத் தோன்றுகின்றன. கரையிலிருந்து உதிர்ந்த முள் முருங்கை மலர்கள், அவளுடைய செவ்விதழ்களாக விளங்குகின்றன. முல்லை மலர்கள் அணிநகை காட்டுகின்றன. நீரில் ஓடும் கருங்கயல், அவளுடைய கருவிழிகளாக மின்னுகின்றன. கரையோரத்தில் ஒதுங்கியுள்ள கருமணல்கள் அவளுடைய நீண்ட நெடுங்கூந்தலாக விளங்குகின்றன.

உலகுபுரந்து ஊட்டும் உயர்பேர் ஒழுக்கத்துப்
புலவர் நாவில் பொருந்திய பூங்கொடி
வையை என்ற பொய்யாக் குலக்கொடி **(13:168-170)**

இவ்வாறு வையை ஆறு, ஒரு பெண் கொடியாகக் காட்சி தருகிறாள்!

இக்காலத்தில் பெரியாறு எனப்படுவது, அக்காலத்தில் 'பேரியாறு' என்று வழங்கியது. அது இயற்கை அழகுவாய்ந்த இனிய காட்சியை நல்கியது. இதனை,

பெருமால் களிற்றுப் பெயர்வோன் போன்று
கோங்கம் வேங்கை தூங்கிணர்க் கொன்றை
நாகம் திலகம் நறுங்கா ழாரம்
உதிர்பூம் பரப்பின் ஒழுகுபுனல் ஒளித்து
மதுகரம் ஞிமிறொடு வண்டினம் பாட
நெடியோன் மார்பி லாரம் போன்று
பெருமலை விலங்கிய பேரியாற்று... **(25:16-22)**

என்று இளங்கோவடிகள் பாராட்டியுள்ளார்.

இளங்கோவடிகளின் இயற்கை ஈடுபாடும், கலையுணர்வும் இணைந்து கற்பனைத் திறனாக இயங்குகின்றன. இந்நிலையில் 'செஞ்சொற் கவியின்பம்' பயக்கும் சொற்சித்திரங்களும், ஊற்றமிகு கருத்துகளை உள்ளத்தில் பதியவைக்கும் கருத்தோவியங்களும் காப்பியத்திற்கு, ஏற்றமும் எழிலும் ஊட்டும் வகையில் ஏறுநடை போடுகின்றன.

4

நடு ஆசியாவின் நல்லறிஞர்

அபு–அல்–ரகியான் முகம்மது இபின்–அகமது அல்–புருனி, நடு ஆசியாவின் தலைசிறந்த அறிஞராவர். அறிவுலகப் பேரறிஞர்கள் இடையே, அவருக்கு ஒரு தனி இடம் உண்டு. அவ்வறிஞர்களுடைய மரபுரிமை எச்சத்தோடு, நாம் முழுமையாகத் தொடர்பு கொள்ளுகின்ற பொழுது, நம்முடைய மதிப்பு தொடர்ந்து வளர்ந்து கொண்டே செல்லுகிறது.

அல் – புருனியின் ஆளுமை

*நூறு ஆண்டுகளுக்கு முன்னர், ருஷிய மொழியில் அல்–புருனியின் **பண்டைய நாட்டினங்களின் காலவரன்முறை** என்னும் நூல் வெளியிடப்பட்டது. அப்பொழுது, அவருடைய அறிவுத்திறனின் சுடர்களுள் ஒன்றே பளிச்சிட்டு மின்னியது; இடைக்கால வரலாற்றாசிரியர்களுள் தலைசிறந்தவர் அவர் என்பதும் புலனாயிற்று. ஆனால், அவருடைய நூல்கள் மிகுதியாகக் கண்டுபிடிக்கப்பட்ட பிறகு, அவருடைய மதிப்பு மக்களிடையே உயர்ந்தது. அவருடைய கணித நூல், நில நூல், வானநூல் முதலியன பிறகு கண்டுபிடிக்கப்பட்டன; மிக ஆழ்ந்து அவற்றைக் கற்பது பெருகியது. இதனால், தம்முடைய சம காலத்திய அறிஞர்களிடையே, அவர் பெருஞ்சிறப்புவாய்ந்த அறிஞராகக் காட்சி தருகிறார்.*

தம் காலத்தின் எண்ணப் போக்கிற்கு அல்–புருனி கட்டுப்படாதவர்; மிகவும் முற்போக்கான கருத்துகளைக் கொண்டிருந்தார். அவருடைய காலத்திய அறிஞர்களுள் மிகப்பெரும்பாலோருக்கு, அவருடைய புதுமையும் சிறப்பும் வாய்ந்த கண்டுபிடிப்புகள் புரிந்துகொள்ள இயலாதனவாக இருந்தன. உலகத்தின் சுற்றளவை அளப்பதற்கு, வியக்கத்தக்கதோர் எளிய வாய்பாட்டை, முதன்முதல் அவர் வகுத்தளித்தார். சூரியனைச் சுற்றி உலகம் சுழலுவது இயற்கையில் நிகழக்கூடியதாகவே அவர் கருதினார். புவியியல் ஊழிகள், ஒன்று மற்றொன்றைத் தொடர்ந்து தோன்றும் சுழல் வட்டமாகும் என்னும் கருத்தினை அவர் விளக்கியுரைத்தார். "காலம் செல்லச் செல்ல கடல் வறண்ட நிலமாகவும், வறண்ட நிலம் கடலாகவும் மாற்றமுறுகின்றன" என்று அவர் எழுதியுள்ளார் இந்த அறிவுநலமிக்க பொதுவிளக்கக்

கோட்பாட்டினை அடிப்படையாக் கொண்டு, பூமியின் புவியியல் வரலாறு பற்றிய தம் கொள்கையை அவர் விளக்கலானார்.

பதினோராம் நூற்றாண்டில், கீழை நாடுகளின் புலமைத்திறத்திற்கு, ஒரு பெருஞ் சின்னமாக அவர் விளங்குகிறார். இத்தகைய புகழினைத் தேடித்தந்த நூல்களை இயற்றித் தம், சமகாலத்திய அறிஞர்களைவிட காலத்தால் முற்பட்ட நோக்கும் போக்கும் உடையவராக அவர் விளங்குகிறார்.

தோற்றம்

நடு ஆசியாவில் அல்–புருனி பிறந்தார்; வளர்ந்தார். அங்குக் குவாரிசம் (Kwharizm) என்ற பகுதியில் சிறந்த பண்பாடு நெடுங்காலமாகப் புகழுற்று விளங்கியது. அங்கு அழகுமிகு அரண்மனைகளும், மசூதிகளும், மதராஸா எனப்பட்ட சமயக் கல்லூரிகளும் அணிசெய்த நகரங்கள் பல இருந்தன. இந்த வளமார்ந்த பழைய நாட்டில், அறிவியல் கலைகள் உயர்வாக மதிக்கப்பட்டன; போற்றி வளர்க்கப்பட்டன.

பத்தாம், பதினோராம் நூற்றாண்டுகளில் பாக்தாதின் அராபிய முஸ்லீம் உலகத் தலைமை (காலிபேட்) நலிவுற்றது. அதனுடைய சிதைவுகளின் மீது, பல புதிய அரசுகள் தோன்றின; புகழ்மிக்க நடு ஆசிய அறிஞர் குழாமும் உருப்பெற்றது. அக்குழுவில் அபு–நசர் அல்–பாரபியும், இபின் சின்னா (அவிசென்னா)வும் இடம்பெற்றிருந்தனர்.

இத்தகைய சூழ்நிலையில், குவாரிசத்தின் தலைநகரான காத் (Kath) எனும் நகருக்கு அருகில், கி.பி.973ஆம் ஆண்டு, செப்டம்பர் 4ஆம் நாள், அல்–புருனி பிறந்தார். "உண்மையில் என்னுடைய குடிவழியைப் பற்றித் திட்டவட்டமாக ஒன்றும் அறியேன். ஏனெனில், என்னுடைய பாட்டனார் யாரென்பதே எனக்கு உறுதியாகத் தெரியாது. என்னுடைய தகப்பனார் யாரென்பதை அறிய இயலாத நான், எவ்வாறு என்னுடைய பாட்டனார் யாரென்பதை அறிந்து கொள்ள முடியும்?" என்று தம்முடைய கவிதைகள் ஒன்றில் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இளமைப்பருவம்

இளமைப்பருவத்தில் நற்பேற்றின் காரணத்தால், கல்வியிற் சிறந்த கிரேக்கர் ஒருவர், அவருக்கு முதல் ஆசிரியராக வாய்த்தார். அந்தக் கிரேக்கரின் வேண்டுகோளுக்கு இணங்கி, இளமைத் துடிப்பு மிக்க அல்–புருனி செடிகள், விதைகள், பழங்கள் ஆகியவற்றைச்

சேகரித்தார். இப்பணி, இயற்கை அறிவியலில் அவருக்கு இருந்த ஆர்வத்தை மேன்மேலும் பெருகச் செய்தது.

அபு–நசர் மான்சூர் இபின்–அலி இபின்–இராக் என்பவர் அல்–புருனியின் வளர்ப்புத் தந்தையாவார். அவரை "மான்சூர்" என்று சுருக்கமாகச் சுட்டுவர். குவாரிசிய அரசகுடும்பத்தில் அவர் ஓர் உறுப்பினராவர். மற்றும் சிறப்புமிக்க கணிதநூல் வல்லுநராகவும், வானநூல் அறிஞராகவும் அவர் விளங்கினார். அவரே, யூக்ளிடின் ஜியோமிதியையும், தாலமியின் வான நூலினையும் அல்–புருனிக்கு அறிமுகம் செய்து வைத்தார். இதனால் வான நூலைக் கற்பதற்குத் தேவையான அடிப்படை அறிவினை அவ்விளைஞர் பெற்றார்.

தம்முடைய வாழ்க்கையின் இப்பகுதியைக் குறித்து "என்னுடைய வாழ்நாள்களுள் மிகப் பெரும்பாலானவை பரிசுகளும் சலுகைகளும் நிறைந்தனவாக அமைந்தன. அவை தொடர்ந்து பெருகிக் கொண்டு வரும் நற்பேற்றினைப் பெற்றேன்" என்று அல்–புருனி தெரிவித்துள்ளார். "இராக்கிய குடும்பத்தினர் தங்களுடைய பாலினை ஊட்டி என்னைப் பேணி வளர்த்தனர்; அவர்களுடைய மான்சூர் என்னைப் போற்றி வளர்ப்பதைத் தம்முடைய பணியாகவே கருதலானார்" என்று உருக்கத்துடன் அவர் குறிப்பிடுகிறார்.

விண்மீன்களையும் கனிப்பொருளையும் பற்றி அல்–புருனி கற்றார்; வானம், நிலவுலகம் ஆகியவற்றின் மறைபொருள்களைக் கண்டறிய, அவற்றை அவர் துருவித்துருவி ஆராய்ந்தார்; வரலாற்றின் பொருளாழத்தைக் கண்டறிய அவர் ஆயிரமாயிரம் புத்தகங்களைக் கற்றார். உலகத்தின் வடிவத்தை, அவர் ஓர் உருண்டை வடிவமாக அமைத்தார்; நடு ஆசியாவில் இந்தப் பணியை, முதன்முதல் செய்தவர் அல்–புருனியேயாவார். மற்றும் சிறப்புமிக்க கவிஞராகவும் அவர் விளங்கினார். ஆற்றல் மிகு சமனிட்டிய அரச மரபின் நிலை குலைந்த கடைசி ஆண்டுகளில், அவர் வாழ்ந்தார். கரகனிய, கஜனிய குறுநில மன்னர்களுடைய எழுச்சியையும் வீழ்ச்சியையும் அவர் கண்டார்.

அறிவுப்பணி

அவருடைய கையெழுத்துச் சுவடிகளில் சமுதாய மோதல்கள், குறுநிலமன்னரின் போர்கள், காட்டுமிராண்டிகளின் படையெடுப்புகள் ஆகியவற்றின் சுவடுகளை நாம் காணலாம். இவை வரலாற்றிற்கு அறிவியல் அடிப்படையாக அமைந்து உள்ளன. அவருடைய முதல் பெரும் நூலுக்குரிய கருவினைக் குவாரிசத்தில் அடிக்கடி உண்டான கொடிய சமுதாயப் புரட்சிகள் அமைத்துத் தந்தன. 'எவ்வாறு

சமுதாயம் மறுமலர்ச்சியுறுகிறது?' என்பதை அறியவே, அந்நூலில் அவர் கடந்த காலத்தை ஆராய்ந்துள்ளார்.

பதினோராம் நூற்றாண்டு பிறப்பதற்குச் சற்று முன்னர், தம்முடைய 27ஆம் வயதில், பண்டைய நாட்டினங்களின் கால வரன்முறை (Chronology of Ancient Nations) என்னும் நூலினை அல்–புருனி எழுதி முடித்தார். "பல்வேறு ஊழிகளின் காலகட்டத்தைத் திருத்தமாக நிலைநாட்டுவதே, இந்நூலினை எழுதுவதன் நோக்கமாகும்" என்று அவர் விளக்கியுள்ளார். மனித இன வரலாற்றின் பொழுது புலர் காலையில், அவருடைய ஆராய்ச்சி தொடங்குகிறது; பெருவெள்ளக் காலத்தை நோக்கி மெல்ல நகருகிறது; நெபுசட்நஸார், மாண்புமிகு அலெக்சாண்டர் ஆகியோரின் காலங்களில் மனித இனத்திற்குத் தெரிந்த செய்திகள் அனைத்தையும் தன்னகத்தே அந்நூல் கொண்டுள்ளது.

அந்நூலில், பல்வேறு நாள்காட்டி முறைகள் – அராபிய, கிரேக்க, பாரசீக நாள்காட்டி முறைகள் விளக்கப்பட்டுள்ளன. பண்பாடு, பழக்க வழக்கங்கள், ஒழுக்கமுறைகள் ஆகியவற்றின் வரலாற்றோடு, ஆட்சியாளர்கள், மாபெரும் வீரர்கள், அரசியல் நிகழ்ச்சிகள் முதலியன இடையிடையே பின்னிப் பிணைந்துள்ளன. பண்டைய நாட்டினங்களின் காலவரன் முறை எனும் நூலினை வெறும் வரலாற்றுப் படைப்பாக நாம் கருதலாகாது அந்நூலின் ஒரு பகுதி வரலாறாகவும், மற்றொரு பகுதி இனமரபியல் ஆராய்ச்சியாகவும் விளங்குகின்றன. இதனால்தான், இன்றுவரை பொன்றாப்புகழ் மிக்க நூலாக அது விளங்க முடிகிறது.

பண்டைய நடு ஆசியாவைப் பற்றிய தங்கள் ஆராய்ச்சிகளில் காலவரன்முறை என்னும் நூலினை, 1930களில் சோவியத் அறிஞர்கள் திரும்பத் திரும்பக் குறிப்பிட்டுள்ளனர். கி.பி.எட்டாம் நூற்றாண்டின் தொடக்க காலத்திய சோக்டியன் (Soghdian) பதிவேடுகளை ஆராய்ந்த அவர்களுக்கு, சோக்டியன் நாள் குறிப்பைப் பற்றிய விளக்கம் இன்றியமையாது தேவைப்பட்டது. அக்குறிப்பை அல்–புருனியின் நூலிலேயே அவர்கள் கண்டனர். இஸ்லாமியருக்கு முற்பட்ட குவாரிசத்தைப் பற்றிய செய்திகளை, அந்நூலினாலேயே அவர்கள் தெரிந்து கொண்டனர். அப்பொழுதுதான், தொல் பொருள் ஆய்வாளர் அதைப்பற்றி ஆராயத் தொடங்கி இருந்தனர்.

தங்கக்கோபுரத்தில் அமர்ந்து உலகை நோக்கும் அறிஞராக, அல்–புருனி விளங்கவில்லை. வாழ்க்கையின் பல்வேறு நிலைகளையும் பகுதிகளையும் சேர்ந்த மக்களை அவர் சந்தித்தார்; அவர்களுள் பலரை நன்கு அறிந்திருந்தார் உடனொத்த அறிஞர்களோடு மிக நெருக்கமான தொடர்பும் அவர் கொண்டிருந்தார். குவாரிசத்திலிருந்து

கி.பி.997இல், பொக்கராவில் வாழ்ந்த 17 வயதான அவிசென்னாவிற்கு, அல்–புருனி கடிதங்கள் எழுதியுள்ளார். அவற்றிலிருந்து இவ்விரு இளம் அறிஞர்களும் அரிஸ்டாட்டிலின் பௌதிகத்தையும் வானகத்து உள்ளனவற்றையும் குறித்துக் கலந்துரையாடியுள்ளனர் என்பதும், மேலும், பேரண்டத்தின் அமைப்பைப் பற்றியும், தடையின்றி விழும் பொருளின் பௌதிக விதிமுறையைப் பற்றியும், பகுக்கமுடியாத சிறுதுகள் (அணுக்கள்) பற்றியும் அவர்கள் ஆராய்ந்துள்ளனர் என்பதும் தெரியவருகின்றன. இத்தகைய கருத்துப்பரிமாற்றத்திற்கே வினாக்களும் விடைகளும் என்னும் தம்முடைய நூலினை, அல்–புருனி முழுமையாக ஒதுக்கியுள்ளார்.

பண்டைக் கிரேக்க மெய்யறிஞர்களிடம் அல்–புருனி பெருமதிப்புக் கொண்டிருந்ததை அவருடைய கட்டுரைகள் காட்டுகின்றன. மற்றும் இளைஞராயிருந்த போதிலும், அறிவியலில் முதிர்ச்சி வாய்ந்த மனிதராக அவர் விளங்கியதையும் அவை தெரிவிக்கின்றன. கி.பி.1010ஆம் ஆண்டில் ஆல்–மாமுன் (al-Mamun) கலைக்கழகத்தில் அவர் சேர்த்துக்கொள்ளப்பட்டார். புகழ்மிக்க அறிஞர் குழுவினர் அக்கழகத்தை அணி செய்தனர். அக்குழுவில் மெய்யறிவாளரும் இயற்கை அறிவியல் அறிஞருமான அவிசென்னாவும், வரலாற்றறிஞரும் மெய்யறிவாளருமான இபின்–மஸ்காவாயும் (Ibn Masawayh), கணித வல்லுநரான அபிநசர் அர்ராவும் இடம்பெற்றிருந்தனர்.

அந்தக்காலத்தில், ஐரோப்பிய இயற்கை அறிவியல், வளர்ச்சியின்றித் தேக்கநிலையை அடைந்திருந்தது; அச்சமயத்தில், குவாரிசத்திலிருந்த அறிஞர்கள் வகுத்த வழியில் அவர்கள் மும்முரமாக முன்னேறிக் கொண்டிருந்தனர். குறுநில மன்னருடைய ஆதிக்கத்தின் தொடக்க காலத்தில், குவாரிசத்தின் பொருளாதார நிலை வளர்ச்சியுற்றது. அது, பதினோராம் நூற்றாண்டின் தொடக்கத்தில், அறிவியலின் பொற்காலத்திற்குரிய வழிவகையினை வகுத்துத் தந்தது.

தொடக்கத்தில் அவர் ஸகார்களோடும் பலகாரகரோடும் கொண்ட வாணிகத் தொடர்பும், பண்டைய ருஷியர்களோடும், ஊரல் மலைப்பகுதியிலும் மேற்குச் சைபீரியாவிலும் இருந்த பழங்குடி மக்களோடும் கொண்ட தொடர்பும் அவருடைய அறிவியல் முன்னேற்றத்திற்கு ஆக்கம் தந்தன. ஆயிரம் ஆண்டுப் பழமை வாய்ந்த தன்னுரிமைமிகு பண்பாட்டின் மரபுகளுடன், "அயலகத்து இந்தியாவின் மூதறிவும், நெடுந்தொலைவில் உள்ள ஹெல்லா (கிரேக்கத்தின்)சின் முழு நிறைவுற்ற தெளிவும்" இணைந்து, அந்தச் செழிப்புமிக்க மண்ணில், கல்வியறிவினைத் தழைத்தோங்கச் செய்தன.

கிரேக்கத்தின் மெய்யறிவையும், அறிவியல் சிந்தனையையும் பற்றி அடிக்கடி அல்–புருனி குறிப்பிடுவார். அவருடைய

பரந்துபட்ட அறிவு வேட்கையின் நிறை நிலையை, அவை எடுத்துரைக்கின்றன. ஹோமரின் ஈலியத்தையும் ஒடிசியையும் அவர் நன்கு அறிந்திருந்தார்; பிளேட்டோவின் ஆய்வுரைகளான 'சட்டங்கள்', பெய்டோ (Phaedo) போன்றவற்றையும் அவர் படித்திருந்தார். அரிஸ்டாட்டில், ஆர்க்கிமெடிஸ், டெமாகிரிட்டெஸ் முதலியோரின் நூல்கள் அனைத்தையும் அவர் நன்கு கற்றிருந்தார். கிரேக்க மெய்யறிவியலில் தலைசிறந்தவையென்று அவர் கருதியவற்றைப் புகழ்ந்து போற்றியுள்ளார்.

பதினோராம் நூற்றாண்டு பெருங்குழப்பமான காலமாகும். "1017இல் கஜனி முகமதுவினுடைய பெரும் படைகள் குவாரிசத்தைத் தாக்கி அழித்தன; அல்–புருனி உட்பட ஆயிரமாயிரம் மக்களைச் சிறைப்படுத்திச் சென்றன. இதைத்தொடர்ந்து பத்துஆண்டுகள், இந்த அறிஞரின் வாழ்க்கையிலேயே மிகுந்த இன்னல் செறிந்த காலமாக அமைந்தது. ஆனால், அதே காலத்தில் தான், மிகுதியான நூல்களை அவர் படைத்துள்ளார். வான நூலினை அவர் கற்றார்; கணித ஆய்வு நூல் ஒன்றிற்குத் தேவையான கட்டுரைகளைச் சேகரித்தார். கடல் அலைகளின் மீது சந்திரனுடைய தாக்குறவைப் புரிந்து கொள்ள முயன்றார்; இந்தியாவைப் பற்றிய பெருமைமிகு தம் நூலிற்குரிய கருத்துகளைத் திரட்டினார். அவருடைய அறிவியல் சிந்தனையின் கொடுமுடியை அவருடைய 'இந்தியா' படம் பிடித்துக்காட்டுகிறது.

அல்–புருனிக்கு முற்பட்ட காலத்திய அராபிய, பாரசீக இலக்கியங்கள் யாவும், 'அதிசயங்கள் நிறைந்த நாடாக' இந்தியாவைச் சித்திரித்தன. கணிதத்தையும் வான நூலையும் இந்தியர் அறிந்திருந்தனர்; அல்–புருனியின் காலத்திற்கு முன்பே, அறிவுத்திறன்மிகு விளையாட்டாகக் கருதப்படும் சதுரங்கத்தை (செஸ்), இந்தியரே முதன்முதலாக வகுத்தளித்ததாகக் கருதப்பட்டது. கற்பனைத்திறன் நிறைந்த கவிஞர்களாகவும், சிற்பிகளாகவும் இந்தியர்கள் விளங்கினர்; அவர்களுடைய மருத்துவர்கள், பெருமதிப்பு வாய்ந்தவர்களாகப் போற்றப்பட்டனர். மெய்யறிவியல் கலை, இந்தியாவில்தான் தோன்றியது என்று உறுதியாக அக்காலத்தில் சொல்லப்பட்டதாக அவர் கூறுகிறார்.

அல்–புருனி கண்ட இந்தியா

கஜனியில், தம்மைப்போலத் தங்கள் தாயகத்திலிருந்து கடத்திவரப்பட்ட இந்திய அறிஞர்களோடு பழகும் வாய்ப்பு அல்–புருனிக்குக் கிடைத்தது. அவ்வறிஞர்களோடு அவர் கொண்ட உறவும், உரையாடல்களும் சிறப்புமிகு அவர்களுடைய நாட்டிடத்து, அவருக்கு ஆர்வத்தை ஊட்டின. கி.பி.1018க்கும் 1030ஆம் ஆண்டுக்கும்

இடைப்பட்ட பன்னிரண்டு ஆண்டுக்காலத்தில், இந்தியாவைப் பற்றிய எண்ணத்திலேயே அல்–புருனி மூழ்கி இருந்தார்.

அல்–புருனிக்கு முன்பே, பலர் இந்தியாவிற்குப் பயணம் செய்துள்ளனர்; சிறப்பாகச் சிந்துவிற்கும் தெற்கத்திய கடற்கரைப் பகுதிகளுக்கும் சென்றுள்ளனர். அந்நாட்டைப்பற்றி ஆராய விரும்பும் வரலாற்றாசிரியருக்கு உதவியாகப் பயன்படக்கூடிய சில நூல்கள், அக்காலத்திலேயே எழுதப்பட்டிருந்தன. இந்தியாவைப் பற்றிய அல்–புருனியின் மாபெரும் நூல். தெளிவான அறிவியல் நோக்கில் – அதாவது தற்சார்பற்ற நோக்கில் – அனைத்தையும் விரித்துரைக்கும் வகையில் அமைந்தது. நாற்பதாவது வயதில், அவர் சமஸ்கிருத மொழியினைக் கற்கத் தொடங்கினார். பலமுறை அவர் இந்தியாவிற்கு வந்துள்ளார்; அதனுடைய மண்ணில் நடந்தும், அதன் காற்றை உட்கொண்டு மூச்சுவிட்டும், ஒப்பிட்டும் வியந்தும் உள்ளார்.

உண்மையான அறிவியல் அறிஞரான அல்–புருனி, தம்முடைய அறிவைப் பகிர்ந்து வழங்கவும், புதிய அறிவைப் பிறரிடமிருந்து பெற்று மகிழவும் முயன்றார். யூக்ளிட்டின் தனிப்பொருள் எனும் நூலையும், தம்முடைய வான நூல் பற்றிய ஆய்வு நூலையும் சம்ஸ்கிருதத்தில் அவர் மொழிபெயர்த்தார். அவரே, அராபிய மொழியில் அவற்றை மொழிபெயர்க்கத் தொடங்கினார். தம் காலத்தில் அராபிய மொழியில் பெருஞ்சிறப்புற்று விளங்கிய, இலக்கியப் பெருஞ் செல்வமான பஞ்ச தந்திரத்தின் மொழிபெயர்ப்பு செம்மையாக அமையவில்லை என்று அவர் கருதினார். அதனால், இதை சமஸ்கிருதத்திலிருந்து அரபு மொழியில் அவர் மொழிபெயர்த்தார்.

பதினோராம் நூற்றாண்டுக் காலத்திய இந்தியாவை அறிவதற்கு அல்–புருனியின் **இந்தியா,** சிறப்புமிகு அடிப்படை நூலாகப் பயன்படலாயிற்று. அல்–புருனி தாம் நேரில் கண்ட இந்திய மக்களின் பழக்க வழக்கங்களையும், வாழ்க்கை முறைகளையும் பற்றிச் சுவையான செய்திகள் பலவற்றைத் தம் நூலில் பதிவு செய்துள்ளார்.

“இந்திய மக்கள் முதலில் தம் கால்களைக் கழுவிக்கொள்ளுகின்றனர்; பிறகுதான் முகத்தை அலம்பி தூய்மைப்படுத்துகின்றனர். அவர்கள் நகங்களை நீளமாக வளர்த்துக்கொள்ளுகின்றனர். அவர்கள் உணவு உண்ணும் பொழுது தனித்திருந்தே உண்கின்றனர். வெற்றிலை பாக்குப் போட்டுக்கொள்வர். மது அருந்துவதும் உண்டு. அவர்கள் அயலாரின் வீட்டிற்கு வரும்பொழுது, வீட்டிற்குரியவரின் அனுமதியைப் பெறாமலேயே, நேராக உள்ளே சென்றுவிடுவர். ஆனால், வெளியில் வரும்போது வீட்டுக்குரியவரிடம் விடை பெற்றுக்கொண்ட பிறகே, புறப்பட்டுச் செல்வார்கள். இந்தியர்கள், பெரியவர்கள் முன்னிலையில் மரியாதை இல்லாமல் காறித்துப்புவதும், மூக்கைச் சிந்துவதும்

உண்டு. அவர்கள் மற்றவரிடம் பொருள்களைக் கொடுக்கும்போது, எட்டிநின்று வீசுவார்கள். (இதற்கு சாதிவேறுபாடே காரணமாகும்.)

இந்துக்கள் பிற வகுப்பாருடன் தம் இனத்தவர் கலப்பதைத் தடுப்பதன் மூலமும், அவர்கள் தமக்குரிய குடும்பத் தொழில்களையே பின்பற்றவேண்டும் என வற்புறுத்துவதன் மூலமும், தங்கள் சாதித்தூய்மையைக் காப்பாற்றிக் கொள்ள முயலுகின்றனர். யாராகிலும் தம் குலத்தொழிலைவிட்டு, பிறருடைய தொழிலைச் செய்ய முற்பட்டால், அது பாவமாகக் கருதப்பட்டது. ஏனெனில், அதனால் சமூகக் கட்டுக்கோப்பு குலைந்துவிடும் என்று அவர்கள் அஞ்சினர். இவ்வாறு பிறப்பையொட்டியே சாதிகள் அமையலாயின. அவற்றை எதிர்க்க யாரும் முயலவில்லை."

சமுதாய அமைப்பு முறையில் சாதிகள் ஒன்றுக்கொன்று தொடர்பற்றுத் தனித்து இருந்தன. தீண்டப்படாதவர்களும் இருந்தனர். அவர்களுடைய வாழ்விடங்கள் ஊருக்கு வெளியே இருந்தன. அவர்களிடையே எட்டுவகைப் பிரிவினர் இருந்தனர் என்பது இந்தியச் சமுதாய நிலையைப்பற்றி அல்–புருனி தரும் விளக்கமாகும்.

இந்திய மக்களின் ஆடை அணிகளைப்பற்றி அவர் கூறியுள்ள செய்திகள் சிறப்பானவை. "ஆடைகளைப் பொறுத்தவரையில் பெரும்பாலான ஆடவர், அரையில் மட்டும் ஒரு துண்டினை உடுத்தி வந்தனர். மற்றவர்கள் அகலமான துணியொன்றைக் கால்கள் வரை தொங்கும்படி (வேட்டி) கட்டிக் கொண்டனர். மகளிர் மார்பையும், கழுத்து, தலையையும் சுற்றி மேலாடை ஒன்றைப் போர்த்திக்கொண்டனர். ஆடவரும் இப்படி ஆடை அணிவது உண்டு. பெரிய இடத்துப்பெண்கள் கச்சணிந்து கொண்டனர்; அதன்மீது சால்வையைப் போர்த்திக் கொண்டனர். மற்றும், தோளிலிருந்து இடுப்பு வரை "குர்தாக்கள்" என்னும் நீளம் குறைவாக தைக்கப்பட்ட சட்டைகளை அணிந்தனர்.

"ஆண்களும், பெண்களைப்போலவே சடை வளர்த்திருந்தனர். பெண்கள் கூந்தலைப் பின்னிக் கொள்வர்; கொண்டை போட்டுக்கொள்வர். ஆண்களோ முடியினை முறுக்கி முடிச்சாகப் (குடுமி) போட்டுக்கொள்வர். ஆண்களும் பெண்களைப்போலவே காதணிகளும், (வளையல் போன்ற) காப்புகளும் அணிந்து கொண்டனர்."

இவற்றைப்போன்றே இந்துக்களின் சமய ஒழுகலாற்றினை அல்–புருனி கூர்ந்து கவனித்துள்ளார். "இந்துக்கள் வாரணாசி

(காசி), புஷ்கரம், தானேசுவரம்; முல்தான் முதலான புண்ணியத் தலங்களுக்குப் புனித யாத்திரை செய்கின்றனர். இறந்தவரின் அஸ்திகளைக் கங்கையாற்றில் அவர்கள் கரைத்தனர்; தான தருமங்களில் அவர்கள் நம்பிக்கை கொண்டிருந்தனர். சில உணவுப் பொருள்களைத் தூய்மை அற்றவை என்று அவர்கள் விலக்கிவிட்டனர்; ஆன்மிக மேம்பாட்டிற்காகச் சில முக்கிய நாள்களில், அவர்கள் 'விரதம்' மேற்கொண்டனர். இந்துக்கள் மூடநம்பிக்கை மிக்கவர்கள்; அன்றாட வாழ்க்கையில், சகுனங்களுக்கு அவர்கள் முக்கியத்துவம் அளித்தனர்."

"வழக்குகளைப் பிரமாணர்கள் மூலமாகவோ, கடும் சோதனைகள் மூலமாகவோ தீர்த்துக்கொள்ள அவர்கள் முயன்றனர். ஆனால், சட்டங்களின் உதவியை அவர்கள் நாடவில்லை."

பகவத்கீதை, உபநிடதங்களைக் கற்றுத் தெளிந்த அல்–புருனி, இந்தியரின் கடவுள் கொள்கையை வியந்து போற்றியுள்ளார். "கடவுள் ஒருவரே; அவர் அழிவற்றவர்; அவர் ஆதியும் அந்தமும் இல்லாதவர்; தன்னுரிமையுடன் இயங்குபவர்; பேராற்றலும் பேரறிவும் பெருந்திறனும் வாய்ந்தவர்; உயிர்களைப் படைப்பவர்; காப்பவர்; அருள்பவர்" என்பது இந்துக்களின் நம்பிக்கை என்று அவர் குறிப்பிடுகிறார். ஆனால் இந்த உண்மை எல்லாருக்கும் பொருந்தாது என்றும் அவர் கூறுகிறார். கல்வியறிவு இல்லாத பொதுமக்கள் சிறுதெய்வங்களைப் பல்வேறு வடிவங்களில் வணங்கியதையும் அவர் சுட்டுகிறார். விக்கிரக வழிபாட்டை அவர் கண்டித்துள்ளார்.

இந்தியர் வானநூலையும், மருத்துவக் கலையையும் நன்கு போற்றி வளர்த்துள்ளதை அல்–புருனி பெருமையாகப் பேசுகிறார். ஆனால், தொடர்ந்து மேலும் அவற்றை வளர்க்க முயலவில்லையே என்று அவர் வருத்தப்படுகிறார். மற்றும் புராணக்கதைகள், நிறுத்தல், முகத்தல் அளவை முறைகள், எழுத்து, மொழிவடிவம், நிலநூல் போன்ற பலதிறப்பட்ட செய்திகளை அந்நூலில் அவர் விளக்கியுள்ளார். அந்நூலினை எழுதுகின்ற பொழுது, 14 கிரேக்க அறிஞர்கள் எழுதிய 24 நூல்களிலிருந்து அல்–புருனி மேற்கோள் காட்டியுள்ளார்; 40 சம்ஸ்கிருத மூல நூல்களைப் பயன்படுத்தியுள்ளார். இன்னொருவருடையை முதிர்ச்சிமிகு பண்பாட்டிடத்து ஆழ்ந்த மதிப்பு கொண்ட, தற்சார்பற்ற ஆராய்ச்சியாளர் அவர், அதனால், இனப்பற்றால் ஒருபுறமாகச் சாய்ந்துவிடும் குறைபாடற்றவராக அவர் தோன்றுகிறார்.

புகழொளி

முகமதுவின் மகனான மசூத் கஜனிவாட்டின் ஆட்சியாளனாகத் தம் தந்தையை அடுத்து அரசு கட்டிலேறினார். அவர் காலத்தில், அல்–புருனியின் நிலைமாறியது. புதிய அரசன் அறிவொளி வாய்ந்தவனாக விளங்கினான். அதனால், அறிவியல் கலைகளுக்கு அவன் ஆக்கமும், ஊக்கமும் அளித்தான். தம்முடைய முதன்மையான வான நூலான **மசூதிய கட்டளை ஏடு** என்பதை, அல்–புருனி அவ்வரசனுக்குப் படைத்தார். அல்–புருனியின் சமகாலத்தவர்களும், பின் வந்தோரும், இந்த நூலில், பண்டைக்கிரேக்க அறிஞரான தாலமியை விட, அல்–புருனி மேம்பட்டு விளங்குவதைக் கண்டனர்.

நன்றியுணர்வுமிக்க மசூத், ஒரு யானையின்மீது தூய வெள்ளியைப் பேரளவிற்குப் பரிசாக அவருக்கு அனுப்பி வைத்தான். அப்பொழுது, அல்–புருனி, "இப்பரிசு என்னை அறிவியல் ஆராய்ச்சியிலிருந்து தவறி நெறிபிறழச் செய்யும். விரைவிலே வெள்ளி செலவழிக்கப்பட்டுவிடும்! அறிவியல் என்றும் வாழும் என்பதை மூதறிஞர் அறிவர். குறுகிய வாழ்நாளுடையதும் அலங்கோலமானதும் ஒளிவிடுவதுமான வெள்ளிக்கு, என்றுமுள்ள செல்வமான அறிவியல் அறிவினை நான் மாற்றாகக் கொடுத்து, என்றுமே பரிமாறிக்கொள்ளமாட்டேன்" என்று கூறி, அப்பரிசைப் பெற அவர் மறுத்துவிட்டார்.

கணிதம், வானநூல், நிலநூல், பௌதிகம், நிலப்பெரும் பரப்பளவைக் கணக்கு (Geodesy) ஆகியவற்றில் அல்–புருனி முக்கியமாக ஆர்வம் காட்டினார். ஆனால், அவருடைய கடைசி நூலான **மருந்துப் பொருளியலில்** செடிகள், விலங்குகள் கனிமங்கள் ஆகியவற்றின் இயற்பொருள் இயல்புகளை வகைப்படுத்தியுள்ளார்; மற்றும் மருந்து மூலிகைகளை அகர வரிசையில் தொகுத்துக் கொடுத்து, அவற்றின் பயன்களையும் சுட்டியுள்ளார்.

அராபிய மூலிகைப் பெயர்களோடு 900 பாரசீகப் பெயர்களையும், 700 கிரேக்கச் சொற்களையும், 350 இந்திய மூலிகைகளின் பெயர்களையும் மருந்துப் பொருளியலில் அல்–புருனி பட்டியலாகத் தந்துள்ளார். உயிரியல் பற்றிய அரிஸ்டாட்டிலின் நூல்களை, அதில் அவர் குறிப்பிட்டுள்ளார். கி.பி.முதலாம், இரண்டாம் நூற்றாண்டுகளில் டியோஸ் கொரைட்ஸ், கேலன் என்ற மருத்துவர்களும், மருந்துப் பொருளியல் வல்லுநர்களும் சிறப்புற்று விளங்கினர். அவ்விருவருடைய நூல்களையும் அவர் பயன்படுத்தியுள்ளார். நற்பேறின்மையால்

மருந்துப்பொருளியல் முற்றுப்பெறவில்லை. ஆனால், இன்று நமக்குக் கிடைத்துள்ள வடிவிலேயே, அதனுடைய பயன்மதிப்பு எத்தகையது என்பது தானாகவே புலனாகின்றது.

அல்–புருனியைப்பற்றி அவருடைய சமகாலத்தில் வாழ்ந்தவர்கள், "ஒவ்வோராண்டும் இரண்டு விழா நாள்கள் தவிர மற்ற நாள்களில் அவருடைய கை எழுதாமல் இருந்ததில்லை; அவருடைய கண்கள் எதையும் கூர்ந்து நோக்கின; அவருடைய மனம் ஆழந்து சிந்தித்தவாறே இருந்தன" என்று குறிப்பிட்டுள்ளனர். தம்முடைய 75ஆம் வயதில், 1048ஆம் ஆண்டு, அவர் உயிர்நீத்தார். அதற்குள் 150 நூல்களை அவர் படைத்திருந்தார். அவற்றுள் வானநூல் பற்றியன எழுபதும் கணிதம் பற்றியன இருபதும், மொழிபெயர்ப்புகள், நூலடைவுகள் போன்றவையும் அடங்கிய இலக்கிய நூல்கள் அறுபதும் அடங்கும். நிலப்படத்துறை அறிஞர், வானிலையாராய்ச்சியாளர், இனமரபியலறிஞர் எனப் பலதுறை அறிஞராக அவர் வான்புகழும் பெற்றிருந்தார்.

அவருடைய நூல்களுள் இருபத்தேழே அழியாமல், இப்பொழுது நமக்குக் கிடைத்துள்ளன; "மற்றவை அழிக்கப்பட்டனவா?அல்லது கண்டுபிடிக்கப்படவில்லையா?" என்பது தெரியவில்லை. சிரியாவின் வரலாற்று ஆசிரியனும் மருத்துவ அறிஞனுமான அபுல்–பராஜ் தம்முடைய நண்பரும் மூதறிஞருமான அல்–புருனிக்கு, "அவருடைய படைப்புகள் மிகப்பலவாகும். அவை விரிவானவை; முற்றிலும் நம்பத்தக்கவை. வானநூலினை அவர் மிக நன்றாக – முதன்மையான கொள்கைகள் முதல் சிறிய குறிப்புகள் வரை அனைத்தையும் கற்றவர். அவரைப்போன்று அவருடைய கூட்டாளிகளிடையிலும் அல்லது இன்றுவரையும் அத்துணை நுட்பமாக வானநூலை அறிந்தவர்கள் வேறு யாருமே இருந்ததில்லை" என்று புகழ்மாலை சூடியுள்ளார்.

அல்–புருனியின் பரந்துபட்ட தாக்கத்தைப் பல துறைகளில் இன்றும் காணலாம். பல நாடுகள் அவரைத் தம்முடைய நாட்டைச் சேர்ந்தவர் என்று உரிமை கொண்டாடுகின்றன. ஆனால், நடு ஆசிய நாகரிகங்களின் மிகச்சிறந்த ஒன்றன் தொட்டிலான குவாரிசத்தைச் சேர்ந்த இந்த மனிதர், எல்லாநாடுகளுக்கும், எல்லாக் காலத்திற்குமே உரியவராக இன்று போற்றப்படுகிறார்.

5

கண்ணனின் காதலி

மாயவன் வழிபாடு

தமிழ்மக்கள் ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பே, முல்லை நிலத்திற்குரிய தெய்வமாக மாயோனைப் போற்றி வழிபட்டனர். இதனை,

மாயோன் மேய காடுறை உலகம்

என்னும் தொல்காப்பிய நூற்பாவால் (தொல்.அதத்.5) தெளிகின்றோம். முல்லைநிலத்து வாழ்ந்த தமிழ் மக்களுடைய, இனப்பிரிவிற்கு 'ஆயர்' என்னும் பெயர் வழங்கிவந்ததை, சங்கப்பாடல்களால் அறிகிறோம். அவ்வாயர் குலத்து மக்களின் வழிபடு தெய்வமாக மாயோன் விளங்கினான். திருமாலிற்குரிய பல்வேறு பெயர்களுள் மாயோன் என்பது ஒன்றாகும்.

மாஅ யோயே மாஅ யோயே
மறுபிறப்பு அறுக்கு மாசில் சேவடி
மணிதிகழ் உருபின் மாஅயோயே

எனப் பரிபாடல் எனும் சங்க இலக்கியத்தில் மூன்றாம் பாடல் தொடங்குகிறது. இதனால், "நீலமணியின் நிறத்தையொத்த திருமேனியைக் கொண்டு விளங்குபவன் மாயோன்" என்பதும், "அவனுடைய திருவடிகளைச் சேர்ந்தவர்கள் 'பிறவிப் பெருங்கடல் நீந்தி' மறுபிறப்பு என்பதே இல்லாமல் – வீடு பேற்று இன்பத்தை அடைவர்" என்பதும் தெரியவருகின்றன. மாயோன் எனும் திருப்பெயரால் நம்முடைய முன்னோர்கள், திருமாலைக் குறிப்பிடக் காரணம் யாது? 'மாநிறம் உடையவன்' என்பது மாயன் (மாயவன்), மாயோன் எனும் சொற்களுக்குரிய பொருளாகும். 'மா நிறம்' என்பதற்குக், 'கரிய நிறம்' என்பது பொருள். இதனால் திருமாலைக் கரிய நிறக் கடவுளாகப் பண்டைத் தமிழர் கருதினர் என்பது தெரிகிறது.

கரியவனைக் காணாத கண்ணென்ன கண்ணே?
கண்ணிமைத்துக் காண்பார்தம் கண்ணென்ன கண்ணே?

என்னும் சிலப்பதிகாரப் பகுதியில் (17: படர்.2). இளங்கோவடிகள் திருமாலைக் கரியவன் என்னும் பெயராலேயே சுட்டுகின்றார். மற்றும், திருமாலின் திருஅவதாரங்களுள் ஒன்றான கண்ணன் அவதாரத்தையே, இவ்வாறு குறிப்பிடுகின்றார் என்பதும் புலனாகின்றது. 'கிருஷ்ண' எனும் சம்ஸ்கிருதச் சொல்லிற்குக் 'கருமை நிறம்' என்பதே மூல முதற்பொருளாகும். அப்பொருள் அடியாகவே கரிய நிறமுடைய கடவுளை, 'கிருஷ்ணா' என வடமொழிவாணர்கள் போற்றினர்.[1] தமிழில் 'மாயோன்' எனும் சொல்லும், அப்பொருளிலேயே வழங்கப்பட்டு வருகிறது.

நப்பின்னை – சொல்லும் பொருளும்

ஆழ்வார்கள், 'கண்ணழகன், எப்பொழுதும் அடியார்களுக்குக் கண் போன்றவன், கண்ணிலே கருணை நிறைந்தவன்' என்னும் கருத்துகள் அமைய திருமாலைக் கண்ணன் என்னும் திருப்பெயரால் போற்றினர்.[2] இக்கண்ணனுடைய காதலியாகவும், மனைவியாகவும் போற்றப்படுபவளே நப்பின்னை எனும் நங்கையாவாள். நப்பின்னை எனும் சொல், நல்ல (ந) பின்னை எனவும், நம்பின்னை எனவும் பிரித்துப் பொருள் கூறத்தக்க வகையில் அமைந்திருக்கிறது. கீரன், செள்ளை, பூதன் எனும் பெயர்களுக்கு முன் 'நன்மை, சிறப்பு' எனும் பொருளை உணர்த்தும் 'ந' எனும் முன் அடையைச் சேர்த்து வழங்குவது பண்டை வழக்கமாகும். அந்த முறையில் 'பின்னை' எனும் பெயரோடு, 'ந'கரம் சேர்த்து 'நப்பின்னை' என்று வழங்கப்பட்டதாகக் கொள்ளலாம்.[3] அடியார்க்கு நல்லார் என்னும் உரையாசிரியர் 'நம்முடைய (ஆயர்குலத்து உதித்தவளாகிய நம்முடைய) பிள்ளை' என்னும் பொருள் கொள்ளத்தக்க வகையில், 'நம்+பின்னை' என்னும் வடிவ அமைப்பில் இச்சொல்லைக் கொண்டுள்ளார்.[4] 'பின்னை' எனும் சொல்லிற்குப் 'பின் பிறந்தவள்' (தங்கை) என்பது பொருள்.[5] கம்பன், சூர்ப்பனகையை அறிமுகப்படுத்தும் பொழுது, "வெள்ளிமலை

---

1. Dowson, John; A Classical Dictionary of Hindu Mythology and Religion, (Routledge - Kegan Paul, London, 1908), p.161.
   "கரியோன் என்னும் பொருளதோர் (கிருஷ்ண) பாகதச் சிதைவே, கண்ணன்" - பேராசிரியர், திருக்கோவையார் 53, உரை.
2. நாலாயிர திவ்வியப் பிரபந்தம், (மயிலை மாதவதாசன் பதிப்பு, சென்னை, 1962), 2775
3. பிங்கல நிகண்டு 914; சீவக சிந்தாமணி 482, நச்சி.உரை
4. சிலப்.17:16 அடியார்க்கு. உரை
5. பிங்கல நிகண்டு 914.

யெடுத்து உலக மூன்றும் காவலோன் **பின்னை** காமவல்லியாங் கன்னி" (கம்ப.ஆரணி.258) என்று குறிப்பிட்டுள்ளார். இதனால், பின்னை எனும் சொல்லிற்குப் 'பின் பிறந்தவள் – தங்கை' எனும் பொருள் வழக்கத்தில் இருந்து வருவதை அறிகிறோம்.

அவ்வாறாயின், 'பின்னை என்பாள் யாருக்குப்பின் தோன்றியவள்? அல்லது அவள் யாருடைய தங்கை?' எனும் வினாக்கள் எழுவது இயல்பு.

உடனமர் காதல் மகளிர்
திருமகள், மண்மகள், ஆயர்
மடமகள் என்றிவர் மூவர்
ஆளும் உலகமும் 'மூன்றே' **(நா.திவ்.பிர.2766)**

என்று நம்மாழ்வார், திருமாலின் தேவியர் மூவரை, அவர்களுடைய தகுதிச்சிறப்பு எளிதில் புலனாகும் வண்ணம் முறைப்படுத்திக் குறிப்பிட்டுள்ளார். பெரிய பிராட்டியாகிய திருமகளையும் (இலக்குமியையும்), மண்மகளாகிய பூதேவியையும் (இளைய பிராட்டியையும்) திருமாலின் இரு மனைவியராகப் போற்றுவது வைணவ மரபாகும். கண்ணனாக இறைவன் இவ்வுலகில் தோன்றிய காலத்தில், ஆயர் குலக்கொழுந்தாகிய நப்பின்னைப் பிராட்டியைக் காதலித்து மணம் செய்து கொண்டார். இதனால், திருமாலிற்கு முத்தேவியரை மணவாட்டியராகக் கூறுவது தமிழ்மரபாக வளர்ந்து வந்துள்ளதைக் காணுகிறோம்.

கூந்தல்மலர் மங்கைக்கும் மண்மடந்தைக்கும்
குலவாயர் கொழுந்துக்கும் கேள்வன் தன்னை
(நா.திவ்.பிரபந்.3182)

பின்னை கொல்? நில மாமகள் கொல்?
திருமகள் கொல்? பிறந்திட்டாள்! **(நா.திவ்.பிரபந்3280)**

நிலமகளுக்குக் கேள்வனு(ம்) நீள்நிரைநப் பின்னை
இலவலர்வாய் இன்னமிர்தம் எய்தினான் அன்றே
(சீவக.சிந்தா.432)

என்னும் இலக்கியச் சான்றுகள் இக்கருத்தை வலியுறுத்துகின்றன. இச்செய்தியை,

'உண்ணா கிடந்து ஓர் மாயையினால் என்றும் வீறுடைய முடிக்குரியாரோடு, இத்திரு மண்ணேரன்ன ஒண்ணுதல் பின்னை கொல் என்கிற ஒப்பு" என்னும் ஆசாரிய ஹிருதயப் (12) பகுதியும், "தம்முடைய தன்மை விசேடங்களாலே, பகவானுடைய

காதலுக்குரியவர்களான பட்டத்துத் தேவிமார்கள் மூவரோடும் இவர்க்கு உண்டான ஒப்புமை... வீறுடையளாய்ப் பெரிய பிராட்டியாரைப் போன்று முடிக்கு உரியளான ஸ்ரீ பூமிப் பிராட்டியாரோடு ஒத்த சிறப்பினை உடையவன் என்று சொல்லும்படி... நப்பின்னைப் பிராட்டிக்கே உரியதான கிருஷ்ணவதாரத்திலும்"[6] *என்னும் மணவாள மாமுனிகளின் உரைவிளக்கப் பகுதியும் தெளிவுறுத்துகின்றன.*

பாற்கடலைக் கடைந்த பொழுது, முதலில் தோன்றியவள் மூதேவி; அவளுக்குப் பின்னர்த் தோன்றியவள் இலக்குமி. எனவே, இலக்குமியைத்தான் 'பின்னை' என்று தமிழ் இலக்கியம் குறிப்பிடுவதாகச் சிலர் கூறுவர்.[7] *ஆழ்வார்கள் இலக்குமியைப் பெரிய பிராட்டி என்றும், நப்பின்னையை 'ஆயர்தம் குலக்கொழுந்து' என்றும் வேறுபடுத்திக் காட்டுவது கருதத்தக்கது.*

நப்பின்னையின் கணவன்

நப்பின்னையின் மணாளனாகத் திருமாலை நம்முயை முன்னோர்கள் கருதிப் போற்றியுள்ளனர்.

பின்னை மணாளனை **(நா.தி.பி.162)**

என்று பெரியாழ்வாரும்,

குத்துவிளக்கெரிய கோட்டுக்கால் கட்டில்மேல்
மெத்தென்ற பஞ்ச சயனத்தின் மேலேறிக்
கொத்தலர் பூங்குழல் நப்பின்னை கொங்கைமேல்
வைத்துக் கிடந்த மலர்மார்பா!

எனச் (நா.தி.பி.492) சூடிக்கொடுத்த சுடர்க்கொடியாகிய ஆண்டாளும் குறிப்பிட்டுள்ளமை இங்குக் கருதத்தக்கது.

பின்னை கேள்வ **(நா.தி.பி.850)**

என்று திருமழிசையாழ்வாரும்,

முருக்கிலங்கு கனித்துவர் வாய்ப்பின்னை கேள்வன் **(மேலது,1505)**

பின்னைக்கு மணவாளன் **(மேலது, 1506)**

மென்னடைப் பூங்குழல் பின்னை மணாளா **(மேலது,1966)**

பின்னை மணாளனைப் பேரில் பிறப்பிலியை **(மேலது,2674)**

---

6. ஆசாரிய ஹிருதயம், வியாக்கியானம் (தமிழா. பக்.305)
7. திருவரங்கத்து மாலை, 21.

எனத் திருமங்கையாழ்வாரும்,

வேயி மலிபுரை தோளி பின்னைக்கு மணாளனை
(மேலது,2992)

வாசப் பூங்குழல் பின்னை தோள்கள் மணந்ததும்
(மேலது, 3261)

பின்னைத் தோள் மணந்த பேராயா! **(மேலது, 3453)**

மடப்பின்னை மணாளன் **(மேலது, 3635, 3637)**

பின்னைதன் கேள்வனை **(மேலது, 3659)**

மடப்பின்னை தன் கேள்வன் **(மேலது, 3702)**

என நம்மாழ்வாரும் பாடியுள்ளனர்.

சைவ சமயப் பெரியாரான சுந்தரர்,

பின்னை நம்பும் புயத்தான் **(தேவாரம் 7875)**

எனவும், மணிவாசகப் பெருமான்,

ஏர்ப்பின்னை தோள்முன் மணந்தவன் ஏத்த
(திருக்கோவையார் 273)

எனவும் இச்செய்தியைக் குறிப்பிட்டுள்ளனர்.

உப்பக்க நோக்கி உபகேசி தோள் மணந்தான்

என்பது திருவள்ளுவ மாலை (21).

பின்னைக் கினிய பெருமான் அரங்கர் (திருவரங்கத்துமாலை21)

என்று பிள்ளைப்பெருமாள் ஐயங்காரும் போற்றிப் பாடியுள்ளார்.

நந்தகோபன் மருமகள்

ஆயர்பாடியில் யசோதை பெற்றெடுத்த கண்ணனுடைய காதலியை – மனைவியை, நந்தகோபருடைய மருமகளாகச் சொல்லுவது மரபு.

உந்து மதகளிற்றன் ஓடாத தோள்வளையன்
நந்தகோபாலன் மருமகளே! நப்பின்னாய்! **(நா.திவ்.பிர.421)**

என்று ஆண்டாள் அழைப்பதில் வியப்பிற்கு இடமில்லை அன்றோ?

கண்ணனின் மனைவியைப் பரம்பொருளாகிய திருமாலின் துணைவியாகப் போற்றுவது வைணவ சமயத்தின் அடிப்படைக்

கொள்கைகளுக்குப் பொருந்துவதாகும். இம் மண்ணுலகில் அறம் சிதைந்து, தீமை பெருகியபொழுது திருமாலே கண்ணனாக, இவ்வுலகில் தோன்றினார் என்னும் கொள்கையின் அடிப்படையில், திருமாலின் தேவியாக நப்பின்னையை நம் பெரியோர்கள் போற்றியுள்ளனர்.

ஆயர்குலக் கொழுந்து

நப்பின்னைப் பிராட்டி ஆயர்குலத்தில் தோன்றியவர் என்பது தமிழ்நாட்டு அருளாளர்களின் நம்பிக்கையாகும். நப்பின்னையின் வரலாற்றுச் செய்திகளை, முதன்முதல் தமிழில் இளங்கோவடிகள் எடுத்துரைத்துள்ளார். அவர் 'கோவலர் வாழ்க்கை ஓர் கொடும்பாடில்லை' என இடையர்தம் வாழ்க்கையைப் போற்றுபவராவர். ஆயர்குல மடந்தை மாதரியிடம் அடைக்கலமாகத் தரப்பட்ட கண்ணகியையும், அவள் கணவன் கோவலனையும் தம் வீட்டிற்கு மாதரி அழைத்துச் செல்லுகிறாள். தனியே, அவர்கள் உணவு சமைத்துண்ணுவதற்குத் தேவையான உதவிகளையெல்லாம் மாதரியும் அவளுடைய மகள் ஐயையும் செய்கின்றனர். நெடுங்காலத்திற்குப் பின்னர், தான் சமைத்த உணவினைத் தன் கைகளாலேயே கோவலனுக்குப் பரிமாறி, அவன் சுவைத்து உண்பதைக் கண்டு, கண்ணகி மனம் மகிழ்கிறாள். இவ்வினிய காட்சியை மாதரியும், அவள் மகளும் ஒரு புறத்தே இருந்து கண்டு, இன்புறுகின்றனர். அந்நிலையில்,

> இம் மதுரை மாநகரின், நம் ஆயர்பாடியில் நாம் பெற்ற இந் நல்லுணவை உண்கின்ற இந்த நம்பி (கோவலன்), அன்று அந்த ஆயர்பாடியில் அசோதை பெற்றெடுத்த காயாம்பூ வண்ணனாகிய கண்ணபிரானேயாகும். இவனுடைய துன்பத்தைத் தீர்த்த பல அழகிய வளையல்களை அணிந்துள்ள கவர்ச்சிமிகு தோளையுடைய இவள் (கண்ணகி), அன்று யமுனை ஆற்றில் கண்ணனோடு ஆடல் புரிந்தவளும் நம் ஆயர்குடியில் தோன்றிய சுடர்விளக்குமான நப்பின்னையே ஆவாள்.

என்று எண்ணி மாதரியும், ஐயையும் வியப்பும் விம்மிதமும் அடைந்தனராம்.

> **ஆயர் பாடியின சோதைபெற் றெடுத்த**
> **பூவைப் புதுமலர் வண்ணன் கொல்லோ?**
> **நல்லமுது உண்ணும் நம்பி! ஈங்குப்**
> **பல்வளைத் தோளியும் பண்டுநங் குலத்துத்**
> **தொழுனை யாற்றினுள் தூமணி வண்ணனை**

விழுமம் தீர்த்த விளக்குக் கொல்லென
ஐயையுந் தவ்வையும் விம்மிதம் எய்தி (சிலப்.16:46-52)

என்பது இளங்கோவடிகளின் இன்மொழியாகும். நப்பின்னை ஆயர்குடியில் தோன்றியவள் என்பதை,

தன்துணை ஆயர்பாவைநப் பின்னை (நா.திவ்.பிர.1072)

குல ஆயர் கொழுந்து (மேலது,3182)

ஆயர்தங் கொம்பினுக்கே (மேலது, திருவிருத்.21)

என்று ஆழ்வார்களும் அறிவிக்கின்றனர்.

அழகோவியம்

கண்ணனின் உள்ளத்தைக் கவர்ந்த நப்பின்னையைப் பேரழகியாகப் பண்டைத் தமிழர்கள் கண்டனர். அப்பிராட்டி உடலழகோடு, உள்ளத்து எழில் வாய்ந்த 'உயிரோவியமாக'த் தமிழ் நூல்களில் காட்சி தருகிறார். கலையுணர்வுமிக்க காரிகையாகவும், கண்ணனுடைய கருத்தை யழிக்கும் 'வாலைக் குமரியாக'வும் ஏரும் எழிலும், வலிவும் பொலிவும்பெற்று அவர் விளங்குகிறார். 'ஆகாத்து ஓம்பி ஆப்பயன் கொள்ளும்' ஆயர்குடியில், இத்தகைய அழகரசி தோன்றுவது வியப்பு அன்றோ?

அழகிய கூந்தலை உடையவள் பின்னை! இதனை, இளங்கோவடிகள்,

பொதியவிழ் மலர்க்கூந்தல் பிஞ்ஞை (சிலப்.17. ஒன்றன் பகுதி)

என்று குறிப்பிட்டுள்ளார்.

தூய்மையான, நீண்ட, கரிய கூந்தலையுடையவள் நப்பின்னை. அவள் தோகை மயிலனைய சாயல் உடையவள் என்பதை,

தூயக ருங்குழல்நல் தோகை மயிலனைய நப்பின்னை....
(நா.திவ்.பிர.70)

என்று பெரியாழ்வார் எடுத்துரைக்கின்றார். நறுமணம் கமழும் குழலையுடையவள் அவள். இதனை,

கந்தம் கமழும் குழலீ (மேலது,491)

என்று கோதைப்பிராட்டியார் குறிப்பிடுவதால் அறிகிறோம். பூப்போலும் பொலிவுமிக்க அழகிய கூந்தலை உடையவள் அவள்,

பூங்குழல் பின்னை (மேலது, 1966)

என்று திருமங்கை மன்னன் கூறுகிறார்.

வாசப் பூங்குழல் பின்னை (மேலது, 3261)
வம்பவிழ் கோதை (மேலது, 2944)

என்று நம்மாழ்வாரும்,

கொத்தலர் பூங்குழல் நப்பின்னை (மேலது, 492)

என்று ஆண்டாளும் பின்னையின் கூந்தல் அழகில் ஈடுபடுகின்றனர்.

அழகிய நீண்ட நெடுங்கூந்தலை உடையவள் நப்பின்னை. இதனால், அவளை 'உபகேசி' எனச் சுட்டும் வழக்கும் இடைக்காலத்தில் எழுந்தது. 'உபகேசம் – மயிராற் பின்னிய பின்(னல்), அதனாற் பெயர் சிறந்தாள் பின்னை பிராட்டி, உபகேசத்தையுடையாளை உபகேசி என்பது தமிழ் நூன் முடிவு. குண்டலகேசி, நீலகேசி, பிங்கலகேசி என்றாற் போலக் கொள்க. இதனால் உபகேசியும் பின்னையும் ஒரு பொருட் பன்மொழியாதல் காண்க"[8] என்பது ஆராய்ச்சியாளரின் துணிவாகும்.

நப்பின்னை சிறந்த கண்ணழகி. அவளுடைய கண்கள் வேலினைப் போன்று நீண்டும், கூர்மையாகவும் ஒளிபொருந்தியனவாகவும் உள்ளன. இதனை,

வேல் நெடுங்கண் பிஞ்ஞை (சிலப்.17.கருப்.)

என்னும் இளங்கோவடிகள் வாக்கால் அறியலாம். இவ்வழகில் ஈடுபட்ட நம்மாழ்வார்,

வடிவேல் தடங்கண் மடப்பின்னை (நா.திவ்.பிர.3635)

எனக் குறிப்பிடுகிறார். அவளுடைய கண்கள் கெண்டை மீன்கள் போல் ஒளிருகின்றன என்பதை,

கெண்டை யொண்கண் (நா.திவ்.பிர.3261)

வாள்கெண்டை யொண்கண் (நா.திவ்.பிர.3702)

என்று சடகோபர் சுட்டுகின்றார். மற்றும், அவளுடைய கண்கள் வாளினைப்போன்று கூர்மையும் ஒளியும் கொண்டு பரந்தும் உள்ளன என்பதை அவரே,

வாளேய் தடங்கண் மடப்பின்னை (மேலது,3637)

எனத் தெரிவிக்கிறார். மேலும், மானின் மருட்சி (மயக்கம்) வாய்ந்த கள்ளங்கபடமற்ற நோக்கினை உடையவள் என்பதை நம்மாழ்வாரே,

மானை நோக் கிமடப் பின்னை (மேலது,3659)

---

8. இராகவையங்கார், மு., ஆராய்ச்சித்தொகுதி, (சென்னை, 1964). ப.56.

என அறிவிக்கின்றார். இதனைப் 'பிணையேர் மடநோக்கு' என்பர் திருவள்ளுவர். இளமைத் துடிப்பும் எழிலுமிக்க நங்கைக்குச் 'சுட்டும் விழிச்சுடர்'கள், 'சூரிய சந்திரரைப்' போன்று பேரொளி வாய்ந்தனவாக இருக்க வேண்டும் என்பது உடற்கூற்று நூலார் வகுத்துள்ள இலக்கணமாகும். இவ்விலக்கணத்திற்குச் சிறந்ததோர் எடுத்துக்காட்டாக நப்பின்னை விளங்கியதை மேற்கண்ட பாடற்பகுதிகள் தெரிவிக்கின்றன.

நப்பின்னையின் 'பொங்கிவரும் பெருநிலவு போன்ற ஒளி முகத்தை'ப் பேரெழில் பெற்று விளங்கச் செய்த கண்களைப் போன்று, அவளுடைய செங்கனி வாயும் அவள் திருமுகத்தினை ஒளிப்பிழம்பாக்கியது. அவளுடைய செவ்வாயினைக் கண்டு ஆண்டாள் வியக்கின்றார். முள் (கலியாண) முருங்கை மலர் போன்ற செவ்விதழ்களையும் கொவ்வைக் கனியிதழ்களையும் உடையவர் நப்பின்னை என்பதைத் திருமங்கையாழ்வார்,

முருக்கிலங்கு கனித்துவர் வாய்ப் பின்னை **(மேலது, 1505)**

என்று தெரிவிக்கின்றார்.

நப்பின்னையின் இலவம் அலர் போன்ற கனியிதழ்களில் இனிய அமுதத்தைக் கண்ணன் சுவைத்து மகிழ்ந்தான் எனும் கருத்தை,

நப்பின்னை, இலவலர் வாய் இன்னமிர்தம் எய்தினான்
(சீவக.சிந்.482)

என்று திருத்தக்க தேவர் குறிப்பிடுவதும் இங்கு நினைவு கூர்தற்குரியதாகும்.

மூங்கிலைப் போன்று நீண்டும், கவர்ச்சிமிகு வடிவழகும் வாய்ந்த தோள்களை உடையவளாக நப்பின்னை விளங்கினாள்.

காம்பனை தோள் பின்னை **(நா.திவ்.பிர.2835)**

வேயின் மலிபுரை தோளி பின்னை **(மேலது, 2992)**
நெடும் பணைத் தோள் மடப்பிள்ளை **(மேலது, 3087)**
ஏர்ப்பின்னை தோள் **(திருக்கோவை 273)**

என்னும் பாடற்பகுதிகள் இக்கருத்தைத் தெரிவிக்கின்றன.

அவளுடைய கைகளில் அழகிய வளையல்களை நிறைய அணிந்திருந்தாள். இதனை,

பெய்வளைக் கையாள் **(சிலப்.17:16)**
பல்வளைத் தோளி **(மேலது, 16:49)**
வரிவளைக்கைப் பின்னை **(மேலது 17:28)**

என்று இளங்கோவடிகள் குறிப்பிடுகின்றார்.

பின்னையின் மெல்லிய இடையும், அதற்கு மேற் புறத்தே வீறுடன் விளங்கும் குடம் போன்ற கொங்கைகளும் அவளைப்பேரழகு வாய்ந்த பெண்ணாகப் பொலிவுறச் செய்தன.

செப்பன்ன மென்முலை செவ்வாய் சிறுமருங்குல்
நப்பின்னை நங்காய்! **(நா.திவ்.பிர.493)**

அவள் 'பொலிவுமிக்க மேகலையணிந்த இடையுடன், அன்னம் போன்ற அழகு நடை நடந்தாள்' என்பதைத் திருமங்கை மன்னன் சுட்டத் தவறவில்லை.

பொன்னங் கலைஅல்குல் அன்ன மென்னடைப்
பூங்குழல் பின்னை **(மேலது, 1966)**

என்பதால் இதனை அறிகிறோம். அவள் இளமைத் துடிப்பு வாய்ந்த பூங்கொடி போன்றவள். அவள் தன் கழுத்தை வளைத்து நின்று நோக்குவாள்.[9] அந்நிலையில் பெருவனப்பு வாய்ந்த 'மயக்கும் மங்கையாக' அவள் காட்சி தருவாள்.

பெண்மை நலன் அனைத்தும் பொங்கி வழியும் எழிலோவியமாக, நப்பின்னையை நம் முன்னோர்கள் தீட்டிக் காட்டியுள்ளனர். சிறந்த காதலன் ஒருவனுக்கு வாய்க்கும் காதலி. எத்தகைய ஏரும் எழிலும் பெற்றவளாக இருக்கவேண்டுமென்பதை ஆழ்வார்களும், புலவர்களும் நன்கு எண்ணிப்பார்த்துள்ளனர். இதை, நப்பின்னையின் திருக்கோல வருணனையால் அறிகிறோம் அவள், தன்னுடைய காதல் தெய்வத்திற்குக் 'கண்டு கேட்டு உண்டுயிர்த்து உற்றறியும் ஐம்புலனும்' வாய்ந்த இன்பப் பெட்டகமாகவும், அவ்வின்ப உணர்வைத் தூண்டி மனத்தை மயக்கும் 'முறிமேனி முத்தம் முறுவல் வெறி நாற்றம் வேலுண்கண் வேய்த் தோளுடைய' கோல மலர்ப் பாவையாகவும்[10] விளங்கியதை, மேற்கண்ட கருத்தோவியங்கள் கவினுற எடுத்துரைக்கின்றன. இதை,

---

9. நா.திவ்.பிர.3771.
10. நா.திவ்.பிர.3771.

"சொல்லிச் சொல்லாத சௌந்தர்யங்கள் எல்லாவற்றாலும் பூர்ணையானவளே" என்று ஆறாயிரப்படி ஈட்டுரை காரரும் சுட்டிச் சென்றுள்ளார்.[11]

*'கண்ணன்' என்னும் தமிழகத்தின் இலட்சியக் கடவுட்காதலன், தன் "உள்ளத்தில் அழகொழுக எழுதிப் பார்த்திருக்கும் உயிரோவிய"மான நப்பின்னையைப், பண்டைத் தமிழர்கள் கண்ட 'இலட்சியப் பெண் ஒருத்தியின் அழகோவியம்' (*The Ideal of a Feminine Beauty) *எனலாம்.*

ஏறு தழுவல்

கண்ணன் பின்னையை மணந்த வரலாறு சுவைமிக்கது. பண்டைக்காலத்தில் ஆயர்குடி மக்கள், தங்கள் மகளிருக்குரிய மணவாளனைத் தேர்ந்து எடுத்த முறை, புதுமையானது. தாங்கள் வளர்க்கும் முரட்டுக்காளை (ஏறு)களை அடக்கும் ஆண்மையும் வீரமும் உடைய இளைஞர்க்கே, தம் மகளிரைப் பெண்ணின் பெற்றோர்கள் திருமணம் செய்து கொடுத்தனர். இவ்வாறு காளைகள் அடக்குவதை ஏறு தழுவல் என்பர்.

"இக்கரிய காளையின் சீற்றத்தினை, அஞ்சாதவனாய் பாய்ந்து, அதை அடக்கியவனை இத்தேன் நிறைந்த மலர்மாலையுடையாள் விரும்புவாள்.

நெற்றிக்கண் சிவந்த சுட்டியினையுடைய ஏற்றின் வலியைத் தொலைத்தவனுக்கே, இப்பொன்தொடி மாதின் தோள் உரியனவாகும்.

வலிமிக்க இவ்விளைய ஏற்றினை ஏறிச்செலுத்துபவனுக்கே, இம்முல்லை மலரினைச் சூடிய அழகிய கூந்தலுடையவள் உரியவளாவாள்.

நுண்ணிய புள்ளிகளையுடைய இந்த வெள்ளை எருதின் கொட்டத்தை அடக்குபவனுக்கே, இப்பெண்கொடி மாதின் அழகு வாய்ந்த தோள்கள் உரியனவாகும்.

பொன் போன்ற புள்ளிகளையுடைய இவ்வெள்ளை எருதினை அடக்குபவனுக்கே, இவ்வழகிய கொடி போன்ற பெண்ணின் மார்பகங்கள் உரியனவாகும்.

வெற்றி பொருந்திய இந்த இளமைத் துடிப்புடைய எருதினை அடக்கி, அதன்மீது ஊர்ந்து வருபவனுக்கே, இக்கொன்றைப் பழம்போலும் பொலிவுபெற்ற கூந்தலையுடையாள் உரியவளாவாள்.

11. திருப்பாவை வியாக்கியானங்கள், (மயிலை மாதவன் பதிப்பு.) ப.245.

தூய வெள்ளை நிறமுடைய இந்த ஏற்றின் சீற்றத்தினைக் கெடுத்தவனுக்கு இப்பூவைப் புதுமலர் (காயாம்பூ) போலும் நிறத்தினையுடையாள் மனைவியாவாள்."

இவ்வாறு, தங்கள் தொழுவத்து ஏழுவகையான ஏறுகளைத் தம்முடைய பூங்கோதையராகிய ஏழு கன்னியரின் திருமணத்திற்காக ஆயர்குடித் தலைவர்கள் வளர்த்து வந்தனர்.[12] என்னும் செய்தியைக், குரவைக் கூத்திற்கு உரிய கருத்தாக இளங்கோவடிகள் குறிப்பிட்டுள்ளார்.

இத்தகைய பழக்கம், முல்லை நிலத்து மக்களிடம் இருந்து வந்ததைக் 'கலித்தொகை' எனும் சங்க இலக்கியம் மிக விரிவாக எடுத்துரைக்கின்றது.

ஆயர்கள், சிவபெருமானின் மழுவைப்போல எருதுகளின் கொம்புகளைக் கூர்மையாகச் சீவுவர் (கலி.101) எருதுகளுள் பல தேவனைப்போன்ற வெண்ணிறம் கொண்டவை சில; கண்ணனைப்போலக் கரியவை சில; முருகனைப்போலச் சிவந்தவை சில (கலி.105); இந்திரனைப்போல் பல புள்ளிகளை உடையவை சில; முருகனது வெள்ளிய துகிலைப்போல வெண்மையான கால்களையுடையவை சில; எமனைப் போன்ற வலிமையுடையவை சிலவாகும் (கலி.106). இத்தகைய எருதுகள் அனைத்தும், தொழுவத்தில் விடப்படும்.

முல்லை நிலத்து இளைஞர்கள் அத்தொழுவத்தில் பாய்ந்து, ஏறு தழுவத் தொடங்குவதற்கு முன்னர் நீர்த்துறையிலும், ஆலமரத்தின் கீழும், மாமரத்தின் கீழும் உறையும் தெய்வங்களை வழிபடுவர். ஏறுகளை அடக்கும் இக்காட்சியைக் கன்னிப்பெண்கள் பரண்மீது நின்று வேடிக்கை பார்ப்பர்.[13]

இளைஞர்கள் தொழுவத்துள் பாய்ந்தவுடன் ஏறுகளைத் தழுவி அடக்க முற்படுவர். அவை, சில இளைஞர்களைக் குத்திச் சாய்க்கும்; சிலருடைய குடர்களை வெளியே தள்ளச் செய்யும்; குடர்கள் சில எருதுகளில் கொம்புகளில் சுற்றிக் கொள்வதும் உண்டு. ஏறுகளை அடக்கும் இளைஞர்களை ஆயரும், ஆய்ச்சியரும் பாராட்டுவர். ஏறு தழுவலில் ஈடுபடாத இளைஞனை ஆயர்மகள் கணவனாக ஏற்கமாட்டாள்! இதனை,

கொல்லேற்றுக் கோடு அஞ்சுவானை மறுமையும்
புல்லாளே ஆய மகள் **(கலி.108)**

---

12. சிலப்.17, எடுத்துக்காட்டு.
13. கலி.102, 103.

என்பதனால் அறிகிறோம். இறுதியில் ஆயமகளிர் கைகோத்துக் குரவைக்கூத்து ஆடுவர் (கலி.101–104) இத்தகைய சிறப்பு வாய்ந்த 'ஏறு தழுவல்' என்னும் அரிய போட்டியில், வெற்றி பெறுகின்ற ஆண் மகனுக்கே, தங்கள் மகளை அக்காலத்திய ஆயர்குடியைச் சேர்ந்தோர், திருமணம் செய்து கொடுத்த செய்தியினை அறிகின்றோம்.

கண்ணன் ஏறு தழுவல்

ஆயர்தம் குலக்கொடியாகிய நப்பின்னையை மணப்பதற்காகக், கண்ணன் அவளுடைய தந்தை வளர்த்துவந்த ஏழு கொடிய எருதுகளை அடக்கினான். இச்செய்தியை ஆழ்வார்களும் பிற்காலப் புலவர் சிலரும் எடுத்துரைத்துள்ளனர். மணங்கமழும் பூங்கோதையாகிய நப்பின்னையை மணம் புரிந்து கொள்ளுவதற்காக, முரட்டுக்காளைகள் ஏழினை அடக்கியவன் கண்ணன் எனும் கருத்தமைய,

வம்புஅவிழ் கோதை பொருட்டா
மால்விடை ஏழும் அடர்த்த
செம்பவளத் திரள் வாயன் **(நா.திவ்.பிர.2944)**

என்றும்

தோளிசேர் பின்னை பொருட்டு
எருதுஏழ் தழீஇக்
கோளியார் கோவலனார் **(மேலது, 3022)**

என்றும்

ஈட்டிய வெண்ணய் தொடுவுண்ணப் போந்து
இமில்ஏற்று வன்கூன்
கோட்டிடை ஆடினை கூத்து, அடல் ஆயர்தம்
கொம்பினுக்கே **(மேலது, 2498)**

என்றும்

காம்பணை தோள் பின்னைக்கா
ஏறுடனேழ் செற்றதுவும் **(மேலது, 2835)**

என்றும்

நிரையினால் குறைவில்லா நெடும்பணைத் தோள்
மடப்பின்னை
பொறையினாள் முலையணைவான் பொருவிடைஏழ்
அடர்த்துகந்த **(மேலது, 3087)**

என்றும் நம்மாழ்வார் போற்றிப் பாடியுள்ளார். இச்செய்தியை

தூயக நங்குழல்நல் தோகைம யிலனைய
நப்பினை தன் திறமா நல்விடை ஏழ்அவிய
நல்லதி றலுடைய நாதனும் ஆனவனே **(மேலது, 70)**

என்று பெரியாழ்வாரும் குறிப்பிட்டுள்ளார்.

பிற்காலப் புலவரான பிள்ளைப் பெருமாள் ஐயங்கார் அவர்கள்

நப்பின்னையாம்
விரகதத்தைக்கு விடையேழ் தழுவின வேங்கடவன்
(திருவேங்கடத் தந்தாதி 93)

என்று திருவேங்கடத்தவனைப் போற்றுகின்றார்.

கண்ணன் ஏறு தழுவிய வரலாற்றை, ஆழ்வார்களின் பாசுரங்களிலிருந்து நாம் விரிவாக அறிய இயலவில்லை. ஆனால் அவற்றிற்குச் சிறப்புமிக்க உரை விளக்கம் வரைந்த அறிஞர் பெருமக்கள் இதை விரித்துரைத்துள்ளனர்.

> தாழ்விற்கு எல்லையான ஆயர்குலத்திலே கிருஷ்ணனாக வந்து பிறந்து தன்னைப் (நப்பின்னை) பெறுகைக்குச் (கன்யா) சுல்கமாக இட்ட யமனை ஒத்தவையான இடபங்களின் கொம்புகளின் இடையிலே கருமாறிப் பாய்ந்தாற் போல[14]

என மணவாள மாமுனிகள் அறிவிக்கின்றார். மற்றும் திருப்பாவை வியாக்யானங்களிலிருந்து கண்ணனுடைய வளர்ப்புத் தாயாகிய இடைக்குல மடந்தை யசோதையின் தமையன் கும்பகன் என்பது தெரியவருகிறது. அவனுடைய தொழுவத்தில் ஏழு முரட்டுக்காளைகள் இருந்தன; அவை பசுக்களுக்கும், மக்களுக்கும் பெருந்துன்பம் செய்து வந்தன. கும்பகன், அக்காளைகளை அடக்குவோருக்குத் தன் மகள் நப்பின்னையைத் திருமணம் செய்து கொடுப்பதாக அறிவித்தான். ஏற்கனவே, மாமன் மகளிடத்து மையல் கொண்டிருந்த கண்ணன், அக்கொடிய காளைகளை அடக்கி, நப்பின்னைக்கு மாலை சூட்டினான் என்னும் செய்திகளை அறிகிறோம்.[15] இப்பெரியார்களின் கூற்றிலிருந்து, நப்பின்னை ஆயர்குடியைச் சேர்ந்தவள் என்பது தெளிவாகப் புலனாகின்றது.

ஆனால், சம்ஸ்கிருத மொழியில் உள்ள பாகவதம் (ஆறாம் நூற்றாண்டு) வேறுவகையாக இச்செய்தியைச் சொல்லுகிறது. கோசல

---

14. ஆசாரீய ஹிருதயம், ப.304.
15. திருப். வியாக்., பக்.245-48.

நாட்டு அரசனான நக்கினசித்து என்பவனுக்குச் 'சத்தியவதி' எனும் அழகிய மகள் ஒருத்தி இருந்தாள். அரசன், தன்னுடைய மந்தையில் உள்ள ஏழு காளைகளை அடக்கிப் பிடித்துக் கட்டுபவனுக்குத், தன்னுடைய மகளைத் திருமணஞ் செய்து கொடுப்பதாக அறிவித்தான். இதனையறிந்த கண்ணபிரான், அங்குச் சென்று காளைகளை அடக்க நினைத்தார். அவ்வெருதுகள், காலநேமி என்னும் அசுரனுடைய பிள்ளைகள் என்பதை அவர் அறிந்தார். எனவே, தாம் தனித்தனியாக ஏழு வடிவங்கொண்டு, அவற்றைப் பிடித்துக்கட்டி, அரசனிடம் அவர் சென்றார். தம் மகளை அவ்வரசன் கண்ணனுக்குத் திருமணம் செய்து கொடுத்தான். அவ்வரசிளங் குமரியான சத்தியவதி, கண்ணனுடைய தேவியர் எட்டுப் பேருள் ஒருத்தியாக விளங்கினாள் என்பது பாகவதத்தால் தெரிய வருகிறது.

இவ்வடமொழி நூலின் வழிவந்த பாகவத புராணங்கள் தமிழில் மூன்று உள்ளன. இவற்றுள் காலத்தால் முந்தியது **செவ்வைச் சூடுவார்** (பதினாறாம் நூற்றாண்டு) இயற்றியருளிய பாகவதம். அதே நூற்றாண்டின் பிற்பகுதியில் நெல்லிநகர் **அருளாளதாசர்** எனும் **மதுரகவி வரதராசர்** என்பவரும் பாகவத புராணத்தைத் தமிழில் பாடியுள்ளார். பதினெட்டாம் நூற்றாண்டில் ஆரியப்பப் புலவர் என்பவர் பாகவத புராணத்தைத் தமிழாக்கம் செய்துள்ளார். இவர்களுள் செவ்வைச் சூடுவாரும் ஆரியப்பப் புலவரும், நப்பின்னையைப் பற்றி ஒன்றுமே கூறவில்லை! ஆனால், கண்ணன் எருதுகள் ஏழினை அடக்கி, சத்தியவதியை மணம் புரிந்த வரலாற்றை அவர்கள் விளக்கியுள்ளனர்.

வரதராசர், நப்பின்னையைப் பற்றிய செய்திகளைத் தம் நூலில், தனிப்படலமாக அமைத்துள்ளார். தம் நூலுள், நப்பின்னைப்படல (44அத்)த்துள் ஆழ்வார்களும், வியாக்கியான ஆசிரியர்களும் குறித்துள்ள நப்பின்னையின் வரலாற்றுச் செய்திகளைத் தொகுத்து, நயமிக்க நல்லதொரு காதற் காப்பியமாக வரதராசர் படைத்துள்ளார். அதில், யசோதையின் தமையன் கும்பகன் மிதிலையில் வாழ்ந்த ஆயர் தலைவன் என்றும், அவனுடைய செல்வத் திருமகளே நப்பின்னை என்றும், அப்பொழுது மிதிலையை வெகுலாசுவன் என்னும் அரசன் ஆண்டு வந்தான் என்றும், அவனுடைய படைகளால் கும்பகனுடைய முரட்டுக் காளைகளை அடக்க இயலவில்லை என்றும் இவர் குறிப்பிட்டுள்ளார். அவற்றைக் கண்ணன் அடக்கிவிடுகிறான். நப்பின்னையை அதற்குப் பரிசாகப் பெறுகிறான். தமிழ்நாட்டுச் சான்றோர்கள் போற்றி வளர்த்த தமிழ் மரபுவழி வந்த கதையை, வடநாட்டு மரபுவழி நிகழ்ச்சியாக்கிப் பாடிய சிறப்பு, புலவர் வரதராசருக்கே உரியதாகும். இதனோடு இவர் அமையவில்லை. தம் நூலின் 85ஆம் இயலுள் நக்கின ஜீதி

(சத்தியவதி)யின் திருமணத்தை, முன்னர்க் குறிப்பிடப்பட்ட பாகவத நூல்கள் வழிநின்று விளக்குகின்றார். இவ்வாறு, இரு பெண்களை (நப்பின்னை, சத்தியவதி) ஏறு தழுவியதன் மூலம், மனைவியராகக் கண்ணன் அடைந்ததாக இவர் கூறுகிறார். இதற்கு வடமொழி நூல்களில் எத்தகைய ஆதாரமும் கிடைக்கவில்லை. தமிழ்நாட்டுப் பழங்கதையினைப் போற்றும் முகத்தான், தம் நூலுள் 'நப்பின்னைப் படலத்தினை'ச் சேர்த்துப், பாகவதக் கதையில் இவ்வாசிரியர் புதுமையைப் புகுத்தியுள்ளார். இதிலிருந்து நப்பின்னைப் பிராட்டியார் ஆயர்குலமகளே என்பதும், கண்ணன் விடை தழுவி அவரை மணந்தது ஆயர்பாடியில் அப்பெருமான் வளர்ந்தருளிய காலத்து நிகழ்ச்சியாகத் தமிழ்நாட்டு மக்கள் போற்றிவந்த வரலாறு என்பதும் எளிதிற் புலனாகும்.[16]

குரவைக் கூத்து

*முல்லை (காடு) நில அல்லது குறிஞ்சி (மலை) நிலப்பகுதியில் வாழ்ந்த மகளிர், தம்முள் கைகோத்து ஆடிய ஒருவகைக் கூத்தினைக் **குரவைக்கூத்து** என்பர். காதல் உணர்வையும், வெற்றிச் சிறப்பையும் பொருளாகக் கொண்டு பாடப்படுவன குரவைப்பாடல்கள். ஏழு மகளிரோ, ஒன்பது மகளிரோ ஒருவரோடு ஒருவர் கைகோத்து, குரவைப் பாடல்களைப் பாடிய வண்ணம் ஆடிய கூத்தே குரவையாகும்.*[17]

*இளங்கோவடிகள், ஆய்ச்சியர் ஆடிய குரவைக் கூத்தினைச் சொல்லோவியமாகத் தீட்டிக் காட்டுகின்றார். அக்குரவைக் கூத்தில், ஏழு மகளிர் வட்டவடிவமாகக் கைகோத்து நின்று, திருமாலின் திருவருளை வேண்டி, அவரைப் போற்றிப்பாடி வணங்குகின்றனர். அவ்வேழு பெண்களுக்கும், பழந்தமிழிசைப் பண்களின் பெயர்களான குரல், துத்தம் கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் என்று மேற்குத் திசையில் தொடங்கி இடமுறையாகப் பெயரிடுகின்றாள் மாதரி. பின்னர், **குரல்** என்னும் பண்ணின் பெயரிடப்பெற்ற பெண்ணை, **மாயவன்** (கண்ணன்) என்றும், அவளுக்கு அடுத்துள்ள **துத்தம்** எனும் பெயரிடப்பட்ட பெண்ணை நப்பின்னையாகவும், அடுத்த மூன்றாவது இடத்தில் உள்ள **இளி** எனும் பெயரிடப்பட்ட பெண்ணைப் பலராமனாகவும் கொண்டு, அப்பெண்கள் குரவைக்கூத்து ஆடத் தொடங்குகின்றனர். மற்றப் பெண்களைக் கண்ணனோடு ஆடிய ஆயமகளி (கோபிய) ராகக் கொண்டிருத்தல் வேண்டும். பின்னர், அவ்வட்டத்தில் கண்ணனாகக் கருதப்பட்ட பெண்ணின்*

16. திருப்.வியாக். ப.247.
17. இராகவையங்கார், மு.ஆராய்ச்சித் தொகுதி, ப.60.

கழுத்தில் துளசி மாலையினை அணிந்து நப்பின்னையைப் போற்றி, குரவைக்கூத்தை அவர்கள் ஆடத் தொடங்கினர். ஆடலோடு முல்லைப்பண் (மோகனம்) பாடலும் கலந்து பக்தி மணம் வீசலாயிற்று. அக்கூத்து ஆயர்பாடியில், தாதாகிய எருப்பொருந்திய மன்றத்தில் யசோதை கண்டு மகிழ, கண்ணன் நப்பின்னையோடும் பலராமனோடும் ஆடிய திருவிளையாடல் போன்று தோன்றுகிறது என்று கண்டவர் வியந்தனர்.[18]

இளங்கோவடிகள் காட்டும் இக்குரவைக்கூத்து, அன்று ஆயர்பாடியில் (துவாரகையில்), தம் அண்ணனோடும், அன்புக்கினிய நப்பின்னையோடும் சேர்ந்து ஆடியதை, நம் கண்முன் கொண்டுவந்து நிறுத்துகிறது. இதனை 'வால சரித நாடகம்' என்றும், 'இராசக்கிரீடை' என்றும் வடமொழிவாணர் குறிப்பிடுவர். கண்ணன் சிறுபிள்ளையாக இருந்த காலத்தில், பலராமனோடும், நப்பின்னையோடும் ஆயர்பாடியிலும், தொழுநை (யமுனை) யாற்றிலும், ஆடிப்பாடி மகிழ்ந்த வரலாற்றை, **வாலசரிதை** *நாடகமாகப் போற்றுவது வழக்கமாகும்.*

மாயவன்றன் முன்னினோடும் வரிவளைக்கைப் பின்னையொடும்
கோவலர்தஞ் சிறுமியர்கள் குழற்கோதை புறஞ்சோர
ஆய்வளைச்சீர்க் கடிபெயர்த்திட்டு அசோதையார் தொழுதேத்தத்
தாதெருமன் றத்தாடுங் குரவையோ தகவுடைத்தே (சிலப்.17:28)

ஆயர்பாடியில் எருமன்றத்து
மாயவனுடன் தம்முனாடிய
வாலசரிதை நாடகங்களில்
வேனெடுங்கண் பிஞ்ஞையொடாடிய
குரவையாடுதும் யாமென்றாள் (மேலது 17 கருப்பம்)

என்னும் பகுதிகளால் இதை அறிகிறோம்.

கண்ணன் யமுனை நதியில், நப்பின்னையோடு ஆடிய ஆடல்களைச் சிலப்பதிகாரம் குறிப்பாகச் சுட்டுகிறது. யமுனையாற்றில், ஒரு நாள் மாலைப்பொழுதில் தன்னை, வஞ்சித்த கண்ணனைத் தன்னழகினால் மயக்கி, அவன் நெஞ்சத்தை நப்பின்னை கொள்ளைகொண்ட காதல் களியாட்டத்தை நயமுற எடுத்துரைக்கின்றார் இளங்கோவடிகள்.

வஞ்சஞ் செய்தான் தொழுநைப் புனலுள்
நெஞ்சங் கவர்த்தாள் நிரையென் கோயாம்
நெஞ்சஞ் கவர்ந்தாள் நிறையும் வளையும்
வஞ்சஞ் செய்தான் வடிவென் கோயாம் (சிலப்:17:பாட்டு 3)

18. சிலப்.17, அடியார்க்கு. உரை.

இப்பண்டை வரலாற்று நிகழ்ச்சியைப், பழமொழி நானூற்றின் ஆசிரியரும்,

விழுமிழை நல்லார் வெருள்பிணை போல் நோக்கம்
கெழுமிய நாணை மறைக்கும் - தொழுநையுள்
மாலையுள் மாலை மயக்குறுத் தாளஃதால்அச்
சால்பினைச் சால்பறுக்கு மாறு **(பழமொழி 12)**

என்று குறிப்பிட்டுள்ளார். இந்நிகழ்ச்சியின் விளக்கத்தை, இன்றைக்கு நமக்குக் கிடைத்திருக்கும் பாகவதம் போன்ற தமிழ் நூல்களிலும், சம்ஸ்கிருத மொழியில் உள்ள பாகவதம், விஷ்ணுபுராணம், பிரமாண்ட புராணம், மத்சய புராணம், பிரம வைவார்த்த புராணம் போன்ற நூல்களிலும் நாம் காண முடியவில்லை. பண்டைத் தமிழ் மக்களிடையே வழங்கிய அம்மரபினைக் கால வெள்ளம், நம் நினைவிலிருந்து அடித்துச் சென்றுவிட்டது போலும்!

நப்பின்னையோடு கண்ணன் ஆடிய குரவைக் கூத்தினை,

மாமணி வண்ணனும் தம்முனும் பிஞ்ஞையும்
ஆடிய குரவையிஃதாம் **(மணி.19:65-66)**

என்று சாத்தனாரும் குறிப்பிடுகின்றார். இவ்விரு தமிழறிஞர்களுக்குப் பிறகு திவ்வியப் பிரபந்த உரைகாரர்களே, இக்குரவைக் கூத்தைப் பற்றிப் பேசுகின்றனர். அவர்கள் பெரிதும் (அக்காலத்தில் தமிழில் பாகவதம் தமிழாக்கம் செய்யப்பட்டதாகத் தெரியாததால்), வடமொழிப்புராணங்களில் கூறப்படும் செய்திகளை அடிப்படையாகக் கொண்டே விளக்கம் தந்துள்ளனர். எனவே, தமிழ்நாட்டின் பண்டை மரபினை அவற்றில் காண இயலவில்லை!

நப்பின்னை ராதையா?

கி.பி.பத்தாம் நூற்றாண்டிற்குப் பிறகு, வட இந்திய மொழிகளில் கண்ணனுடைய காதலியாக, ராதை எனும் ஆயர்மகள் சித்திரிக்கப்படுகிறாள். அவள், நம் நப்பின்னையைப் போன்ற பேரழகியாகவும் கலையரசியாகவும் காட்சி தருகிறாள். அவள், நம் தேசியக் கற்பனையின் ஒரு 'புதிராக' இருக்கிறாள். அவளுடைய தோற்றம் பற்றி ஒன்றும் தெளிவாகத் தெரியவில்லை. கண்ணனுடன் சிறு வயதில், ஆயர்பாடியில் ஆடிப்பாடி மகிழ்ந்த கோபியருள், கண்ணனுடைய உள்ளத்தைக் கவர்ந்த ஓர் அழகியைப் பாகவத புராணம் சிறப்பித்துப் பேசுகிறது. அவள் கண்ணனைவிட வயதில் மூத்தவள்; திருமணம் ஆனவள். அவளிடம் நெஞ்சைப் பறிகொடுத்த கண்ணன் அவளைத் தம் காதலியாகப் போற்றி வாழ்ந்தான். ஒருநாள்,

அவளைத் தனியே காட்டிற்குள் அழைத்துச் சென்று, கண்ணன் களியாட்டத்தில் ஈடுபட்டதாகவும் அப்புராணம் பேசுகிறது.[19]

தொத்தார் பூங்குழல் கன்னி யொருத்தியைச்
சோலைத் தடங்கொண்டு புக்கு
மூத்தார் கொங்கை புணர்ந்திரா நாழிகை
மூவேழு சென்றபின் வந்தாய் **(நா.திவ்.பிர.232)**

எனப் பெரியாழ்வார் குறிப்பிடும் செய்தியும் மேற்கண்ட பாகவத புராணக் கருத்தும் ஒன்றாக இருத்தல்கூடும். இந்த கோபியைத் தான், கி.பி.ஐந்தாம் நூற்றாண்டிற்குப் பின்னர் வடமொழியில் இயற்றப்பட்ட பாகவத புராணத்திலும், பத்ம புராணத்திலும், பிரம வைவார்த்த புராணத்திலும் ராதையாகக் குறிப்பிட்டுள்ளனர்.[20]

இளங்கோவடிகளும் ஆழ்வார்களும் கண்ட நப்பின்னை, கன்னிப் பெண்ணாவாள்; அவளைக் காதலித்த கண்ணன், அவளைத் திருமணம் செய்துகொள்ள, எருதுகள் ஏழினை அடக்கியதாகக் கூறுவது தமிழ்நாட்டு மரபாக இருந்து வருகிறது. தமிழகத்து நப்பின்னைப் பிராட்டியே, வடஇந்திய இலக்கியங்களில் சிற்சில மாற்றங்களோடு ராதையாகப் புது வடிவம் கொடுக்கப்பட்டாள் என்னும் உண்மை, வருங்காலத்தில் செய்யப்படும் ஆராய்ச்சிகளால் வெளிப்படுமென நம்புகின்றேன்.

மாமல்லபுரத்து சிற்பங்களுள் 'கோவர்த்தன கிரி' சிற்பம் அமைந்த மண்டபம் நம் கருத்தைக் கவருவதாகும். அச்சிற்பத்துள் கோவர்த்தன கிரியைக்குடையாகப் பிடித்து, ஆயர்களுக்கு அடைக்கலம் கொடுக்கின்றான் கண்ணன். அந்நிலையில், அவனருகில் நாணமுடன் காதல் வயப்பட்ட நங்கை ஒருத்தி நிற்கின்றாள்! அவள் யார்? தமிழ்நாட்டுத் தொல்பொருள் ஆராய்ச்சியாளர் அவ்வழகியை **நப்பின்னை** என்பர். வடநாட்டுத் தொல்பொருள் ஆய்வாளர்களோ அவளை ராதை என்று போற்றுகின்றனர். அவள் யார்...? அவள்தான் கண்ணனின் காதலி!

---

19. Bhagavata Puranam, Eng.Trans Swami Vijananda, Allahabad, 1921-23; 10:30-31.
20. Ibid; Padma Purana; patala Khanda, 76: 15-17
Brahmavaivartta Purana, 15: 148, 58: 71: 48:75.

6

முற்போக்குக் கல்வியின் முன்னோடி

'மனிதனைப் பகுத்தறிவுடைய விலங்கு' என்பர். இதனால், விலங்கிலிருந்து மனிதன் வேறுபடவும், சிறப்புறவும் காரணமாக இருப்பது அவனுடைய பகுத்தறிவே என்பது புலனாகின்றது. நல்லதன் நன்மையையும், தீயதன் தீமையையும் தன் சிந்தனைத்திறத்தால், வேறுபடுத்திக் காணும் அறிவுத்திறனை மனிதன் பெற்றுள்ளான்.

இருவகை அறிவு

அறிவுத்திறனை, எல்லா மனிதர்க்கும் இயற்கையில் பொதுவாக அமைந்துள்ள ஒரு திறனாகவே உளவியல் அறிஞர் கூறுவர். அத்திறன், அவரவருடைய வாய்ப்பு வசதிகளுக்கேற்ப, வளர்ச்சியும் மலர்ச்சியும் பெறுகின்றன. மனிதனுடைய அறிவுத்திறனை இரண்டு வகையாகப் பாகுபடுத்தலாம். அவை இயற்கை அறிவுத்திறன், செயற்கை அறிவுத்திறன் என்பன. இயற்கை அறிவுத்திறனை, 'நுண்ணறிவு' எனவும், செயற்கை அறிவுத்திறனை 'நூலறிவு', 'பட்டறிவு' எனவும் வேறுபடுத்திக் காட்டலாம்.

நுண்ணறிவு என்பது எதையும் நுட்பமாகக் கூர்ந்து நோக்கி, ஆராய்ந்து உண்மையை வெளிப்படுத்தும் திறன், இதனை 'மதிநுட்பம்' என வள்ளுவர் சுட்டுவார். இவ்வறிவினை மனிதன் இயற்கையாகப் பெற்றிருந்தாலும், இதனை வளர்த்துக் கொள்ள உதவும் கருவியாகப் பயன்படுவது கல்வியாகும். நூலறிவு என்பது கல்வியை அடிப்படையாகக் கொண்டது. மனித மனத்தில் பொதிந்தும், புதைந்தும் கிடக்கும் அறிவுத்திறனைக் கல்லியெடுத்து – தோண்டியெடுத்து, அதன் ஊற்றுக்கண்ணைத் திறந்து காட்டுவது கல்வி. எவ்வளவு ஆழமாக "மணற்பரப்பில் கிணறு தோண்டுகின்றோமோ அவ்வளவுக்கு ஏற்ப, நீரும் சுரக்கும். இதைப்போன்று, எத்துணை அளவிற்கு நாம் ஆழ்ந்து பல்வகை நூல்களைக் கற்கின்றோமோ அவ்வளவிற்கு, நம் அறிவும் சுரக்கும்" என்பது தெய்வப்புலவர் திருவள்ளுவரின் திடமான முடிவு. எனவே, நூலறிவினை – பல நூல்களைக் கற்பதன் மூலம் பெறும் அறிவினை

– ஒவ்வொரு மனிதனும் பெற முயலவேண்டும் எனச் சொல்லத் தேவையில்லை. முந்தியதை நிலைமட்ட அறிவு (Vertical Knowledge) எனவும், பிந்தியதைக் கிடைமட்ட அறிவு (Horizontal Knowledge) எனவும் இன்றைய கல்வி இயலார் கூறுவர்.

இதனால், மனிதனுக்குக் கல்வியினைக் கண்போன்றதாகப் போற்றுவது மரபு. உலகை நோக்க, வாழ்க்கையைப் புரிந்து கொள்ள, தன்னைத்தான் உணர்ந்துகொள்ள ஒளியை – அறிவு ஒளியைக் கல்வி தந்துதவுகிறது; நம் உணர்ச்சிகளைக் கல்வி நெறிப்படுத்துகிறது; புலன் நுகர் வேட்கைகளைக் கட்டுப்படுத்துகிறது; உண்மையும் உயர்வும் வாய்ந்த எண்ணங்களின் எழுச்சிக்கும், இதயத்தின் மலர்ச்சிக்கும் தூண்டுகோலாகிறது; ஆழ்ந்த சமயவுணர்வையும், தூய ஒழுக்கவுணர்வையும் ஊட்டவல்லது கல்வி என்று நம் முன்னோர்கள் கருதினர்.

இதனால், கல்வி கற்க வேண்டியதன் முக்கியத்துவத்தை கல்வி கற்பிக்கப்பட வேண்டியதன் முக்கியத்துவத்தைத் தொன்றுதொட்டு உலகப் பேரறிஞர்கள் அனைவருமே, அழுத்தம் திருத்தமாக அறிவுறுத்தியுள்ளனர். மனிதனை மனிதனாக, மாண்புமிகு மனிதனாக, சான்றோனாக வாழவைக்க வழிகாட்டும் திருக்குறளைப் படைத்தவர் திருவள்ளுவர். அறம் பாடவந்த அவ்வறவோர், ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பே, கல்வியின் சீரையும் சிறப்பையும் நன்குணர்ந்திருந்ததோடு, சமுதாய வாழ்க்கையிலும் தனி வாழ்க்கையிலும் மனிதன் ஏற்றமும் ஊற்றமும் பெற, உறுதுணையாக இருப்பது கல்வி' என்பதைப் பலவகையாக எடுத்துரைத்துள்ளார்.

கல்வியின் சிறப்பு

திருக்குறளின் பொருட்பாலில், 'கல்வி' எனும் அதிகாரத்தில் அதன் பண்பையும் பயனையும், அதைப் பெறவேண்டிய முறைகளையும் அவர் தெளிவுறுத்தியுள்ளார். அதன் ஆட்சியையும் மாட்சியையும் **கல்வி** எனும் ஓர் அதிகாரத்தில் அடக்கிவிட முடியாமையால், **கல்லாமை, கேள்வி, அறிவுடைமை** எனும் அதிகாரங்களை அடுத்தடுத்து வைத்து, இவற்றின் வாயிலாகக் கல்வியின் முக்கியத்துவத்தை அவர் உலகிற்கு உணர்த்துகிறார்.

கல்வியின் சிறப்பை உடன்பாட்டு முறையால் முன்னதிகாரத்தில் எடுத்து விளக்கிய திருவள்ளுவர், 'கல்லாமை' எனும் இவ்வதிகாரத்தில் கல்வியைக் கற்காமல் போனால் உண்டாகும் இழிவுகளையும், தீமைகளையும் எதிர்மறை முகத்தான் இனிது விளக்குகின்றார். எனவே, **கல்லாமை** எனும் அதிகாரம் கல்வியைக் கற்காமையால் உண்டாகும் தீமைகளைச் சொல்லுவதாக அமைந்துள்ளது.

நூலறிவு

தன் மகன், கற்றோர் அவையின்கண் அறிவுநலனும், ஆராய்ச்சித்திறனும், சொல்வன்மையும் வாய்ந்த அறிஞனாகத் திகழவேண்டும்; பேரும் புகழும் பெற்றுச் சிறப்புற வேண்டும் என்பது பெற்றோர்களின் – சிறப்பாகத் தந்தையின் ஆவலாக அக்காலத்தில் இருந்தது. இன்றைக்கும் இந்த ஆவல் கொண்ட பெற்றோர்கள் இல்லாமல் போகவில்லை! அவர்களுடைய இந்த ஆவலே, மகனின் எதிர்காலத்தைப் பற்றிய உண்மையான – சிறந்த – ஆவலாக அமைகிறது எனலாம். பெரியோர்கள் கூடியுள்ள அவையில் சிறப்புற வேண்டுமானால், அதற்குக் **கல்விப்பயிற்சி** முக்கியமாக வேண்டப்படுவதாகும். நாலு பேர் மத்தியில் 'எதைச் சொல்ல வேண்டும்? எப்படிச் சொல்லவேண்டும்?' என்பதை அறிய உதவுவது கல்வி! இவற்றை அறியாமல், ஒருவன் மனம்போன போக்கில் பேசுவானாகில், அவனுக்குப் 'போதிய அளவிற்குக் கல்வியின் வாசனை இல்லை' என உலகம் இழிவாகப் பேசும்.

ஒவ்வொரு விளையாட்டிற்கும் பல்வேறு பொருள்கள் தேவைப்படுகின்றன; அவற்றிற்கு என்று சில விதிமுறைகளும் உள்ளன. கால்பந்து (Foot-ball) விளையாட்டை எடுத்துக் கொள்ளுவோம். அதற்கு முதலில் ஒரு பரந்த மைதானம், ஒரு பெரிய பந்து, இரு எல்லை வளைவுகள், ஒவ்வொரு பக்கமும் ஆட்டக்காரர்கள் பதினோருபேர் தேவைப்படுகின்றனர். இவை இருந்தால்தான், கால்பந்து விளையாட்டைத் தொடங்கமுடியும். இவற்றுள் ஒன்று குறைந்தாலும் கால்பந்து ஆட்டம் விளையாட முடியாது! இது எல்லாருக்கும் தெரிந்த உண்மை! இதைப்போன்றவைதாம் சதுரங்கம், தாயம், கேரம் போன்ற எல்லா விளையாட்டுகளுமாகும்.

இக்கருத்தினைத் திருவள்ளுவர்,

அரங்கின்றி வட்டாடி அற்றே நிரம்பிய
நூலின்றிக் கோட்டி கொளல் **(குறள்.401)**

எனத் தெரிவிக்கின்றார்.

அறிவு பெருகுவதற்கும், வளர்வதற்கும், அதிகரிப்பதற்கும் காரணமாக உள்ளவை நல்ல நூல்கள். ஒருவன் அவற்றைத் தேடிக் கற்கவேண்டும். அப்படி கற்காத ஒருவன், கற்றறிந்தோர் – அறிவில் சிறந்தோர் கூடியுள்ள அவையில் – சபையில் – புகுந்து, ஒன்றைப் பேசுதல் – சொல்லுதல் – எடுத்துரைத்தல் – கோடு கிழித்துக் கட்டங்களை வகுத்துக் கொள்ளாமல், ஒருவன் சதுரங்கம் – ஆட – வட்டு ஆட – முயலுவதற்குச் சமமாகும் என்பது வள்ளுவரின் கருத்தாகும்.

இதனால், நூலறிவு ஒவ்வொருவருக்கும் இன்றியமையாததேவை என்பது புலனாகிறது அன்றோ? கல்வியறிவு இல்லாத ஒருவன், ஒரு சபையில் எழுந்து பேச விரும்புதல் பெண்மை நலன் குறைந்த ஒரு பெண், பெண்மையின் இயல்புகள் நிறைந்தவளாக வாழ விரும்புவதைப் போன்ற கேலிக்கூத்தாகிவிடும் எனப் பாலியல் பண்போடு, வாழ்வியலை வள்ளுவர் உணர்த்துவதும் ஆழ்ந்து சிந்திக்கத்தக்கதாகும்.

அறிவில் சிறந்தோர் – கற்றோர் – கூடியுள்ள சபைக்குக் கல்லாதவன் வரலாம்; வாயைத் திறக்காமல் அமைதியாக அங்குப் பேசப்படுவதைக் கேட்டுவிட்டுச் செல்லலாம். யாரும் அவனை, அப்பொழுது 'முட்டாள்' என நினைக்கமாட்டார்கள். ஆனால், அவன் வாயைத் திறப்பானானால், அவன் எத்தகையவன் என்பது வெளிப்பட்டுவிடும். எனவே, கல்வி கற்காதவர் சபைக்கு வந்தால், வாயைத் திறக்காமல் அமைதியாக இருக்கவேண்டும். அப்பொழுது எல்லாரும், அவர்களை 'மிகவும் **நல்லவர்கள்**' எனவே நினைத்துக் கொண்டிருப்பர்.

கல்லா தவரும் நனிநல்லர் கற்றார்முன்
சொல்லா திருக்கப் பெறின் **(குறள்.403)**

என்பது வள்ளுவர் வாய்மொழி. இவற்றால் 'கல்வி கற்காதவர் சான்றோர் சபையில் பேசுவதற்கு உரிமை அற்றவர்' என்பது தெளிவாகிறது.

கல்வியின் பயன்

'பல நூல்களைக் கற்று, அறிவுத்தெளிவு பெறுவது செயற்கைமுறையால், பயிற்சியால், பழக்கத்தால் உண்டாவது அல்லவா?' எனும் எண்ணம் எழலாம். "இந்தக் கல்வியைப் பெறாமலேயே – எழுதப் படிக்கத் தெரியாமலேயே – உலகில் அறிவில் சிறந்த மனிதர்கள் – படிக்காத மேதைகள் இருக்கிறார்களே! அவர்கள் எல்லாம் 'செல்லும் சொல்லும்', 'வெல்லும் சொல்லும்' வாய்ந்தவர்களாக, வாழ்க்கையில் செல்வமும் செல்வாக்கும் பெற்றவர்களாக விளங்கவில்லையா?" என்னும் ஐயம் நமக்குத் தோன்றாமல் போகாது.

செயற்கை அறிவு, நூல் அறிவு, பட்டறிவு எனும் அனுபவ அறிவு என இரு வகையாகும் என்பதை நாம் முன்னரே கண்டோம். நம் மூதாதையர் பெற்ற அனுபவங்கள் அனைத்தும் நூல்களின் வடிவிலே நமக்குச் சேமித்து வைக்கப்பட்டுள்ளன. எழுதப்படிக்க நாம் கற்றுக்கொண்டால், எளிதில் அந்நூல்களைக் கற்று, அவ்வனுபவ அறிவின் பயனைக் குறுகிய காலத்தில் முழுமையாக

நாம் பெறமுடியும். இது கல்வியினால் நாம் அடையக்கூடிய பெரும் பயனாகும்.

முறையான கல்வியறிவைப் பெறாத சில பெரியவர்கள், உலகில் சிறந்து விளங்குவது உண்மையே. அவர்கள் வாழ்க்கை எனும் கல்லூரியில் சேர்ந்து, உலகம் எனும் பல்கலைக்கழகத்தில் 'வெற்றி' எனும் அறிவைப் பெற்றவராவர். ஆனால், அவர்கள் அனுபவ அறிவைப் பெற்றுத் தெளிவதற்கு "எவ்வளவு துன்பங்கள் பட்டுள்ளனர்? எத்தனைத் தியாகங்கள் செய்துள்ளனர்? எவ்வளவு இழப்புக்கு ஆளாகியுள்ளனர்?" என்பதை நாம் அறிந்து கொள்ள முயலவேண்டும். அப்பொழுதுதான், அவர்கள் 'அனுபவ அறிவிற்குக் கொடுத்துள்ள விலை' எவ்வளவு மிகையானது? என்பது தெரியும். அதை நாம் தெரிந்து கொள்ளும்பொழுது, திகைப்பும் மலைப்பும் அடைவோம். இதனால்தான், திருவள்ளுவர் நமக்கு ஓர் எளிய வழியைக் காட்டுகிறார்.

'விளக்கில் கையை வைத்தால் சுடும்' என்பது நாம் அறிந்த உண்மை. ஆனால், சிறு குழந்தைக்கு அது தெரியாது. எனவே, குழந்தை விளக்கில் கையை வைப்பதற்குப் போகும்போது, நாம் அதைத் தடுத்து, 'விளக்கில் கை வைக்காதே! சுடும்' என்று எச்சரிக்கை செய்கிறோம். இதைப்போலவே, 'கல்வியறிவு' நமக்கு நாம் அனுபவ அறிவைப் பெறாமலே, தெளிவுபெற உதவும் என்பது வள்ளுவர் கருத்தாகும்.

சில சமயங்களில், கல்லாதவனின் அறிவுடைமை மிகச்சிறப்பாக இருக்கலாம். எனினும், கற்றறிந்த பெரியோர்கள் அவனை அறிவிற் சிறந்தவனாகக் கொள்ளமாட்டார்கள்.

கல்லாதான் ஒட்பம் கழியநன் றாயினும்
கொள்ளார் அறிவுடை யார் **(குறள்.404)**

என்பது வள்ளுவர் வாக்கு. ஏனெனில், கல்லாத ஒருவன் தன்னைத்தானே மதித்துக்கொள்ளும் மதிப்பு, அவன் நூல்களைக் கற்றோரிடம் சென்று பேசும்போது கெட்டொழியும்.

கல்லா ஒருவன் தகைமை தலைப்பெய்து
சொல்லாடச் சோர்வு படும் **(குறள்.405)**

மனிதரின் புறத்தோற்றத்தைக் கொண்டு 'இவர் அழகானவர்; இவர் அழகற்றவர்' எனக் கருதுவது உலக இயற்கை. ஆனால், உலகில் உள்ள எப்பொருளையும் அதன் பயன்பாட்டை – உள்ளுறு பயனை(Intrinsic Value)க் கருத்தில் கொண்டே, மதிப்பிட வேண்டும் என்பது உலகப்பேரறிஞர் பலருடைய கருத்தாகும். இவ்வகையில்,

உலகை நோக்குகின்றபொழுது, நமக்குப் பல புதிய உண்மைகள் புலனாகின்றன.

உலகப் பரப்பில், மூன்றில் ஒரு பங்கு நிலமாக உள்ளதை நாம் நன்கு அறிவோம். 'எவ்வளவு பரந்துபட்ட நிலப்பரப்பு?' என நாம் வியப்படையலாம். ஆனால், அந்தப் பரந்துபட்ட நிலம் முழுமையுமா மனிதனுக்குப் பயன்படுகிறது? அந்நிலத்தின் பெரும்பகுதி பொட்டல் காடாக களர்நிலமாகக் காட்சியளிக்கிறது! யாதோ ஒரு சிறு பகுதிதான், மனித இனத்தின் கொடிய நோயாகிய வயிற்றுப் பசியைத் தீர்க்க உதவும் விளைநிலமாகப் பயன்படுகிறது. களர் நிலத்தை யாரும் போற்றிக் காக்க மாட்டார்கள்! ஏனெனில், அதனால் யாருக்கும், எவ்விதப் பயனும் இல்லை.

இந்தக் களர் நிலத்தைப் போன்றவர்கள் தாம் கல்லாதவர்கள்! அவர்கள் மனிதத் தோற்றத்தோடு உள்ளனர். ஆனால், அவர்களால் யாருக்கு என்ன பயன்? ஒன்றும் இல்லை! இதனை,

உளரென்னும் மாத்திரையர் அல்லால், பயவாக்
களரனையர் கல்லா தவர் **(குறள்.406)**

எனும் குறட்பா தெரிவிக்கிறது.

பொம்மைகள்

'அரிது அரிது மானிடராய்ப் பிறத்தல் அரிது' என்பது ஔவையினுடைய அறநெஞ்சத்தின் துணிவாகும். ஆனால், மனிதனாகப் பிறந்தவன் வெறும் புறத்தோற்றத்தால் அழகும், கவர்ச்சியும் உடையவனாக மட்டும் இருந்தால், அதனால் அடையத்தக்கப் பயன் ஒன்றும் இல்லை. அவன் அறிவிலும் அழகனாக விளங்குவானானால், அவனுக்குப் பயன் பெரிதுண்டாகும்; நாட்டிற்கும் நன்மை விளையும். வெறும் தோற்றப்பொலிவால், ஒருவன் வாழ்க்கையில் நிலையான பயனை அடைய இயலாது.

அவன் மற்றவர்களால் ஒரு காட்சிப் பொருளாகவே மதிக்கப்படுவான். இவ்வகையில் அவனுக்கும் ஓர் அழகிய பொம்மைக்கும் என்ன வேறுபாடு? புற அழகு காலப்போக்கில் தீமைக்குத் தூண்டுதலாக, துன்பத்திற்கு நிலைக்களனாக அமையுமே ஒழிய, நல் வாழ்க்கைக்கு உதவிபுரியாது! இதனை,

நுண்மாண் நுழைபுலம் இல்லான் எழில்நலம்
மண்மாண் புனைபாவை யற்று **(குறள்.407)**

என வள்ளுவர் அறிவிக்கின்றார்.

நுட்பமான சிறந்த நூல்கள் பலவற்றையும், ஆராய்ந்து பார்க்கும் அறிவு இல்லாதவனுடைய நல்ல தோற்றத்தோடு கூடிய அழகு, மண்ணினால் சிறப்பாகச் செய்யப்பட்ட பதுமையின் அழகிற்குச் சமமாகும் என்பது அவருடைய கருத்தாகும்.

கல்லாதான் பெற்ற செல்வம்

உலக இயற்கை இருவகைப் பட்டதாகும். செல்வச்சீமான்களாகச் சிறப்புறுவோர் சிலர். அவர்களிடம் 'திருமகள்' திருநடம் புரிவாள். ஆனால், 'கலைமகள்' களிநடம் புரிவதில்லை. இது ஒருவகை உலக இயற்கை. மற்றொருவகை உலக இயற்கை நல்லவர்களாக விளங்கும் தெளிந்த அறிவுடைய அறிஞர்களும் கலைஞர்களும் வறுமையில் வாடுவதாகும். இவ்விருவகை உலக இயற்கையுமே சமுதாயத்தைச் சீர் குலைப்பன; அலைக்கழிப்பன. 'இவற்றுள் எது கொடியது?' என்னும் வினாவினை எழுப்பினால், பொதுவாக நாம், 'கற்றறிந்தவர் வறுமையில் வாடுவது கொடியது' என விடை கூறுவோம்.

திருவள்ளுவரோ, இதற்கு நேர்மாறாக விடை கூறுகிறார்! அக்குறளைப் பார்ப்போம்:

நல்லார்கண் பட்ட வறுமையின் இன்னாதே
கல்லார்கண் பட்ட திரு **(குறள்.408)**

கற்றறிந்த நல்லவர்களுக்கு ஏற்பட்ட வறுமையைப் பார்க்கிலும், கல்வியறிவில்லாதவர்களிடம் தங்கியுள்ள நிலைத்துள்ள – செல்வம் மிகுந்த துன்பத்தை உண்டாக்கும், அவனுக்கு மட்டுமா துன்பத்தைத் தரும்? அவன் வாழுகின்ற சமுதாயத்திற்கும், நாட்டுக்கும் கூடத் துன்பத்தைக் கொடுக்கும் என்கிறார் வள்ளுவர்.

'ஏன் துன்பம் தரும்? எவ்வாறு துன்பம் தரும்' எனும் கேள்விகள் நம் மனத்தில் எழுகின்றன.

கற்றவர்களுடைய வறுமை அவர்களுக்கு மட்டும்தான் (அவர்கள் குடும்பத்திற்கு மட்டும்தான்) துன்பத்தைத் தரும். கல்லாதவன் பெற்ற செல்வம் அவனைத் தீயவழிகளில் கொண்டு செலுத்துவதோடு நில்லாது, பிறருக்கும் தீமை தருவதாக அமையும். கற்றவர், கற்ற வண்ணம் ஒழுக்கமுடையவராக வாழ்வார்கள். இதனால், பிறருக்குத் தீமை உண்டாகாது என்பது திருவள்ளுவரின் கருத்தாகும்.

பொதுச் சொத்து

பண்டை உலகில், கல்வியை மனித இனத்தின் பொதுச்சொத்தாக்கி மனிதனாகப் பிறந்த ஒவ்வொருவனுக்கும் 'கல்வி கற்பது

பிறப்புரிமை' என்று அறிவுறுத்திய பெருமை, கீழ்த்திசை நாட்டு அறிஞர்களான திருவள்ளுவருக்கும் கன்பூசியசுக்குமே உரியதாகும். ஆளவந்தார்களுக்கும், அரசியல்சட்ட விற்பன்னர்களுக்கும் மட்டுமே கல்வி உரியது என்பது பிளேட்டோ, அரிஸ்டாட்டில் போன்ற கிரேக்க நாட்டு அறிஞர்களின் துணிவாகும். கிரேக்கத்திலும், ரோமாபுரியிலும் அரசியல் உரிமை அற்றவர்களாகப் பேரளவில் இருந்த அடிமைகளுக்குக் கல்வி கற்கும் உரிமையோ, வாய்ப்போ அளிக்கப்படவில்லை எனச் சரித்திரம் பேசுகிறது.

நம் இந்தியப் பெருநாட்டில், உயர்ந்த சாதிக்காரரே கல்வி கற்கும் உரிமையுடையவராகப் பண்டைக் காலத்தில் விளங்கினர். பெண்களுக்கும் அவ்வுரிமை வழங்கப்படவில்லை என்பது தருமசாத்திரங்களால் தெரிய வருகிறது. ஆனால் திருவள்ளுவர் 'வாழும் உயிர்க்குக் கல்வி கண் போன்றது' என்பதை, இமயத்தின் உச்சியில் நின்று, உலகிற்கு உணர்த்துபவரைப் போலக் காணப்படுகின்றார்.

கல்லாதவர் உயர்ந்த குடியில் பிறந்தவராக இருந்தாலும், தாழ்ந்த குடியில் (சாதியில்) தோன்றிய ஒருவர் கல்வி கேள்விகளில் சிறந்தவராக இருப்பாரானால், அவ்விருவருள் தாழ்ந்த குடியில் தோன்றிக் கல்வியில் சிறந்து விளங்குபவரையே உலகம் மதித்துப் போற்றும் என்பது திருவள்ளுவர் உலகிற்கு வழங்கும் நற்செய்தியாகும்.

மேற்பிறந்தா ராயினும் கல்லாதார் கீழ்ப்பிறந்தும்
கற்றார் அனைத்திலர் பாடு **(குறள்.409)**

இதனால் 'சாதி உயர்வைக் காட்டிலும் கல்வி உயர்வே சிறப்பானது' என்பது பெறப்படுகின்றது!

இக்குறட்பாவிற்கு நல்லதொரு விளக்கமாக,

வேற்றுமை தெரிந்த நாற்பா லுள்ளும்
கீழ்ப்பா லொருவன் கற்பின்
மேற்பா லொருவனும் அவன்கண் படுமே

எனும் புறநானூற்றுப் பாடற்பகுதி அமைந்துள்ளதைக் காணலாம். நம்முடைய இந்திய (சோசலிச)க் குடியரசின் அரசியல் சாசனத்தில், இந்தியக் குடிமக்கள் அனைவருக்கும் யாதொரு வேறுபாடுமின்றிக் கல்வி கற்க வாய்ப்பு அளிப்பது அரசின் கடமையாகக் குறிப்பிடப் பெற்றுள்ளமை திருவள்ளுவரின் கொள்கைக்குக் கிடைத்துள்ள வெற்றி எனலாம்.

'கற்றவர், கல்லாதவர் ஆகிய இருவகை மக்களுக்கும் இடையே யாதாகிலும் வேறுபாடு உண்டா? வேறுபாடு இருக்குமானால் அது எத்தகையது?' எனும் வினாக்களுக்கு வள்ளுவர் தரும் விடை புதுமையானது; ஆழ்ந்து சிந்திக்கத்தக்கது.

விலங்கொடு மக்கள் அனையர்; இலங்குநூல்
கற்றாரோடு ஏனை யவர் **(குறள்.410)**

என்பது வள்ளுவர் வாய்மொழி.

சிறந்த நூல்களைக் கற்றவருக்கும், கல்வியறிவில்லாத மற்றவர்களுக்குமுள்ள வேறுபாடு, பகுத்தறிவுடைய மக்களுக்கும், அப்பகுத்தறிவைப் பெறாத விலங்குகளுக்கும் இடையே காணப்படும் வேறுபாட்டிற்குச் சமம் என அவர் அறிவிக்கிறார்.

உணவு, உறக்கம், பயம், ஆசை முதலியன மனிதருக்கும் விலங்குகளுக்கும் பொதுவான இயல்புகள். ஆனால், விலங்கிற்கு இல்லாத சிறப்பியல்பு, பகுத்தறிவை மனிதன் பெற்றுள்ளமையாகும். இதனை 'மக்கள் சுட்டு' என்பர். பகுத்தறிவு பெற்ற 'மனித இனத்துள்' கற்றவர், கல்லாதவர் எனும் இருவேறு நிலைகள் இருப்பதே கொடுமை என வள்ளுவர் கருதுகின்றார்; கல்லாதவர் வடிவத்தில் மக்களாக இருந்தாலும், அறிவு, குணம், செயல்களில் விலங்குகளுக்கு ஒப்பாவர் எனக் கடுமையாக இடித்துரைக்கிறார். அவருடைய விழைவார்ந்த விருப்பம் எல்லாம் மனிதன், மனிதனாக வாழ, மண்ணகத்தில் விண்ணக வாழ்வை அடைய, ஒவ்வொரு மனிதனும் தவறாமல் கல்வி கற்க வேண்டும் என்பதேயாகும். இவ்வதிகாரத்தில் 'கல்வி கற்காமல் போனால் உண்டாகும் இழிவுகளையும், தீமைகளையும் சுட்டுவதன் மூலம், கல்வியின் முக்கியத்துவத்தையும், கல்வி கற்க வேண்டியதன் இன்றியமையாமையையும், கல்வி கற்றல் அனைவருக்கும் பொதுவான உரிமையாக அமையவேண்டும் என்பதையும் அவர் வலியுறுத்துகிறார். இவ்வகையில், இன்றைய முற்போக்குக் கல்விக்கு (Liberal Education) *நம் திருவள்ளுவர் முன்னோடியாகவும், வழிகாட்டியாகவும் விளங்குகின்றார்.*

7

தமிழ்நாட்டின் கலைச்செல்வங்கள்

உலகில் இன்றுவரை இருபத்துமூன்று நாகரிகங்கள் அரும்பி, மலர்ந்து, மணம் பரப்பியுள்ளதாக டாக்டர் ஆர்னால்டு தாயின்பி கூறுவர். அவற்றுள், இருபத்தொரு நாகரிகங்கள் காலத்தின் கொடுமையால் வாடி, வதங்கி, உலர்ந்து, உதிர்ந்துவிட்டன. இரண்டே நாகரிகங்கள் தொல் பழங்காலம் முதல் இன்றுவரை அழிந்தொழியாது நின்று, நிலவி வருகின்றன. அவை இந்திய நாகரிகமும் சீன நாகரிகமுமாகும்.

இந்திய நாகரிகம் "திராவிட – ஆரிய சமூக, பண்பாட்டு இணைப்பின் பயனாகத் தோன்றியது. இருசாராரின் மொழிகளும் பழக்க வழக்கங்களும், வாழ்க்கை முறைகளும் பண்புகளும், மற்றும் திராவிடருக்கு முற்பட்ட ஆரியக் கலப்பற்ற பழங்குடி மக்களின் பண்பாடும் கலந்ததன் விளைவாகத் தோன்றிய"தேயாகும். இதனை,

"திராவிடப் பண்பாட்டோடு ஆரியப் பண்பாடு ஒன்றாக இணைந்தமையால் தோன்றியதே இந்திய நாகரிகம். திராவிடப் பண்பாட்டின் தாக்கத்தால் இந்திய நாகரிகம் செழுமையும் சிறப்புமுற்றது; அகலமும் ஆழமும் அடைந்தது."

"அகமுகவுணர்வோ (Intuition) *புலன் கடந்த நுண்பொருள் ஆய்வுணர்வோ* (Transcendental Outlook) *திராவிடரிடம் மேலோங்கி நிற்காமல் இருக்கலாம். ஆனால், **அவர்கள் கலையுணர்வுமிக்க கலைஞர்கள்! ஆடலிலும் பாடலிலும் ஈடிணையற்றவர்கள்! கவின்மிகு கலைவடிவங்களைத் திட்டமிட்டு வகுப்பதிலும், வியத்தகு கோயில்களைக் கட்டுவதிலும் அவர்கள் கைதேர்ந்த கலைஞர்கள்!** உணர்ச்சித் துடிப்பும் படைப்புத்திறனும் வாய்ந்த திராவிடரின் கலையுணர்வை, ஆரியரின் அப்பாலைத் தத்துவம் மணம் புரிந்ததனால், பிறந்த மழலைச் செல்வமே இந்திய நாகரிகம்!"*[1] *என்று கவியரசர் இரவீந்திரநாதர் மொழிந்துள்ளமை முற்றிலும் உண்மையாகும்.*

---

1. Viswa Bharathi, No.1; p.8.

தமிழ்ப்பண்பாடு

தென்னாட்டில் தொன்மைச் சிறப்புடன் விளங்கி வருவது தமிழ்ப்பண்பாடு. இப்பண்பாடு தொன்றுதொட்டு இன்றுவரை உயிர்த்துடிப்போடு, நின்று நிலவி வருகிறது. உலகம் அறிந்தவற்றுள்ளே சிறந்தவற்றாலும், சிந்தித்தவற்றுள்ளே சிறந்தவற்றாலும் தமிழ்ப்பண்பாடு தன்னிகரற்று விளங்குகிறது. இன்று ஆயிரத்திற்கு மேற்பட்ட மொழிகள் இந்திய மக்களால் பேசப்பட்டு வருகின்றன. அவற்றுள் மூவாயிரம் ஆண்டுகளுக்கு மேலாகப் பேசப்பட்டு வரும் மொழி, இலக்கிய வளமிக்க மொழி, சிறந்த பண்பாட்டின் ஊற்றாய் விளங்கும் மொழி, உலகப் புகழ்பெற்ற பழம்பெரும் நாடுகளோடு தொடர்புடையதாக விளங்கும் உயர்தனிச் செம்மொழி (Classical Language) தமிழ்மொழியேயாகும்.

தமிழ் மொழியினைப் போற்றி, வளர்த்து வரும் தமிழ் மக்கள், வரலாற்றுப் புகழ் வாய்ந்தவராவர். அவர்கள் நெடுங்காலமாக மனித நலக் கோட்பாட்டினை (Humanism) நடைமுறையில் பின்பற்றி வருகின்றனர். அவர்களை 'வெப்ப மண்டலக் கிரேக்கர்கள்' (Tropical Greeks) எனவும் அவர்கள் நாட்டை 'வெப்பமண்டலக் கிரேக்கம்' (Tropical Greece) எனவும் ரெனே குரோசெட் (Rene Grousset) எனும் பிரெஞ்சுநாட்டு அறிஞர் பாராட்டியுள்ளார்.[2]

விருந்தோம்பும் பண்பு

பண்டைத் தமிழருடைய பண்பாட்டின் ஆணிவேராக விளங்குவது இல்வாழ்க்கையாகும். ஒருவனும் ஒருத்தியும் காதல் வழிப்பட்ட குடும்ப வாழ்க்கையில் ஈடுபட்டு, வீட்டிற்கும் நாட்டிற்கும் பயன்படத்தக்க முறையில் வாழ்வர். அவர்களுடைய இல்வாழ்க்கைக்கு ஒளிசேர்க்கும் பண்பாக, விருந்தினரை வரவேற்று உபசரிக்கும்முறை சிறப்புற்று விளங்குகின்றது. புதியதாக வருகின்றவர்கள் யாராக இருந்தாலும், அவர்களை இன்முகத்தோடு வரவேற்பர்; அவர்களுடைய தேவை அறிந்து, சுவையான உணவுகளைப் படைப்பர்; தங்குவதற்கு வசதியான இடம் அளித்து, அவர்களுடைய மனம் மகிழுமாறு செய்வர். இதனை, ஒரு மாபெரும் அறச்செயலாகவே தமிழர் போற்றி வருகின்றனர். இதனை,

இருந்தோம்பி இல்வாழ்வது எல்லாம் விருந்தோம்பி
வேளாண்மை செய்தற் பொருட்டு **(குறள்.81)**
விருந்து புறத்ததாத் தானுண்டல் சாவா
மருந்துஎனினும் வேண்டற்பாற்று அன்று **(குறள்.82)**

2. Rene Grousset, The Sum of History, pp.106-107.

எனும் தெய்வப் புலவர் திருவள்ளுவரின் வாய்மொழியால் உணரலாம்.

வாழ்வு மறுப்பு இன்மை

பொதுவாக இந்தியரைப் பற்றிக் கூறப்படும் குறைகளுள் முக்கியமானது, உலக வாழ்க்கைக்கு முக்கியம் தராமல், மறுபிறவி பற்றியும் மோட்சத்தைப் பற்றியும் அதிகம் கவலைப்படுவதைப் பற்றியதாகும். இதை 'உலக மறுப்புநோக்கம்' (Life-negation view) என்பர். தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில், சங்ககாலம் முதற்கொண்டு இன்றுவரை 'வாழ்க்கை வாழ்வதற்கே வளமாகவும் சிறப்பாகவும் வாழ்வதற்கே' எனும் எண்ணம் தமிழருடைய சிந்தனையில் இழையோடிச் செல்லுகிறது. எதிலும் அதிகமாகத் தோய்ந்து விடாமல், கிரேக்கர்களைப் போன்று தமிழ்மக்களும் வாழ்க்கையை அளவாக அனுபவித்து, வளமாக வாழ்வதையே குறிக்கோளாகக் கொண்டுள்ளனர்.

பக்தி நெறி

இந்தியாவில் இருவகையான வழிபாட்டு நெறிமுறைகள் சிறப்புற்று விளங்குகின்றன. ஒன்று தீயினை வளர்த்துத் தெய்வங்கள் வழிபடும் வேதநெறி. மற்றொன்று பூவினைக் கொண்டு இறைவனுடைய பொன்னடிகளைப் போற்றி வணங்கும் பூசெய் (பூசை) நெறியாகும். பூசைநெறி மிகவும் பழமையான வழிபாட்டு நெறி. அந்நெறி, தமிழகத்தில் கி.பி.ஆறாம் நூற்றாண்டு முதல் பத்தாம் நூற்றாண்டுவரை சிறப்புற்று விளங்கிய ஆழ்வார்களும் நாயன்மார்களும் போற்றி வளர்த்த பக்தி நெறியாக மலர்ந்தது. 'அன்பினால் உருகி, அழுது அரற்றி என்பும் உருக இராப்பகல் இறைவனைச் சலம்பூவொடு' போற்றி வழிபாடு செய்வதே, பக்திநெறி. இப்பக்திநெறி "பிராமண சமயத்தை இந்து சமயமாக மாற்றியது. எனவே, இந்திய நாகரிகத்தின் மலர்ச்சிக்குத் தென் இந்தியா (தமிழகம்) அளித்த முதன்மையான பரிசு பக்திநெறி எனில் தவறாகாது"[3]

தமிழகத்தில் பெருக்கெடுத்து ஓடிய பக்தி வெள்ளம், நிலையான பயன்கள் பலவற்றைத் தந்துள்ளது. வழிபடு தெய்வங்களுக்கு நாடு முழுவதிலும் கோயில்கள் கட்டப்பட்டன. அக்கோயில்களில் பலவகையான அழகுக்கலைகள் போற்றி வளர்க்கப்பட்டன. இசையும் கூத்தும், நாடகமும் நாட்டியமும் காவியமும் ஓவியமும், சிற்பக்கலையும் கட்டிடக்கலையும், படிமக்கலையும் பக்திநெறியை மக்களிடம் பரப்பவும், வளர்க்கவும் பெரிதும் பயன்பட்டன. இவற்றின் மையமாக

3. S.Krishnaswami Aiyengar, Some Contributions of South India to Indian Culture, p.vi.

– வளர்ப்புப் பண்ணையாக – கோயில்கள் விளங்கின. சுருங்கச் சொல்லுவதானால், தமிழகத்தின் கோயில்கள் நெடுங்காலமாகக் கலைகளின் கருவூலங்களாகவும், சமுதாய நல்வாழ்விற்கு ஆக்கமும் ஊக்கமும் அளிக்கும் சமுதாய நிறுவனங்களாகவும் விளங்கின.

கலைச் செல்வங்கள்

இன்றுவரை நின்று நிலவிவரும் பழம்பொருள் சின்னங்களால், சிற்பக்கலையும் அதனோடு தொடர்புடைய பிற அழகுக்கலைகளும் இந்தத் தமிழ்நாட்டு மண்ணிலேயே தோன்றியவை என்பதை அறியமுடிகிறது. அவை, இம்மண்ணின் மக்களுடைய சமய வாழ்க்கையோடு இணைந்து உணர்ச்சிமயமான வாழ்க்கையை வெளிப்படுத்துவனவாக அமைந்துள்ளன. இந்தியாவின் பிற பகுதிகளைப் போன்றே, இங்கும் மாண்புமிகு சிற்பக்கலைப் படைப்புகள் அனைத்தும். பெரிதும் சமயச்சார்புடையனவாகவே உள்ளன. அவற்றில் கட்டிடக் கலையின் திடமான அமைப்பு வடிவமுறைகள், நெகிழ்ச்சிமிகு அலங்கார வேலைப்பாடுகளோடு நேர்த்தியான வகையில் இணைந்தும் இழைந்தும் காணப்படுகின்றன.

இத் தென்னாட்டுக் கலைப்பாணியைப் பழங்காலச் சிறிய நூல்கள் 'திராவிடக் கலைப்பாணி' எனச் சுட்டுகின்றன. இக்கால இந்திய, மேற்குநாட்டுக்கலை – ஆர்வலர்களும் இக்கருத்தைப் பொன்னேபோல் போற்றுகின்றனர்.

தமிழகத்தின் கலை வளர்ச்சியை ஆறு கால கட்டங்களாகப் பிரிக்கலாம். (1) சங்ககாலத்திய (கி.மு.500 முதல் கி.பி.500 வரை) கலைப் பொருள்களோ, கட்டிடங்களோ இன்று நமக்குக் கிடைக்கவில்லை. அவையாவும் எளிதில் அழியக்கூடிய மரத்தினாலோ, பிற பொருள்களினாலோ செய்யப்பட்டிருத்தல் வேண்டும். ஆனால் இக்காலத்திற்குப் பிறகு படைக்கப்பட்ட கலைப்பொருள் சின்னங்கள் மிகப்பேரளவில், நாடு முழுவதிலும் கிடைத்துள்ளன. அவற்றை (2) பல்லவர் கால (கி.பி.500 முதல் 900 முடிய)த்தியன, (3) சோழப் பேரரசர் (கி.பி.900 – 1250) காலத்தியன, (4) பாண்டியர் (கி.பி.1250–1400) காலத்தியன, (5) நாயக்க மன்னர் (கி.பி.1400–1700) காலத்தியன, (6) புதுமைக்கால கலைப்பாணி (கி.பி.1700 முதல்...) எனப் பாகுபடுத்திக் காட்டலாம்.

நம் இந்தியக்கலையின் முழுமையான வளர்ச்சியில், திராவிட மக்களின் கலைப்படைப்புகள் ஒரு முக்கியமான இடத்தைப் பெற்றுள்ளன. எளிதில் வேறுபாட்டைக் கண்டறியக்கூடிய வகையில், திராவிடக் கலைப்பாணி தற்சார்புடைய தனி இயல்புகளையும் சுவையுணர்வுகளையும் உடையதாகும். இவ்வேற்றுமைப் பண்புகளைச்

சிறப்பாக கட்டடக் கலையிலும், தெய்வத் திருவுருவங்களை வடிக்கும் படிமக் கலையிலும் மிகப்பேரளவில் காணலாம்.

இந்தியக் கலையின் பல்வேறு பகுதிகளோடு திராவிடக் கலையின் வளர்ச்சியைத் தொடர்பு படுத்தாமல், அதைத்தனியாகத் தென்னாட்டு வரலாற்றின் அடிப்படையில் ஆராய்கின்ற பொழுது, திராவிடக்கலை இயல்புகள் பேரளவிற்குத் தெளிவும் பொலிவும் பெற்றுத் தனிச்சிறப்புடன் ஒளிர்கின்றன.[4]

சிற்பக்கலையில், பொதுவாகக் கட்டிடக் கலையை (Architecture)யும், கல் ஓவியங்களாகிய சிற்பங்களை (Sculpture) யும் அடக்கிக் கூறுவது இந்தியநாட்டு வழக்கமாகும்.

கட்டடக் கலை

மனித இனப் பண்பாட்டின் வேறு எந்தத் துறைகளிலும் மனிதனுடைய முன்னேற்றமிகு வளர்ச்சியை அல்லது நலிவுமிகு சீரழிவைக் கட்டிடக் கலையைப் போன்று மிகத்துல்லியமாகப் பிரதிபலிக்கக் கூடிய ஒன்றைக் காண இயலாது. ஆதிகாலம் முதற்கொண்டு கட்டிடக்கலை அடைந்துள்ள வளர்ச்சியிலிருந்து – சிறு குடிசைகளிலிருந்து வியத்தகு கோயில்களும் அரண்மனைகளும் கட்டப்பட்ட காலம் வரையில் – தன்னுடைய சமூக – சமயச் சூழல்களையும் வாழ்க்கை நோக்கத்தையும் வெளிப்படுத்துவதற்கு, மனிதன் ஓயாமல் அரும்பெரும் முயற்சிகள் செய்து வந்துள்ளான். மேலும், மனிதன் அழகுணர்வோடு பயன்பாட்டையும் பிணைத்துப் போற்றி வந்துள்ளான். அவனுடைய அழகியல் சுவையுணர்வின் நோக்கையும், போக்கையும் இவற்றால் புரிந்துகொள்ள முடிகிறது. தமிழகத்தின் கட்டிடக்கலையில் இப்பண்புகள் மிகத் தெளிவாகப் புலனாகின்றன.

பல்லவர் காலத்திய கட்டிடக் கலையின் கருவூலமாக மாமல்லபுரமும், காஞ்சிபுரமும் விளங்குகின்றன. அவர்கள் முதன்முதல், மலைச்சாரல்களில் மலைகளைக் குடைந்து பல குகைக்கோயில்களை (Cave Temple) அமைத்தனர். அவை, இன்று மகாபலிபுரத்தில் மகிஷாசூர மண்டபம், கண்ணன் மண்டபம் எனும் பல பெயர்களால் வழங்குகின்றன. அவற்றில் கண்ணைக்கவரும் அழகிய சிற்பங்கள் பல உள்ளன.

இரண்டாவது நிலையில், தனித்தனிப் பாறைகளைக் கோயில்களாகச் செதுக்கினர். அவற்றிற்குச் சிறந்த எடுத்துக்காட்டாக மகாபலிபுரத்தில் உள்ள 'பஞ்சபாண்டவர் ரதங்களைக்' காட்டுவர்.

4. Mario Bussagli, 'Dravidian Art' in the Ency. of World Art, Vol, 4; p.443.

அவை ஒவ்வொன்றும், தனித்தனிப் பாறைகளைக் குடைந்து (Monolithic) அமைக்கப்பட்ட குடைவரைக் கோயில்களாகும். அவற்றில் நுட்பமான வேலைப்பாடும், தெளிவான கருத்து வடிவங்களும் கவினுறச் செதுக்கப்பட்டுள்ளன. இதையடுத்து, பல்லவர்கள் ஒரு கருங்கல்லின்மீது, மற்றொரு கருங்கல்லை அடுக்கிக் கட்டுமானக் கோயிலை (Structural Temple)க் கட்டினர். மாமல்லபுரத்துக் கடற்கரையிலுள்ள சிறிய கோயில், சிறிய அளவில் திட்டமிட்டு சிவனுக்கும் திருமாலுக்கும் இரண்டு கட்டுமானக் கோயில்களைக் கட்டி, அங்கு அவற்றை ஒன்றாக இணைத்துள்ளனர். இன்றும் மெல்ல கடலலைகள் வந்து மோதிக்கொண்டிருக்கும் இந்தக்கோயில், திராவிடக் கட்டடக்கலை வளர்ச்சியில் ஒரு திருப்பு மையமாக விளங்குகிறது.

இதனுடைய வளர்ச்சியுற்ற நிலையை, அமைப்பைக் காஞ் சிபுரத்துக் கயிலாசநாதர் கோயிலும், வைகுந்தப் பெருமாள் கோயிலும் காட்டுகின்றன. இவை இரண்டும் பிரமாண்டமான 'பிரமிட்' போன்ற விமானங்களைக் கொண்டவையாகும். ஒவ்வொரு கோயிலும் மிகவும் அகலமாகவும் விரிவாகவும் கருங்கற்களினால் கட்டப்பட்டுள்ளன. விமானத்திலும், கோயிலின் பிறபகுதிகளிலும் அழகிய சிற்ப வேலைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இந்தப் பல்லவரின் கட்டடக்கலை மரபு, பிறகு தமிழ்நாடு முழுவதிலும் பரவிற்று.

சோழப்பேரரசன் முதலாம் இராசராசன் (கி.பி.985–1016). தம் தலைநகரான தஞ்சையில் கட்டிய மாபெரும் கோயிலை, இந்தக் கட்டுமான கோயில்களுக்கு மிகச்சிறந்த சான்றாகக் காட்டுவர். அக்கோயிலைப் "பெரிய கோயில்" எனவும் "பிரகதீசுவரர் கோயில்" எனவும் கூறுவர். இக்கோயிலில் பல கட்டு அமைப்புகள் உள்ளன. அவை பெரியகோயிலின் அமைப்புமுறை அச்சோடு இணைக்கப்பட்டுள்ளன. அவற்றைச் சூழ்ந்து நான்கு பக்கத்திலும் திண்மையான மதில் சுவர்கள் உள்ளன. இத்திட்டத்தின் மேற்குப் பகுதியில் உள்ள விமானம், சுற்றிலும் உள்ள கட்டிடங்களைவிட அழகு வாய்ந்தது. இவ்விமானம் அழகுமிக்க 'பிரமிட்டு' போன்ற தோற்றம் உடையது. இதனுடைய சிறப்புமிகு கலையழகு, இதனுடைய உறுப்புகளின் எளிமையான அமைப்பிலே ஊற்றெடுக்கிறது. இதனுடைய உறுப்புகள் மூன்று. அவை சதுரமானதும் செங்குத்தானதுமான அடித்தளம்; உயர்ந்து கூம்பிய உடற்கட்டு; அதன்மேல் கலசத்தோடு கூடிய செங்குத்தான பகுதி. அடித்தளப்பகுதி 24.75 மீட்டர் உடைய சதுரப் பக்கங்களைக் கொண்டது; 15.25 மீட்டர் உயரமுடையது. இதிலிருந்து 16 மாடங்களைக் கொண்ட பிரமிட்டு போன்ற விமானம் பெருமிதமாகத் தோன்றுகிறது.

இதனுடைய சிகரத்தின் பரப்பளவு அடித்தளத்தின் பரப்பளவில் 1/3 பகுதியாகும். விமானத்தின் பக்கங்களில், சிற்பங்கள் பல செதுக்கப்பட்டுள்ளன. இடையிடையே மாடக்குழிகள் உள்ளன. அவற்றில் தெய்வத்திருமேனிகள் வைக்கப்பட்டுள்ளன. கோயில் சிகரத்தில் பொருத்தப்பட்டுள்ள கலசத்தின் நிழல், கீழே தரையில் விழுவதில்லை; சிகரம் பொருத்தப்பட்டுள்ள பிரமதளக் கல்லிலேயே விழுகிறது. கட்டடக்கலை நிபுணர்கள் இதைப் பேரதிசயமாகக் கருதுகின்றனர். இந்த விமானத்தின் உயரம் 64.5 மீட்டர் என்பர்.

இந்தப் பெரிய கோயிலின் அமைப்பையும் அழகையும் கண்டு, வியப்படையாதவரில்லை. 'திராவிடக் கலைப்பாணியின் உரைகல்லாக' இக்கோயிலை அறிஞர்கள் பாராட்டியுள்ளனர்.

"கோயில்களுக்கு எல்லாம் அரசனாக விளங்குவது இத்தஞ்சை இராஜராஜேசுவரக் கோயில். இதன் ஒரே சீரான கட்டட அமைப்பு ஒருவகையான கட்டுப்பாடும் ஒழுங்கும் வாய்ந்த படைத்துறை (இராணுவ) மதிநுட்பத்தைப் புலப்படுத்துகின்றது. இக்கோயிலின் விமானம் மாபெரும் தோற்றத்தோடு அழகு நிறைந்த வடிவமைதியுடையதாகும். வெற்றிமிகு போர்களுக்குப்பின், புதியதொரு பேரரசை நிலையாக நிறுவிய சாதனையை இவ்விமானம் எதிரொலிக்கிறது"[5] என சிம்மர் (Zimmer) எனும் கலைவல்லார் போற்றுவர்.

தஞ்சைப் பெருவுடையார் கோயிலைப் போன்ற, ஆனால், சிறிது அடக்கமான அளவில், இராசேந்திர சோழனால் கங்கை கொண்ட சோழபுரத்தில், ஒரு கோயில் கட்டப்பட்டது. அதனைக் கங்கை கொண்ட சோழீச்சுரம் என்பர். தஞ்சைக்கோயிலின் கலைப்பாணியைப் பெரிதும் பின்பற்றி அமைக்கப்பட்டுள்ளது இக்கோயில். எனினும், இவற்றிடையே சில நுட்பமான வேறுபாடுகள் உள்ளன. இவ்விரு கோயில்களையும் ஒப்பிட்டுப் பார்த்த பெர்சி பிரவுன், "கங்கை கொண்ட சோழீச்சுரத்தில், இன்பக் களியாட்டக் கவர்ச்சி நம்மைக் கவர்கிறது; முழுநிறைவுற்ற பெண்கள் நலத்தின் பேரழகு பொங்கி வழிகிறது. இதற்கு மாறாகத் தஞ்சைப் பெரிய கோயிலில் ஆண்மையின் ஆற்றல்சால் வீறமைதி ஒளிவீசுகிறது. தஞ்சை விமானத்தைப் பெருமிதத் தோற்றமும் காப்பியக் கலைநயமும் கனிந்த வடிவமைதியுடையது என்றால், கங்கை கொண்ட சோழீச்சுரத்தைக் கீழை நாடுகளின் புலனுகர் இன்ப வெறியூட்டும் **தன்னுணர்ச்சிப் பாடல்** (Lyric) எனலாம்"[6] என்று மதிப்பிட்டுள்ளமை நம் கருத்தைக் கவருவதாகும்.

---

5. H.Zimmer, The Art of Indian Asia, Vol.I. p.219.
6. Percy Brown, Indian Architecture, Vol I, pp.86-87.

தாராசுரத்திலுள்ள ஐராவதேசுவரர் கோயிலும், திரிபுவனத்தில் உள்ள கம்பேசுவரர் கோயிலும் சோழர் கலைப்பாணியின் பிற்காலப் பண்புகளை நன்கு புலப்படுத்துகின்றன. இவற்றில் நுணுக்கமான வேலைப்பாடுகள் மிகுதியாக உள்ளன.

மதுரையில் உள்ள மீனாட்சி சுந்தரேசுவரர் கோயிலும் நாயக்கர் காலத்தில் அமைக்கப்பட்ட பல்வேறு மண்டபங்களும் – சிறப்பாகப் புதுமண்டபமும், 'திருமலை நாயக்கர் மகால்' எனப்படும் அரண்மனையும் பிற்காலக் கட்டிடக் கலையழகிற்கு நல்ல எடுத்துக்காட்டுகளாகும்.

கோயில்களின் தலைவாயிலில் உள்ள, விண்ணைமுட்டும் கோபுரங்கள், சிற்பக்கலைக் களஞ்சியமாக விளங்குகின்றன. இத்தகைய கோபுரங்கள் சிதம்பரம், மதுரை, திருவண்ணாமலை முதலிய ஊர்களிலுள்ள கோயில்களில் காணலாம். இவற்றுக்கு ஈடாகக் கலை நயம் வாய்ந்த கோபுரங்கள், இந்தியாவில் வேறெங்கும் இல்லை என்பது கலைஞரின் கருத்தாகும்.

சிற்பக்கலை

தமிழ்நாட்டுக் கோயிற் சிற்பங்கள், உலகத்தையே இன்று வியப்படையச் செய்துள்ளன. கால இடையீடு இல்லாமல், சிற்பக்கலை இங்குத் தொடர்ந்து வளர்ச்சியுற்றிருப்பதைக் காணுகின்றோம். பன்னெடுங்காலமாகத் தொடர்ந்து, சிற்பக்கலை போற்றி வளர்க்கப்பட்டதன் விளைவாக, யாதொரு கட்டுப்பாடுமின்றி இயங்கும் வடிவங்களைப் படிப்படியாக அமைக்கத் தமிழகச் சிற்பிகள் கற்றனர். துணிவுமிக்க ஆக்க வேலையும், சரியான இசைவுப் பொருத்தமும் கண்டாரை வியப்படையச் செய்யும் வகையில் திராவிட சிற்பங்களில் இடம்பெற்றிருக்கின்றன. சிற்பங்களை வடிப்பதற்குப் பயன்படுத்தப்படும் பொருள்கள் யாதாக இருந்தாலும், அதில் ஒரு குழைவுத்தன்மையையும் நெளிவுசுளிவுகளையும் நாம் காண்கின்றோம். நெகிழ்ச்சியும், குழைவும், அழுத்தமின்றிப் பரவலாகக் கலைநுட்பத்தைப் பயன்படுத்தலும் திராவிட சிற்பக்கலையின் முதன்மையான இயல்புகளாகும். மண்ணக வாழ்வை அடிப்படையாகக் கொண்டு, விண்ணகத்தை நோக்கிச் செல்லுவதாகத் தமிழருடைய சிற்பக்கலை விளங்குகிறது. திராவிடக் கலையியலில் கலையுணர்வைவிட, சமயவுணர்வு சிறப்பிடம் பெற்றுள்ளதை யாரும் மறுக்கஇயலாது. அழகினைத் தூய்மையின் மூலம்தான் பெறமுடியும் என்னும் நம்பிக்கை, தமிழகத்துச் சிற்பிகளிடத்து நெடுங்காலமாக இருந்து வருவதை அவை அறிவிக்கின்றன.

மாமல்லபுரத்துச் சிற்பங்கள் கல்லிலே இழைக்கப்பட்டக் காப்பியங்களாகும். பல்லவர் சிற்பக்கலையில் அமைந்த மாபெரும் வெற்றிக்கு – சாதனைக்கு, இவை அழியாப் பெருஞ்சான்றுகளாகும். பாறைகளில் செதுக்கப்பட்டுள்ள சிற்பங்கள், தென்னிந்தியச் சிற்ப வடிவங்களின் களஞ்சியமாகக் காட்சி தருகின்றன. அவை அடக்கமான கவின்மிகு கலைப்பாணி உடையன. பெரிதும் பயன்படுத்தப்படாத இயற்கையும் (Naturalism) அவற்றில் இடம்பெற்றிருக்கிறது. ஆனால், அது தென்னிந்தியச் சிற்பக்கலையின் தனிச்சிறப்பு மிக்கப் பண்பாக விளங்குகிறது.[7]

'கங்கையின் தோற்றம்' எனும் பாறைச்சிற்பங்கள் பல்லவர்களுடைய கலைச்சிறப்பிற்குச் சிறந்த எடுத்துக்காட்டாகும். பல்லவர் கலைப்பாணியில் அமைந்த சிற்பங்களுள் இவை முக்கியமானவை. மான், குரங்கு, யானை, எருது போன்ற விலங்குகளின் உடற்கூற்று அமைப்பழகில் இத்தகைய உயிர்களையும், நிகழ்வியல் பாங்குமிகு அமைதியும், அருளுணர்வோடு அமைந்த கலைமுறையையும் இந்தியாவின் வேறெந்தப் பகுதியிலும் நாம் காண்பது அரிது. புதுமையும், அழகும் பொருந்திய கலையியல் கொள்கை கைவரப்பெற்று, இந்தியக் கலை இங்குத்தான் முழு மலர்ச்சியடைந்துள்ளதைக் காணுகின்றோம். மனித வடிவின் இலட்சியத்தோற்றம், பல்லவர்களுடைய கலைப் படைப்புகளிலேயே ஒப்புயர்வு அற்றதாகவும், உள்ளத்தை நெகிழ்விப்பதாகவும் உள்ளது.[8]

நிலைபேறற்ற உலகியல் வாழ்வில், நிலையான மதிப்பினைச் சோழர் காலத்திய சிற்பங்கள் பெற்றுள்ளன. ஆடையணிகள் உடலோடு பொருந்தியுள்ள காட்சி, உடலுக்கு இயல்பான பொலிவை அளிப்பதோடு, நுட்பமான கலைநயம் பொருந்தியனவாகவும் உள்ளன. வடிவங்களின் அமைப்பு முறையில் கலையழகு நாட்டமும், உடலுறுப்புகளின் நெளிவு சுளிவுகளிலுள்ள நேர்த்தியும் நெகிழ்ச்சியும் சிறப்புமிக்கன. இவற்றோடு ஒருவகைப் புதுமைப்பொலிவும் சேர்ந்து சோழர்கால சிற்பக்கலைக்குப் பொன்றாப் புகழைத் தேடித் தந்துள்ளன.

திருக்கோயில்களின் கருவறையைச் சுற்றிலும் வெளிச்சுவர்களிலுள்ள மாடங்களில் பல தெய்வத் திருமேனிகள் சோழர்காலத்தில் அமைக்கப்பட்டுள்ளன. கங்கைகொண்ட சோழீச்சுரத்தின் தெற்குச் சுற்றாலையில் உள்ள மாடக்குழியில் கலைமகளின் கவின்மிகு சிற்பம் செதுக்கப்பட்டுள்ளது. அச்சிற்பம் நல்ல பெருமிதமான தோற்றம் கொண்டது; அமைதி தவழும் அழகிய வடிவம் வாய்ந்தது; நீண்டுயர்ந்த மணிமகுடம் அவள் தலையை அழகுபடுத்துகிறது.

7. Stella Kramrisch, The Art of India, p.38.
8. H.Zimmer, op.cit.p.87.

வெள்ளைத் தாமரையில் அவள் வீற்றிருக்கும் கோலம் காண்பவர் கண்ணிற்கும், கருத்திற்கும் நல்விருந்தாகும். இது புடைப்புச் சிற்ப முறையில் அமைந்திருப்பதால் பேரழகுடன் பொலிவுறுகிறது.

திருவரங்கத்தில் வேணுகோபாலன் கோயில் தெற்குச் சுற்றாலையில் உள்ள ஒரு மாடக்குழியிலே, கல்லில் கற்பனைப் பெண் ஒருத்தி நிற்கின்ற நிலையில் செதுக்கப்பட்டுள்ளாள். அவள் நிற்கின்ற நேர்த்தி, கையில் கண்ணாடி ஏந்தியிருக்கின்ற எழில், அணிந்திருக்கும் அணிகளின் அழகு, இதழ்களிலே தவழும் புன்னகை காண்பவரின் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளுவதாகும். இதைப்போன்ற எண்ணற்ற சிற்பங்கள் இக்காலத்திய கலைப்பாணியின் ஏரையும் எழிலையும் உலகிற்கு உணர்த்துகின்றன.

படிமக்கலை

தமிழகத்தின் கலைப் படைப்புகளில் வெண்கலச்சிலைகள் (Bronzes) தலைசிறந்தவை; தன்னிகரற்றவை. இந்தியாவிலேயே, தமிழகத்துச் சிற்பிகள் இத்துறையில் ஈடும் இணையுமற்ற மாபெரும் சாதனைகளைப் புரிந்துள்ளனர். கற்சிலைகளைப் போலவே, இவை யாவும் மிகத் தொன்மையான கலை மரபினைப் பின்பற்றி அமைக்கப்பட்டுள்ளன. இவ்வெண்கலச் சிலைகள் சோழர் காலத்திலேயே, மிகப் பேரளவில் செய்யப்பட்டுள்ளன. அவற்றில் அழுத்தம், பெருமிதம், அடக்கமான நுண்ணியமிக்க வேலைப்பாடு, உயிர்த்துடிப்பு முதலிய பண்புகள் பொருந்தியுள்ளன. அவற்றின் தோற்ற நிலையிலும் இயற்கை எழில் முழுமைத்தன்மையுடையதாய்ப் பொலிவுறுகிறது; அணிகள் அழகாகவும் அமைக்கப்பட்டுள்ளன.

பக்தி நெறியையும், அதனால் ஏற்படுவனவாகிய மனவுணர்ச்சி களையும், இத்திருவுருவங்கள் மிக நயமாக விளக்குகின்றன. உண்மையான பக்தியில் ஈடுபட்டுள்ள ஓர் அடியாரது உள்ளமும், உடலும் எந்நிலையில் இருக்கும் என்பதைத் தமிழகத்து அருளாளர்களான திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் முதலியோருடைய உருவச்சிலைகள் தெளிவாக உணர்த்துகின்றன.

அம்பலவாணரின் அருள்வடிவம், பேரின்பமாகிய சிவானுபவத்தை – பேரின்ப நுகர்ச்சியைக் குறிக்கிறது. மேலும் சிவபெருமானே படைத்தல், காத்தல், அருளல், மறைத்தல், அழித்தல் எனும் ஐந்து தொழில்களையும் முறையே நான்முகன், திருமால், உருத்திரன், மகேசுவரன், சதாசிவன் என்னும் ஐவகை மூர்த்திகளின் மூலமாகச் செய்து வருகிறான் என்பதையும் இத்திருவுருவம் உணர்த்துகின்றது. உடுக்கை ஏந்திய கை உலகப் படைப்பையும், அருள்புரியும் கை காத்தலையும், தீயேந்திய கை மும்மலத்தை அழிப்பதையும்,

ஊன்றிய திருவடி ஆன்மாக்களை மறைத்தலையும், தூக்கிய திருவடி ஆன்மாக்களின் புகலிடம் 'இது'வெனக் காட்டுதலையும் குறிப்பதாக, நடராசப்பெருமானின் திருமேனியின் அமைப்பையும் அழகையும், மெய்ப்பொருள் சார்பான நோக்கில் விளக்குவது பண்டைத் தமிழ்மரபு.

"இறைவன் உயிர்த்துடிப்பாகவும், ஒழுங்கான இயக்கமாகவும், அழியாத இளமையெழிலாகவும், கட்புலனாகாப் பேரொளியாகவும் விளங்குகின்றான் என்பதையே, இந் நடராசத் திருவுருவம் உணர்த்துகிறது... சமயச் சூழ்நிலையில் இவ்வடிவத்தின் உட்பொருளை ஒருமுறை புரிந்து கொண்டால், நடராசப் பெருமானின் அழகிய திருவுருவத்தில் ஐரோப்பியர்கள்கூட உண்மையான சமய உணர்வினைப் பெற முடியும். தெய்விக உண்மையையும், தெய்விக அழகையும், தெய்விக இன்பத்தையும் உணர்த்தும் கலைப்பிழம்பே மாண்புமிக்க நடராசர் திருமேனி"[9] என்பது இக்காலத்திய மேற்கு நாட்டு அறிஞர் ஒருவரின் கருத்தாகும்.

'இந்திய நாகரிகம்' என்றவுடன், உலக அறிஞர்கள் பலருடைய உள்ளத்தில், தமிழ்க்கலைஞர்கள் 'இப்படியன், இந்நிறத்தன், இவ்வண்ணத்தன், இவன் இறைவன் என்றெழுதிக்காட்ட' இயலாத இறைவனுக்குக், கற்பித்த நடராசவடிவமே முதலில் தோன்றுவதாகக் கூறுகின்றனர். எனவே, "ஒரு கூட்டத்தார்க்காவது, ஒரு நூற்றாண்டைச் சார்ந்த சிந்தனையாளர்க்காவது ஏற்புடைத்தாகலின்றி எல்லா நாடுகளிலும், எல்லாக் காலங்களிலும் வாழக்கூடிய மெய்யுணர்வாளர்களாலும், இறையன்பர்களாலும் கலைஞர்களாலும் ஏற்றுக்கொள்ளப்படும் வண்ணம் மெய்ப்பொருள் குறிப்பும் சமயவுணர்வும், கலையழகும், அறிவியல் கொள்கையும் இணைந்தும் இழைந்தும் விளங்கும் பேரெழில் மிக்க கலைப்பிழம்பாகிய இவ்வடிவத்தை, முதலில் உள்ளக்கிழியிலே வரைந்த மெய்யுணர்வு பெற்ற கலைஞர்களின் ஆழ்ந்த சிந்தனைத் திறனும் அருளுணர்வும் நம்மை வியப்பில் ஆழ்த்துகின்றன."[10]

ஓவியக் கலை

தமிழர் ஓவியக்கலையையும் போற்றி வளர்த்துள்ளனர். சித்தண்ணவாசல் எனும் இடத்திலுள்ள சமணக்கோயிலின் கருவறையிலும், முன் மண்டபத்திலும் அழகுமிகு ஓவியங்கள் காணப்படுகின்றன. அவை பல்லவப் பேரரசன் மகேந்திரவர்மனுடைய (கி.பி.600–630) காலத்தில் வரையப்பட்டன என்பர்.

9. A.L.Basham, The Wonder that was India, pp.375-376.
10. Ananda K.Coomaraswamy, The Dance of Siva, p.65.

அக்கோயிலினுடைய கூரையின் உட்புறத்திலுள்ள ஓவியங்கள் வண்ணத்திலும், வடிவத்திலும், கவர்ச்சியும், நேர்த்தியும் வாய்ந்தவை. மூன்று ஓவியத் தொகுதிகள் தூண்களில் வரையப்பட்டுள்ளன. அவை அரசன் மகேந்திரனையும், அவனுடைய அரசிகளையும், அவர்கள் முன்னர் நடனமாடும் இரண்டு நடன மாதரையும் சித்திரிக்கின்றன. நடன மாதருள் ஒருத்தி இடக்கையைத் 'தண்ட – ஹஸ்த' முத்திரையிலும், வலக்கையை 'அபய' முத்திரையிலும் வைத்துக் கொண்டுள்ளாள். அவள் காதுகளில் இலைக் குண்டலங்கள் அசைந்தாடுகின்றன. மலர்கள் சூடிய கூந்தல் முடியினைச் சிறிது சாய்த்த வண்ணம், ஆடல் தொடங்கத் தயாராக அவள் நிற்கின்றாள்.

மற்றொரு நடன மங்கை 'அர்த்தமத்தளி' முத்திரையுடன், தன்னுடைய கைகளில் ஒன்றை, மகிழ்ச்சிப் பெருக்கில் உயர்த்தி வைத்துக்கொண்டு நடன அசைவோடு நிற்கிறாள். இவற்றோடு கூரையில் வரையப்பட்டுள்ள குளமும், அதில் தாமரை மலர்களும் அன்னங்களும் நிறைந்து இருப்பதும், சில மகளிரும் மைந்தரும் தாமரை மலர் பறிப்பதும் ஆகிய காட்சிகள் கண்கொள்ளாக் காட்சிகளாகும். இவை, தமிழகத்தில் கிடைத்துள்ள ஓவியங்களுள் காலத்தால் மிகவும் பழமையானவை, இவற்றைத் 'தமிழ்நாட்டின் அஜந்தா' ஓவியங்கள் என்பர்.

இக்காலத்தை யொட்டி வரையப்பட்ட ஓவியங்கள், காஞ்சி புரத்தில் உள்ள கயிலாசநாதர் கோயிலிலும், பனைமலைக் கோயிலிலும் சிறப்புடன் விளங்குகின்றன.

சோழப் பேரரசர் காலத்திய ஓவியங்கள் முற்றிலும் சமயச் சார்பானவை; எளிமையும் எழிலும் உயிர்த்துடிப்பும் வாய்ந்தவை. இராசராசனுடைய தஞ்சைப்பெரிய கோயிலில், கருவறையின் உட்புறச் சுவர்களில் கவர்ச்சிமிகு வண்ண ஓவியங்கள் பெரிய அளவில் தீட்டப்பட்டுள்ளன. அவற்றுள் சிவபெருமானுடைய திரிபுரதகனம், தேவாரம் பாடிய நாயன்மார்களுள் ஒருவரான சுந்தரமூர்த்தி நாயனாரை இறைவன் தடுத்தாட்கொண்ட காட்சி, தட்சணாமூர்த்தி, இராசராசன் சிதம்பரத்தில் நடராசரை வழிபடும் காட்சி போன்றவை, இன்னும் பொலிவும் உயிர்க்களையும் வாய்ந்த ஓவியங்களாகக் காட்சி தருகின்றன. இவையல்லாமல் நடனமாதர், இராசராசனும் கருவூர்த்தேவரும் போன்ற ஓவியங்களும் நம் கருத்தைக் கவருகின்றன.

இவ்வோவியங்கள் யாவும் வடிவத்தால் வாழ்க்கையையும், பொருளால் நோக்கத்தையும், குறிப்பால் கருத்தையும் காட்டுகின்றன. அக்காலத்திய ஓவியக்கலைஞன் 'இறைவனை எப்பொருளிலும் மனிதன் காணுகின்றான்' என்பதை உணர்த்தத் தவறவில்லை.

பாண்டியர் காலத்திய ஓவியங்கள் சில குற்றாலத்தில் காணப்படுகின்றன. அங்குத் திருமலைநாயக்கர் காலத்து ஓவியங்கள் பொலிவுடன் விளங்குகின்றன. மதுரைச் சொக்கநாதர் கோயில் பொற்றாமரைக் குளத்தைச் சுற்றிச் சுவரிலும் கூரையிலும் சிவபெருமானுடைய 64 திருவிளையாடல்களை உணர்த்தும் வண்ண ஓவியங்கள் உள்ளன. அவை நாயக்கர்காலத்தில் தீட்டப்பட்டு, அவ்வப்போது புதுப்பிக்கப்பட்டும் உள்ளன.

இசைக்கலை

சங்ககாலத்திற்கு முன்பிருந்தே, இசைத்தமிழ் வளர்ச்சியுற்றுள்ளதைப் பழந்தமிழ் நூல்களால் நாம் அறிகின்றோம். பண், திறம் எனும் இருவகைப் பிரிவுகளையுடையது இசைத்தமிழ். மாத்திரைகள் எனப்படும் 22 வகை சுருதிகளும் குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் என்னும் எழுவகைச் சுரங்களும் தொன்றுதொட்டு இசைத்தமிழின் கூறுகளாகப் போற்றப்படுகின்றன; காலப்போக்கில் பழந்தமிழிசையில் திரிபுகளும் மாற்றங்களும் உண்டாயின. 'கருநாடக இசை' எனும் புதிய பெயரினை அது பெற்றது. "கருநாடக சங்கீதம் என்று வழங்கும் தென்னாட்டு இசைக்கலை, தமிழ் மக்களின் பரம்பரைச் சொத்து. சிலப்பதிகாரக் காலத்துக்கு முன்னாலிருந்து தமிழ்நாட்டில் இந்த இசைக்கலை உருவம் பெற்று வளர்ந்தது" என்பது அறிஞரின் துணிவாகும். இவ்விசையினைத் தம் வாழ்க்கையின் பல்வேறு துறைகளிலும், நிலைகளிலும் தமிழ்மக்கள் போற்றி வளர்த்துள்ளனர். அதில், இனிமையும் கனிவும் இழைந்தும், அகத்தெழு உணர்ச்சி ஆன்மிக ஒலிநயத்தில் தோய்ந்தும் வெளிப்படுவதை இன்றும் கேட்டுணரலாம்.

இசை என்பது வாயினால் பாடுவது மட்டும் அன்று; கருவியினால் இசைப்பதும் இசையேயாகும். பன்னெடுங்காலமாக குழல், யாழ், முழவு எனும் மூவகை இசைக்கருவிகள் பெருஞ்சிறப்புடையனவாகத் தமிழகத்தில் போற்றப்பட்டு வருகின்றன. குழலினைத் துளைக்கருவி வகையிலும், யாழினை நரம்புக்கருவி வகையிலும், முழவினைத் தோற்கருவி வகையிலும் அடக்குவர். இவற்றுள், யாழ் என்பது, வீணை எனும் இசைக்கருவி தென்னாட்டில் புகுத்தப்படுவதற்கு முன்னர்ப் பெருவாழ்வு பெற்று விளங்கியது. ஏழு நரம்புகளைக் கொண்ட சீறியாழ் முதல் ஆயிரம் நரம்புகளைக் கொண்ட பேரியாழ் வரை பல திறப்பட்ட யாழ்க்கருவிகளை (சகோடயாழ், செங்கோட்டியாழ், வில்யாழ், மகரயாழ் முதலியன)ப் பண்டைத்தமிழர் இசைத்து மகிழ்ந்தனர். வீணையில் எழுப்ப இயலாத சுரங்களையெல்லாம் யாழிலே இசைத்து, நம் முன்னோர்கள் இன்புற்றனர். இந்திய இசைக்கருவிகளுள் யாழுக்கும், அதன் இசைக்கும் தனி இடம் உண்டு.

இப்பொழுது "நாகசுரம்" எனும் துளைக்கருவி சிறப்புற்று விளங்குகிறது. இதில் வல்ல இசைவாணர்கள் தமிழ்நாட்டிலேயே உள்ளனர். மேற்கு நாட்டு 'கிளாரினெட்டு' கருவி இசையைவிட, நாகசுரம் இனிமையும் ஒத்திசைவும் உடையது.

இன்று தமிழகத்தில் சிறப்புற்று விளங்கும் வீணை, யாழினை அடிப்படையாகக் கொண்டு வளர்ந்த வளர்ச்சிக்கேற்பச், சில மாற்றங்களோடு அமைத்துக் கொள்ளப்பட்ட இசைக்கருவியாகும். வீணை முதலில் யாழ் போன்று இருந்து படிப்படியாக, இன்றைய வளர்ச்சி அடைந்தது என்பது இசையியல் அறிஞரின் துணிவாகும். தமிழகத்து மக்களே இன்றும் வீணையை இசைப்பதில் தலைசிறந்த கலைஞர்களாக விளங்குகின்றனர். இதை வட இந்திய அறிஞர்கள் தம் ஆராய்ச்சியின் மூலம் உலகிற்கு உணர்த்தியுள்ளனர்.[11] எனவே, பழந்தமிழிசை இன்று கருநாடக சங்கீதமாகவும், பண்டைத் தமிழகத்து இசைக்கருவியான யாழ், இன்று வீணையாகவும் மாற்றமும் வளர்ச்சியும் பெற்றுள்ளதை யாரும் எளிதில் புறக்கணிக்க இயலாது.

நாட்டியக்கலை

தமிழகத்தின் மற்றொரு சிறப்புமிக்க கலை பரத நாட்டியம். இக்கலையே, பல்வேறு கலைகளுக்கு அடிப்படையாகவும் மூலமாகவும் இருந்து வருகிறது. உள்ளத்தில் உண்டாகும் உணர்ச்சிகளையும் கருத்துகளையும் உடலுறுப்புகள் வாயிலாகப் புறத்தார்க்குப் புலப்படுத்துவதே நாட்டியக்கலையின் நோக்கம். முகக்குறிப்பு, கண்குறிப்பு, கைக்குறிப்பு என்னும் பகுதிகளைக் கொண்ட நாட்டியக் கலையோடு இசைக்கலையைக் கலந்து, பேரின்பத்தை அளிக்கிறது பரதநாட்டியம். எண்வகை மெய்ப்பாடுகளே இக்கலையின் உயிர்நாடி. இக்கலை, கோயிலில் பயன்படுத்தப்படும் சிற்பக்கலை, படிமக்கலை, இசைக்கலை ஆகியவற்றோடு நெருங்கிய தொடர்பும் இசைவும் கொண்டது. இதனைப் போற்றி வளர்த்துவருவது மட்டும் அல்லாமல், இன்றைக்கு அக்கலைக்கு ஒரு புது வாழ்வினை அளித்து, உலகப் பெருங்கலையாக அதனை மாற்றி வருகின்றவர்களும் தமிழர்களேயாவர்.

இவ்வழகுக்கலை தோன்றி வளர்ந்தது தமிழ்நாட்டில். ஆனால், இக்கலையின் நுட்பத்தை அறிவியல் முறைப்படி ஆராய்ந்து 'நாட்டிய சாத்திரத்தை'ப் பரதர் என்னும் கலைஞர், வடமொழியில் எழுதியுள்ளார். நாட்டியம் எனும் சொல் 'நிருத்' எனும் திராவிட மொழியின் வேர்ச்சொல்லிலிருந்து நிருத்த, திருத்திய, நாட்டிய

11. Swami Prajnananda, Historical Development of Indian Music, p.35.

என்று திரிந்திருப்பதாக மொழியியல் அறிஞர்கள் கருதுகின்றனர்.[12] மேலும், பரத முனிவர் தென்னாட்டைச் சேர்ந்தவர் என்றும், அவர் ஆரியரல்லாத இந்தியப் பழங்குடி மக்கள் இனத்தைச் சேர்ந்தவர் என்றும், தம் காலத்திய நிலைமைக்கேற்ப, வடமொழியில் நாட்டிய சாத்திரத்தை அவர் இயற்றியருளினார் என்னும் வடமொழி நாடக ஆராய்ச்சியாளர்கள் தெரிவிக்கின்றனர்.[13]

தென்னாட்டில், நாட்டியக்கலை தெய்விகக் கலையாகப் போற்றி வளர்க்கப்பட்டு வருவதைக் கல்வெட்டுகளும் இலக்கியங்களும் எடுத்தியம்புகின்றன. இக்கலையின் தனிச்சிறப்பை

> இந்தியாவில் வளர்க்கப்பட்டுள்ள நாட்டியக் கலைகள் அனைத்திலும் பரத நாட்டியக்கலை, தலைசிறந்ததாகும். இதனுடைய தொன்மைச் சிறப்பும் ஏற்றமும் எழிலும் பிற நாட்டியக் கலைகளில் காணப்படவில்லை. பரதநாட்டியத்தின் மேன்மையையும் சிறப்பையும், அதனுடைய பெண்களாகக் கருதத்தக்க இந்தியாவின் பிறநாட்டியக்கலைகளில் காண்பது அரிது[14]

என்று பரதநாட்டியக் கலையில் தன்னிகரற்று விளங்கும் கலைஞர் ஒருவர் மொழிந்துள்ளமை, இங்குக் கருதத்தக்கது.

நாட்டியத்தோடு கதையும் பாட்டும் இணைந்து வளர்ந்தபொழுது, நாடகம் மலர்ந்தது. இதைக் கதை தழுவிய கூத்து என்பர். இது இருவகைப்படும். அகக்கூத்து, புறக்கூத்து என்பது ஒருவகை; சாந்திக்கூத்து, விநோதக்கூத்து என்பது மற்றொரு வகை. இவை ஒவ்வொன்றும் பல்வேறுவகை உறுப்புகளை உடைத்ததாய் இருந்தன. இவற்றை வேத்தியல். பொதுவியல் எனவும் பாகுபடுத்துவர். வேந்தனது அவையில் நடிப்பதற்குரிய தகுதியும் கலைச்சிறப்பும் வாய்ந்தது வேத்தியல் பாமர மக்களுக்கு மகிழ்ச்சியூட்டும் வகையில் ஆடப்பட்ட ஆடல்களும் சமயச் சடங்குகளோடு இணைந்த கூத்துகளும் பொதுவியல் எனப்பட்டன. வரிக்கூத்துகளும், பதினோராடல்களும் இத்தகையனவாகும்.

பிற கலைகள்

இவை அல்லாமல், இன்னும் பல்வேறு கலைகள் இந்நாட்டில் போற்றி வளர்க்கப்பட்டு வருகின்றன. இன்றும் தஞ்சையில் தாம்பாளத் தட்டுகளில் சிற்ப வேலைப்பாடு செய்யும் கலை

---

12. F.B.Kuiper, Indian Linguistics, Vol.16; p.104.
13. Indu Shekar, Origin of Sanskrit Drama, pp.22-32.
14. Rukmini Devi, 'Bharata Natyam, The South Indian Classical Dance' in Tamil Culture, Vol.2 p.138.

(Tanjore Plates) சிறந்து விளங்குகிறது. அங்கு நெட்டியில் பல அழகிய பொருள்களையும், மாலைகளையும், வண்ண வண்ண மணிகளையும் செய்யும் வினைஞர்கள் பலர் வாழுகின்றனர். ஏலக்காய் போன்ற வாசனைப் பொருள்களை மாலையாகத் தொடுப்பதிலும், மரங்களில் விளையாட்டுப் பொம்மைகளைச் செதுக்குவதிலும் கைதேர்ந்த கலைஞர்கள் பலர் இன்றும் உள்ளனர்.

இத்தகைய கலைச்செல்வங்களின் தாயகமாக விளங்கும் தமிழகத்தை, 'கோயில்களின் திருநாடு' எனப் போற்றுவர். நாம் 'அழகுக் கலைகளின் காட்சியகம்' எனக் கூறுவோமானால், அது தமிழகத்திற்கு முற்றிலும் பொருந்தக்கூடிய பாராட்டுரையாக அமையும்!

> இந்திய நாகரிகத்தில் காணப்படும் ஆரியர் அல்லாதாரின் பண்பாட்டுக் கூறுகளில் திராவிடப் பண்பாட்டின் கூறுகளே முதன்மையானவையும் முக்கியமானவையுமாகும். இந்தியப் பண்பாட்டின் அடிப்படை, ஐம்பது விழுக்காட்டிற்கு (50%) மேல் திராவிடப் பண்பாட்டின் கூறுகளைக் கொண்டிருப்பது மறுக்க இயலாத உண்மை[15]

எனும் டாக்டர் சுநீதகுமார சாட்டர்ஜியின் கருத்து, இங்குக் கருதத்தக்கதாகும்.

15. Tamil Culture, Vol.viii, p.275.

8

இளைய செம்மல்

செந்தமிழ்க் காப்பியங்களுள் சிறப்புமிக்க கலைக்காப்பியமாகக் கம்பராமாயணம் விளங்குகிறது. கதை நிகழ்ச்சிகள், கற்பனை வளம், பாத்திரப்படைப்பு, உணர்த்தும்முறை, காப்பியக் கட்டுக்கோப்பு முதலிய காப்பியப் பண்புகள் கம்பனுடைய கைவண்ணத்தால், வலிவும் பொலிவும் பெற்றுள்ளன. உலகப் பெரும் காப்பியங்களின் சிறப்பு இயல்புகள் அனைத்தும், கம்பனின் இராமாயணத்தில் இழையோடிச் செல்லுகின்றன. உலகம் உள்ளளவும், உள்ளத்தில் நிலைத்து நிற்கத்தக்க பல்வகைப் பண்பு வாய்ந்த பாத்திரப் படைப்புகள் கம்பனின் காப்பியத்தில் ஒளிவிட்டுப் பிரகாசிக்கின்றன.

காப்பிய மாந்தர்

காப்பிய மாந்தர் தலைமைப் பாத்திரங்கள், துணைப்பாத்திரங்கள் என இருவகைப்படுவர். துணைப் பாத்திரங்களை மூவகைப்படுத்தலாம். காப்பியத்தலைவன், தலைவியர் வாழ்க்கையோடு தொடர்புடையவராயும், அவர்கள் வாழ்க்கையில் திருப்பங்களை உண்டாக்கும் ஆற்றலுடையவராயும் செயல்படும் காப்பிய மாந்தரை, **ஒன்றிய பாத்திரங்கள்** எனலாம். தலைமை மாந்தரை, புரிந்து கொள்ளவும், அவர்களுடைய பண்பை அறிந்துகொள்ளவும் உதவும் வகையில், அவர்களோடு ஒட்டியும் ஒட்டாமலும் நிற்கும் காப்பியமாந்தரை ஒட்டிய **பாத்திரங்கள்** எனவும் வகைப்படுத்தலாம். காப்பியக் கதைப்போக்கில் சிறிதளவே இடம்பெற்று, தலைமை மாந்தரின் பண்பு விளக்கத்திற்குச் சில சமயங்களில் ஊன்றுகோலாய் விளங்கும் காப்பிய மாந்தரை **ஊன்றிய பாத்திரங்கள்** எனவும் வேறுபடுத்தலாம். இம்மூவகைத் துணைப் பாத்திரங்களுள், இலக்குவன், **ஒன்றிய** பாத்திரமாகத் தோன்றுகிறான். காப்பியத்தலைவன், தலைவியர் ஆன இராமன், சீதை ஆகியோரின் வாழ்க்கையோடு ஒன்றிய நிலையில், தனக்கெனத் தனிப்பட்ட வாழ்க்கை வாழாதவன் இலக்குவன், தன் வாழ்க்கையின் பெரும்பகுதியை அண்ணனோடு கழித்துவிட்டவன் இலக்குவன்.

தன்னிகரற்ற தலைவனாகிய இராமபிரானோடு இளமை முதல், ஒளியும் நிழலும்போல விட்டுப்பிரியாது இலக்குவன் வாழ்ந்தான். கம்பனின் காப்பியம் முழுவதிலும் இணைபிரியாத இரு சகோதரர்களாகப் படைக்கப்பட்டுள்ளவர் இராம இலக்குவரேயாவர். தன்னுடைய விருப்பு, வெறுப்பு, அவா ஆகிய அனைத்தையும் – வாழ்விலும் தாழ்விலும் – இராமனுடைய நலமிக்க, வளமிக்க, புகழ்மிக்க வாழ்க்கைக்காகத் தியாகம் செய்து, தலைவனுடைய இன்ப துன்பங்களில் ஒன்றிவிட்டவன் இலக்குவன் என்பதைக் கம்பன், பல கோணங்களில் படம்பிடித்துக் காட்டுகின்றான். இவ்வியல்புகளை நோக்குகின்ற பொழுது இராமகாதையின் தலைசிறந்த ஒன்றிய பாத்திரமாக இலக்குவன் விளங்குவது எளிதிற் புலனாகும்.

அன்பே வடிவானவன்

இலக்குவன் உணர்ச்சியின் பிண்டமாகத் தோன்றுகிறான்; தனக்கென வாழாதவன்; தான் மதித்துப் போற்றும் அண்ணனையே தலைவனாக – வழிபடு தெய்வமாகக் கொண்டவன் அவன். பாலகாண்டத்தில், 'இளையவள் பயந்தனள் இளைய **வீரனை**' (பால.286) என வீரனாக அறிமுகப்படுத்தப்படுகிறான். பொன்னிற மேனியனாகத் தோன்றியமையால்,

விலக்கரு மொய்ம்பின் விளங்கொளி நாமம்
இலக்குவன் என்ன **(பால.301)**

வசிஷ்ட முனிவர் பெயர் சூட்டுவதைக் காணுகின்றோம்.

தசரத மன்னனிடம், 'கரிய செம்மல் ஒருவனைத் தகுதி' (பால.327) என்று விசுவாமித்திரர் கேட்கிறார். ஆனால், 'நம்பியும் தம்பியும்' அம்முனிவரோடு அனுப்பப்படுகின்றனர். இளைய செம்மல் அண்ணனோடு காட்டிற்குச் செல்கிறான். கதையின் தொடக்கம் முதல் கடைசிவரை அவர்கள் இணைபிரியாத – இரட்டைச் சகோதரர்களாக வாழ்வதைக் காணுகின்றோம். இயல்பாகவே இராமனிடத்துப் பேரன்புகொண்டவன் இலக்குவன். இராமனுடைய முடிசூட்டுவிழா தடைப்பட்ட பொழுது, அவனுற்ற துன்பமும், அதன்வழி வெளிப்பட்ட சீற்றமும் நம்மை நடு நடுங்கச் செய்வன. இத்தகைய இலக்குவனைப் பார்த்து, அவனுடைய அன்னை சுமித்திரை,

மகனே! இவன்பின் செல்! தம்பி
எனும்படி அன்று **(1742)**

எனும் கட்டளையை இட்ட பிறகு, இராமன் தன்னோடுவர வேண்டா என வேண்டினால், அவன் இசைவானோ?

என்னையும் பிரிந்தவர் இடருறா வகை
உன்னைநீ யென்பொருட்டு உதவுவாய் **(கம்ப.1844)**

என இராமன் தம்பியிடம் வேண்டுகின்றான். இதற்கு இலக்குவன் கூறும் மறுமொழி, அவனுடைய அன்பு மனத்தின் வேதனையை உணர்த்துகிறது. இலக்குவன், 'யான் உனக்கு பிழைத்தது யாது?' (கம்ப.1849) என வினவுகிறான். நான்கே சொற்கள்! ஆனால், ஒவ்வொரு சொல்லும் அவனுடைய உள்ளத்தின் குமுறலை, ஏமாற்றத்தை, ஏக்கத்தை, அன்பின் ஆழத்தை வெளிப்படுத்துவனவாக அமைந்துள்ளன.

குகனை, அண்ணனிடம் அறிமுகப்படுத்தும்பொழுது,

உள்ளம் தூயவன்; தாயின் நல்லன்
எற்றும்நீர்க் கங்கை நாவாய்க்கு
இறை! குகன் ஒருவன்! **(கம்ப.2054)**

எனக் கூறுவது, முற்றிலும் இலக்குவனுக்கும் பொருந்தும். சித்திரக்கூடத்தில், இலக்குவன் அமைத்த பரணசாலையைக் கண்டு, இராமன், 'என்று என் தம்பி இக்கலையைக் கற்றான்?' என வியக்கின்றான். அண்ணனிடம், இலக்குவன் கொண்ட அன்பு, தன்னலம் சிறிதும் நாடா அன்பு – பக்தியாக மலர்ந்து மணம் பரப்புகிறது. அண்ணனிடத்துக் கொண்ட அன்பினால், இலக்குவன் 'பசிநோக்காது, கண் துஞ்சாது, கருமமே கண்ணனாக'க் கடமையைக் கடமைக்காக, மகிழ்வுடன் ஆற்றிய மாவீரன்' என்பதைக் கம்பர் சுட்டத் தவறவில்லை. 'சித்திரக் கூடத்திலே இராப்பொழுதை இலக்குவன் எவ்வாறு கழித்தான்?' எனப் பரதன், குகனிடம் கேட்கின்றான். 'இராமனும் சீதையும் உறங்க, இலக்குவன் இரவு முழுவதும் இமைகொட்டாது வில்லை யூன்றிய கையினனாய், பெருமூச்சினனாய் இராமனுக்கு நேர்ந்த துன்பத்தை நினைந்து, கண்ணீர் சொரிந்தபடியே காவல் புரிந்து நின்றான்' எனக் குகன் கூறுகின்றான்.

அல்லையாண்டு அமைந்த மேனி
அழகனும் அவளும் துஞ்ச
வில்லையூன் றியகை யோடும்
வெய்துயிர்ப் போடும் வீரன்
கல்லையாண்டு உயர்ந்த தோளாய்
கண்கணீர் சொரியக் கங்குல்
எல்லை காண்பளவு நின்றான்
இமைப்பில நயனம் என்றான் **(கம்ப.1052)**

இங்கே மாவீரன் இலக்குவனை மட்டுமா நாம் காணுகின்றோம்? தியாகத்தின் திருவுருவையும் பார்க்கின்றோம்.

கிஷ்கிந்தை அரண்மனைக்குச் சீற்றத்தோடு சென்ற இலக்குவனை,

ஐய! நீ ஆழிவேந்தன்
அடியிணை பிரிகலாதாய்
எய்தியது என்னை? என்றாள்
இசையினும் இனிய சொல்லாள் **(கம்ப.4423)**

தாரை.

அதைக்கேட்ட இலக்குவன்,

ஆர்கொலோ உரை செய்தார்? **(கம்ப.4424)**

எனச் சுற்றும் முற்றும் பார்க்கின்றான். அப்பொழுது,

மங்கல அணியை நீக்கி
மணியணி துறந்து வாசக்
கொங்கு அலர்கோதை மாற்றி,
குங்குமம் சாந்தம் கொட்டாப்
பொங்குவெம் முலைகள், பூகக்
கழுத்தொடு மறையப் போர்த்த
நங்கையைக் கண்ட வள்ளல்
நயனங்கள் பனிப்ப **(கம்ப.4425)**

அவன் நின்றான்.

அவன் கண்களில் நீர்க்கசிய காரணம் என்ன?

‘இனையர்ஆம், என்னை ஈன்ற
இருவரும்’ என்ன வந்த
நினைவினான், அயர்ப்புச் சென்ற
நெஞ்சினான்; நெடிது நின்றான் **(கம்ப.4426)**

தந்தையின் மறைவால், தன் தாயார் உற்றகோலத்தை நினைந்து, அவன் வருந்துகிறான். அவனுடைய மனவேதனையை, தாய்மாருக்கு உண்டான அவலத்தைக் காணுகின்ற பொழுதும், அவனுடைய அன்பு உள்ளம்தான் வெளிப்படுகின்றது. இலக்குவனுடைய அன்புள்ளம் – தன்னலம் கருதாத் தாயுள்ளமாகவே காட்சி தருகிறது!

வீரமும் தீரமும்

இலக்குவனுடைய மாவீரம் புலப்படும் இடங்கள் பல. அவற்றுள் போர்க்களம் முதன்மையிடம் பெறுகிறது. அரக்கர் சேனையை அழித்தொழித்த இளைய பெருமாளின் வீரத்திற்கு மணிமுடி வைத்தாற்போல் விளங்குவது இந்திரசித்தைக் கொன்று, அவன் தலையை அண்ணனிடம் காணிக்கையாக வைத்த நிகழ்ச்சியாகும். அதைக்கண்டு மகிழ்ந்த இராமன்,

மறையோன் படைத்த மாநிலத்தில்
தம்பி உடையான் பகை அஞ்சான்
என்னும் மாற்றம் தந்தனையால்! **(கம்ப.9320)**

என்று தம்பியைப் பாராட்டுகின்றான்.

ஒரு கட்டத்தில் பகைவனாகிய இந்திரசித்தே. இலக்குவனுடைய பேராற்றலைப் போற்றிப் பாராட்டுகிறான்.

‘அந்நரன் அல்லன், ஆகில்
நாரணன்; அனையன் அன்றேல்,
பின் அரன், பிரமன் என்று
பேசினும் பிறந்து வாழும்
மன்னர், நம் பதியில் வந்து
வரிசிலை பிடித்த கல்வி
இந்நரன் தன்னோடு ஒப்பார்
யாருளர் ஒருவர்?’ என்றான். **(கம்ப.8252)**

என்பது இலக்குவனுடைய வீரத்தின் சிறப்பிற்குப் பகைவன் வழங்கிய சான்றிதழாகும்.

இத்தகைய மாவீரனின் சீற்றமும் வீரமும் செயலற்றுப்போகும் இடங்கள், அவனுடைய சிறப்புமிகு பண்புநலனைப் புரிந்து கொள்ளவும், இராமபிரானது ஆற்றல்மிகு ஆளுமையை அறிந்து வியப்புறவும் உதவுகின்றன. கைகேயியின் சூழ்ச்சியால், அண்ணன் அரசனாக முடிசூட்டப்படவில்லை என்பதை அறிந்த உடனே, இலக்குவன் காட்டுக்கு அடங்காது பெருக்கெடுத்து ஓடும் காட்டாறு போன்று சீற்றமுற்று, போர்க்கோலம் கொண்டதைக் கம்பன், கவின்மிகு சொல்லோவியங்களாகத் தீட்டுகின்றான்.

கண்ணில் கடைத் தீஉக
நெற்றியில் கற்றை நாற.
விண்ணில் சுடரும்

சுடர்வீய, மெய் நீர் விரிப்ப
உள்நிற்கும் ஊதை பிறக்க, நின்ற
அண்ணல், பெரியோன் தனது
ஆதி மூர்த்தி ஒத்தான் **(கம்ப.1807)**

இப்பாடல் நம் மனக்கண் முன்னே, கோபத்தால் கொதித்து எழுந்த இலக்குவனைக் கொண்டு வந்து நிறுத்துகின்றது அன்றோ?

கைகேயி இழிசெயல் செய்யத் துணிந்ததை எள்ளி நகையாடும் இளவல்,

சிங்கக் குருளைக்கு இடும்
தீஞ்சுவை ஊனை நாயின்
வெங்கண் சிறு குட்டனை
ஊட்ட விரும்பினா ளால்
நங்கைக்கு அறிவின் திறம்
நன்று இது! நன்று இது! **(கம்ப.1809)**

என்று கூறி, கைகளைக் கொட்டி நகைத்தான்.

பெற்றோரிடத்து பெருமதிப்பு கொண்டிருந்த இலக்குவன், தவறு செய்யத் துணிந்து, தசரதனை மாபெரும் பழிக்கு ஆளாக்க முனைந்த அன்னையினை 'அறிவுகெட்டவள்' எனத் தூற்றத் தொடங்கியமைக்கு என்ன காரணம்? பொறாமையா? தன்னலமா? மாற்றாந்தாய் என்பதால் அவள் மீது உண்டான வெறுப்பா? இவற்றை எல்லாம் அவன் அறியான்! ஒன்றே ஒன்றுதான் அவனுக்குத் தெரியும். அதுதான் அன்பு! இல்லை! "பக்தி'! உரிமை பறிக்கப்படுவதை, அநீதி இழைக்கப்படுவதைப் பார்த்துக்கொண்டு வாளா இருக்க, அவன் உள்ளம் இடம் தரவில்லை. எனவே, அவன் குமுறும் எரிமலை யாகின்றான். அதனால்,

புவிப்பாவை பரம் கெடப்
போரில் வந்தோரை யெல்லாம்
அவிப்பானும் அவித்து அவர்
ஆக்கையை அண்டம் முற்றக்
குவிப்பானும், எனக்கு ஒரு
கோவினைக் கொற்ற மௌலி
கவிப்பானும், நின்றேன்! இது
காக்குநர் காமின்! **(கம்ப.1812)**

என்று வீரமுழக்கம் செய்கிறான்; 'அறை கூவல்' விடுக்கிறான். இவ்வாறு இலக்குவன் துடிக்குமாறு தூண்டும் விசையாது? அவன் இராமனிடத்துக் கொண்ட அன்புதான். இதைத்தான் திருவள்ளுவர்,

அறத்திற்கே அன்புசார்பு என்ப அறியார்
மறத்திற்கும் அஃதே துணை **(குறள்.76)**

என்று மொழிந்துள்ளார்.

தம்பியின் நாணொலி கேட்டு, ஓடோடி வந்த இராமன்,

உளையா அறம் வற்றிட,
ஊழ்வழு உற்ற சீற்றம்
விளையாத நிலத்து, உனக்கு
எங்ஙன் விளைந்தது? **(கம்ப.1820)**

என வினவுகிறான். "'மூத்த மகனுக்கே அரசுரிமை' எனும் வழக்காற்று முறையைப் பின்பற்றி, உன் தந்தை அதை உனக்கு அளித்தான். ஆனால் நீயோ பகைமையுடைவர்களால் அந்நாட்டை இழந்து காட்டை அடைகின்றாய் என்றால், இப்பொழுது எனக்குச் சீற்றம் உண்டாகாமல், பின் எப்பொழுது உண்டாகவேண்டும்?" என வருத்தத்தோடு, தன் சீற்றத்திற்குக் காரணத்தை இலக்குவன் கூறுகிறான்.

அவனுடைய ஆறாக்கோபத்தை மாற்ற, அண்ணல் உரைக்கும் அறிவுரை, இளவலின் உள்ளக் கொதிப்பைத் தணிக்கவில்லை. அண்ணன் கூறிய,

மைந்த! விதியின் பிழை நீ
இதற்கு என்னை வெகுண்டது? **(கம்ப.1824)**

எனும் சொற்கள், இலக்குவன் காதுகளில் ஓயாது ஒலித்துக் கொண்டே இருக்கின்றன. மானிடர் மீது கொண்ட கோபம், விதியின் மீதே பாய்கிறது.

விதிக்கும் விதி ஆகும் என்
வில் தொழில் காண்டி! **(கம்ப.1825)**

என மீண்டும் அவன் வீரமுழக்கம் செய்கிறான்.

அவனுடைய கடுஞ்சீற்றத்தை மாற்ற,

..... நின்தன்
வாய் தந்தன கூறுதியோ மறை
தந்த நாவால்?....

..... ஈன்ற
தாய்தந்தை என்றால் அவர்மேல்
சலிக்கின்றது என்னோ? **(கம்ப.1826)**

என்று இராமன் நயமாகப், பெற்றோரிடம் குறை காணலாகாது என்பதைத் தெரிவிக்கின்றான். உடனே, இலக்குவன் 'உன்னைத் தவிர எனக்கு வேறு பெற்றோர்கள் இல்லையே! நீதானே எனக்கு எல்லாம்!' எனக்கூறி, செய்வது அறியாது, கையை நொடித்தான் எனக் கம்பர் வீறுகொண்டு எழுந்த இளவலையும், அவன் 'வேகம் கெடுத்து ஆண்ட வேந்தனையும்' காட்டுகிறார். இதிலிருந்து ஓர் உண்மை புலனாகின்றது. இலக்குவன் 'போற்றி வழிபடும், பின்பற்றும் இலட்சியத் தலைவன் இராமன்' என்பது தெரிகிறது. ஈன்று புரந்தந்த தாயாகவும், சான்றோனாக்கும் நல்தாதையாகவும், வழிகாட்டும் தனிப்பெருந் தலைவனாகவும், உலகைப் போற்றிக் காக்கும் இறைவனாகவும் இராமனை, நெடுங்காலமாக இலக்குவன், தன் உள்ளத்தில் போற்றி வருவது புலனாகின்றது. ஆகவே, அவனுக்கு வேறு தாய், தந்தையர் இல்லை! எனவே, 'கைகேயி முதலியோரைக் கொல்வதால் பாவம் உண்டாகாது!' என்பது இலக்குவனின் வாதமாகும். இதனால், அவனுடைய அன்பின் ஆழத்தையும், பக்தியின் பெருமையையும் அறிய முடிகிறது. இறுதியில் 'செல்லும் சொல்வல்லான்' எதிரில் அவனுடைய சீற்றம் பையப்பைய அவிந்து விடுவதைக் காணுகின்றோம்.

இளைஞர்கள் துடிப்பானவர்கள். எளிதில் உணர்ச்சி வயப்படுவர்; அவசர முடிவிற்கு வந்துவிடுவர். இலக்குவன் இத்தகைய இயல்புடையவனே என்பதைப் பரதன் சேனைகளோடு தொலைவில் வருவதைக் கண்டு இலக்குவன் அடைந்த சீற்றத்தையும், இராமன்,

சேண்உயிர் தருமத்தின் தேவைச் செம்மையின்
ஆணியை அன்னது நினைக்கல் ஆகுமோ? **(கம்ப.2510)**

என்று வினவியதையும் சிலர் காட்டுவர். இங்கும், அண்ணன் மீது கொண்ட முறுகிய அன்பே – பக்தியே – இத்தகைய எண்ணத்தை இலக்குவன் உள்ளத்தில் எழச் செய்தது என்பதை நாம் மறக்கலாகாது.

சீதா பிராட்டியைத் தூக்கிச்செல்ல, அவள் இருக்கும் இடத்தை நோக்கிச் சென்ற சூர்ப்பனகையைக் கண்டபொழுதும், அண்ணன்மீது கொண்ட அன்புதான் பெண் என்றும் பாராது, 'மூக்கும் காதும் வெம்முரண் முலைக்கண்களும் முறையால் போக்கிய' சினத்தனாக இலக்குவனை ஆக்கியது. எனவே, இலக்குவனுடைய செயல்களுக்கு, இராமபிரான் மீது கொண்ட அன்புதான் உந்துதல் சக்தியாக அமைந்ததே யொழிய, வேறெந்த உள் நோக்கமும் அவனுக்கு இருந்தது இல்லை எனலாம்.

வருமுன் காக்கும் மதிநுட்பம் உடையோன்

இலக்குவன் எளிதில் சீற்றம் அடையும் இயல்புடையவன் என்பது உண்மை! ஆனால், அதேசமயத்தில், கூர்த்த மதியுடையவன்; அறிவின் துணையைக் கொண்டு பின்னால், விளையும் பயன் யாதாக இருத்தல் கூடும் என்பதை உய்த்து அறிந்து, செயல்படுவதில் அவன் வல்லவன்.

மாயமானைக் கண்டு சீதை பிடித்துத் தருமாறு இராமனை வேண்டியபொழுது,

இது விரும்பத்தக்கது அன்று!
விளைவு வேறாகலாம் **(கம்ப.3385)**

என்று இலக்குவன் எச்சரிக்கை செய்ததோடு,

பின்னின்றார் ஏனையர் என்றும்
உணர்கிலம்; பிடித்த மாயம்
என்என்று தெளிதல் தேற்றாம்;
யாவது ஈது என்றும் ஓராம்;
.....
பொன் நின்ற வயிரத் தோளாய்
புகழுடைத்தாம் அன்று! **(கம்ப.3398)**

என அறிவுறுத்துவதும் சிந்திக்கத் தக்கதாகும்.

தம்பியின் சொற்களுக்குச் செவிமடுக்காது, மனைவியின் தூண்டுதலால் பொன்மான் பின் போய் அல்லற்பட்ட இராமனே,

'செய்யது அன்று!' எனச் செப்பிய தம்பியை,
ஐயன் வல்லவன்! என்ஆருயிர் வல்லன்! நான்
உய்ய வந்தவன் வல்லவன்! என்று உன்னினான் **(கம்ப.3412)**

எனப் பாராட்டுவதைக் காணுகின்றோம்.

இதைப்போன்றே, மாரீசனின் வஞ்சனைக் குரலைக்கேட்டு அதிர்ச்சியுற்ற சீதைக்கு, எவ்வளவோ எடுத்துரைத்தும், அவள் நம்பிக்கைக் கொள்ளாமல், 'அண்ணனுக்கு ஆபத்து! உடனே போய் உதவுக!' என்று அவள் வற்புறுத்தினாள். செய்வது வேறொன்றும் அறியாதவனாய், வேகின்ற சிந்தையால் விடை கொண்டு, "அரசன் ஆணைநீர் மறுத்து, ஏகி என்றீர்! இருக்கின்றீர் தமியீர்!" (கம்ப.3432) எனத் தெரிவித்துச் சென்றமையும் இலக்குவனுடைய ஆழ்ந்து, சிந்தித்துச் செயலாற்றும் அறிவுத்திறனைப் புலப்படுத்துகின்றது.

தொகுப்புரை

*இராமன் சக்கரவர்த்தியின் திருமகனாகவும், சான்றாண்மைமிக்க தத்துவ ஞானியாகவும், கடவுள் தன்மை வாய்ந்த கடமை வீரனாகவும் காட்சியளிக்கின்றான். ஆனால், இலக்குவனோ, மனிதப் பண்புகளின் மாண்புமிகு திருவுருவாய்த் தோன்றுகின்றான்! உணர்ச்சியின் பிண்டமாக, எளிதில் விருப்பு வெறுப்பிற்கு இரையாகும் மனிதனாகவே கம்பன் படைத்துள்ள இலக்குவன், தம்மோடு உறவு கொள்ளுகின்றான். மாற்றாரைத் தற்காப்பிற்காக அழிப்பதிலே அவன் மாவீரனாக விளங்குகின்றான்! அதே சமயத்தில், 'எதிரதாக் காக்கும்' அறிஞனாகவும் திகழுகின்றான்! இப்பண்புகள் யாவும், நம்மிடையே வாழும் மனிதர்களையே நினைவூட்டுகின்றன. இதற்கு மேலாக, அவனிடம் மற்றொரு சிறப்புமிகு பண்பு, உள்ளார்ந்த இயல்பாக இலங்கியது. அதுதான் அண்ணனிடம் கொண்ட அன்பு! இது வெறும் 'சகோதர பாசம்' அன்று! அதைவிட உயர்ந்தது! சிறந்தது! ஆன்மிக உணர்வு குழைந்த அன்பு! அதனை ஆன்மநேயம் என்றோ, பக்தி என்றோ கூறலாம். அந்த உணர்வுதான், பொதுவாகப் பிற மக்களிடமிருந்து வேறுபட்ட, 'பற்றின்றிப் பயன் கருதாது பணி செய்யும்' **கருமயோகியாக** இலக்குவனைப் பொன்றாப் புகழ்பெறச் செய்தது எனலாம்.*

குறிப்பு: பாடல் எண்கள், அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் வெளியீடான கம்ப இராமாயணத்தில் காணப்படும் முறையைப் பின்பற்றி அமைக்கப்பட்டுள்ளன.

9

கி.பி.2000

தம்மின் தம்மக்கள் அறிவுடைமை மாநிலத்து
மன்னுயிர்க் கெல்லாம் இனிது

என்பது வள்ளுவர் வாய்மொழி. "தம்மைவிட, தம் மக்கள் அறிவில் சிறந்து விளங்க வேண்டும்; தம்மைவிட, தம் மக்கள் அறிவிலும் ஆற்றலிலும் சிறந்து விளங்குவதோடு வளமாகவும் நலமாகவும் வாழ வேண்டும்" என்னும் பேராவல் உடையவர்களாகப் பெற்றோர்கள் உள்ளனர். அத்தகைய வாழ்க்கையை அவர்களுக்கு அமைத்துக் கொடுக்க அவர்கள் அரும்பாடுபடுகின்றனர். இது, உலகில் நாம் காணும் அன்றாடக் காட்சியாகும்.

புதிய உலகம்

இதைப்போன்ற, தம் நாட்டு மக்களின் அல்லது மனித இனத்தின் எதிர்காலத்தில் அக்கறைகொண்ட அறிஞர்களும் சான்றோர்களும் பசியும் பஞ்சமும், நோயும் நொடியும், கொலையும் கொடுமையுமற்ற புதியதோர் சமுதாயத்தை – உலகைக் காணத் துடிக்கின்றனர்; அப்புதிய உலகை அமைப்பதற்கு – உருவாக்குவதற்கு – ஒல்லும் வகையெல்லாம் ஓயாமல் உழைக்கின்றனர்; 'புதியதோர் உலகு செய்வோம்; மிகப்போரிடும் இவ்வுலகினை வேரொடு சாய்ப்போம்' என முழங்குவதோடு அமையாது, அந்தப் புதிய உலகம், 'எவ்வாறு அமையவேண்டும்?' என்பதைப் பற்றிப் பல கோணங்களில் ஆழந்து சிந்திக்கின்றனர். அச்சிந்தனையின் பயனாக அல்லற்பட்டு, ஆற்றாது அழுது கண்ணீர் வடிக்கும் மனிதஇனம், மனநிறைவோடும் மகிழ்ச்சியுடனும் வாழ்வதற்குரிய வாய்ப்பு வசதிகள் நிறைந்த 'புதிய உலகை'ப் பற்றிய கற்பனை உருவாகிறது. அப்புதிய உலகைக் 'கற்பனை உலகம்' அல்லது 'இலட்சிய புரி' என நாம் குறிப்பிடலாம். ஆங்கிலத்தில் அதனை **'உடோபியா'** (Utopia) *என்பர்.*

வள்ளுவன் கண்ட 'நாடு'

பண்டைக்காலத்தில், நம்நாட்டில் வாழ்ந்த அறவோர்கள் சிலர், 'சின்னாள் பல் பிணிச் சிற்றறிவினை'யுடைய மக்கள், இம்மண்ணுலகில் நலமாகவும் வளமாகவும் வாழ்வதற்குரிய வழிவகைகளைப் பற்றித் தீவிரமாகச் சிந்தித்துள்ளனர்; தங்கள் காலத்திய 'கொலைப்பசியும் புலைநடையும்' வாய்ந்த சமுதாய அமைப்பை, முழுமையாக மாற்றி அமைக்க வேண்டும் என்னும் முடிவிற்கு வந்துள்ளனர். தாங்கள் கருதும் வண்ணம் 'மாற்றியமைக்கப்பட்ட சமுதாயம் – உலகம் – எவ்வாறு இருக்கும்?' என்பதை அவர்கள் சொல்லோவியமாகத் தீட்டியும் காட்டியுள்ளனர்.

*இத்தகைய சிந்தனையாளர்களுக்குத் தலைவராக, நம் திருவள்ளுவர் விளங்குகிறார். மனிதன் மனிதனாக வாழ்வதற்கு, மண்ணகத்தில் விண்ணகத்தைக் காண்பதற்கு அவர் வழிகாட்டியுள்ளார். 'அறத்தான் வருவதே இன்பம்' எனும் உயர்ந்த கொள்கையோடு வாழவேண்டிய இலட்சிய வாழ்க்கைக்கு உரிய புதிய உலகம் எவ்வாறு அமைக்கப்பட வேண்டும் என்பதைத் திருக்குறளில், **நாடு** எனும் அதிகாரத்தில் (79) அவர் அழகுறப் படம்பிடித்துக் காட்டியுள்ளார்.*

> *குறையாத விளைபொருளும் தக்க அறிஞரும், கேடில்லாச் செல்வம் உடையவரும் கூடி வாழும் நிலப்பரப்பே நாடாகும். மிக்க பசியும், ஓயாத நோயும், (வெளியே இருந்து வந்து தாக்கி) அழிவு செய்யும் பகையும் தன்னிடம் சேராமல் நல்ல வகையில் நடைபெறுவதே நாடு பல்குழுவும் பாழ்செய்யும் உட்பகையும் வேந்தரைத் துன்புறுத்தும் கொலைக்கு அஞ் சா, குறுநில மன்னரும் இல்லாதது நாடு. நோய் இல்லாமல் இருத்தல், செல்வம், விளைபொருள் வளம், இன்ப வாழ்வு, நல்ல காவல் (ஆட்சி) ஆகிய ஐந்தும் நாட்டிற்கு அழகைத் தருவனவாகும்.*[1]

என்பன வள்ளுவர் காண விரும்பிய 'புதிய உலகத்தின்' சிறப்பியல்புகளாகும். ஈராயிரம் ஆண்டுகட்கு முன்னர் அவர் கண்ட கனவு, இன்னும் ஈடேறவில்லை என்பதை நாம் வருத்தத்துடன் தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளோம்.

அழுத சுரபி

வள்ளுவரின் வழியிலே வந்தவர் சீத்தலைச்சாத்தனார் எனும் புலவராவர். போதிமாதவனின் திருச்செய்தியைத் தம் காப்பியத்தின் மூலம், தமிழ் மக்களுக்கு அறிவுறுத்திய பெரியார் அவர். அருளற

1. திருக்குறள் 731, 732, 734, 735, 738

நெறியின் சிறப்பை, மக்கள் மனத்தில் ஆழப்பதிய வைக்கும் பணியில் அவர் ஈடுபட்டார். மனித குலத்தை வாட்டிவதைக்கும் நோய்களுள், மிகவும் கொடிய நோய் 'பசி'யாகும். மனிதன் தோன்றிய நாள் முதல் இன்றுவரை அவன் பசியைக் கண்டு அஞ்சி யஞ்சிக் கண்ணீர் வடித்து வருகிறான். இதனால், **தீப்பிணி, உறுபசி, அழிபசி**[2] எனப் பலவாறாகப் பசியைப் பாவலர் பழித்துரைப்பர். இத்தகைய கொடும் பசியை, உலகில் இருந்து விரட்டவேண்டும் எனும் நல்ல கனவு ஒன்றைக் கண்டார் சாத்தனார். அதன் விளைவாக மணிமேகலையின் கையிலே 'அமுதசுரபி' எனும் அழகிய பாத்திரத்தைக் கொடுத்தார். அதில், முதன்முதல் ஆருயிர் மருந்தாகிய சோற்றைப் பிச்சையிட்ட ஆதிரை எனும் மங்கையர் திலகம், மனித இனத்தின் 'தீராப் பெருநோயாகிய பசிப்பிணி ஒழிக' என்று வாழ்த்துகிறாள்.

பாரகம் அடங்கலும் பசிப்பிணி அறுக! **(மணி.16:34)**

என்பது ஆதிரையின் வாழ்த்தாகும். பின்னர், அள்ள அள்ளக் குறையாத அமுதசுரபியைக் கையில் கொண்டு மணிமேகலை,

காணார் கேளார் கால்முடப் பட்டோர்
பேணுநர் இல்லோர் பிணிநடுக் குற்றோர் **(மணி.13:111-112)**

முதலியோரின் பசிப்பிணியைத் தீர்க்கும் திருப்பணியில் ஈடுபட்டாள். அவர், அன்று கண்ட அந்த இன்பக்கனவு – மனிதஇனத்தின் பசிப்பிணியை நீக்குதல் – இன்றும் ஓர் இலட்சியக் கனவாகவே இருந்து வருகிறது.

கம்பன் கண்ட கோசலம்

சோழப் பேரரசு வீறுடன் விளங்கிய காலத்தில், கவிச்சக்கரவர்த்தி கம்பர் வாழ்ந்தார். அவருடைய மனமும் புதியதோர் உலகைக் காணத் துடித்தது. அத்துடிப்பிற்குத் தம்முடைய இராம காதையில் ஒரு வடிவம் கொடுத்துள்ளார்.

இராமன் பிறந்த கோசல நாட்டைக் கம்பர் சிறப்புமிக்க ஒரு கற்பனையுலகமாக (Utopia) வே படைத்துக் காட்டுகிறார். அந்நாட்டு மகளிர் அனைவரும் செல்வப் பெருக்கும் கல்விச் சிறப்பும் வாய்ந்தவராக வாழ்ந்தனர்.[3] அந்நாட்டு மக்களிடத்தில் சிறிதும் குற்றம் இலாமையால் யமனைப்பற்றிய அச்சம் (மரண பயம்) இல்லை; அவரவருடைய பண்பட்ட உள்ளத்தில் சினம் என்பதே இல்லை;

2. மேலது, 227, 784, 226.
3. கம்ப.பால.நாட்டு.67.

நாடெங்கும் அறத்தைத் தவிர பாவத்தைக் காண இயலாது.[4] *அந்நாடு தேவர்களுடைய உலகத்தைப் போன்ற செல்வவளம் உடையது.*[5]

வண்மை இல்லை, ஓர் வறுமை இன்மையால்,
திண்மை இல்லை, தேர் செறுநர் இன்மையால்,
உண்மை இல்லை, பொய் உரை இலாமையால்,
வெண்மை இல்லை, பல் கேள்வி மேவலால்[6]

பொற்பின் நின்றன பொலிவு; பொய்யிலா
நிற்பின் நின்றன நீதி; மாதரார்
அன்பின் நின்றன அறங்கள்; அன்னவர்
கற்பின் நின்றன கால மாரியே[7]

*என்பது கம்பன் காணவிரும்பிய 'கோசலம் என்னும் **கோதிலா** நாடா'கும்.*

மற்றும், நகரப்படலத்திலும் அவர், அந்தக் கற்பனையுலகைப் படம்பிடித்துக் காட்டுகின்றார்.

வள்வார் முரசம் அதிர்
மாநகர் வாழும் மாக்கள்
கள்வார் இலாமைப் பொருள்
காவலும் இல்லை யாதும்
கொள்வார் இலாமைக் கொடுப்பார்
களும்இல்லை மாதோ[8]

கல்லாது நிற்பர் பிறர் இன்மையின் கல்விமுற்ற
வல்லாரும் இல்லை; அவை வல்லர் அல்லாரும் இல்லை;
எல்லாரும் எல்லாப் பெருஞ்செல்வமும் எய்தலாலே
இல்லாரும் இல்லை! உடையார்களும் இல்லைமாதோ![9]

இத்தகைய 'எல்லார்க்கும் எல்லாம் என்றிருப்பதான' சமவுடைமைச் சமுதாயம் மலர்ந்துள்ள உலகினைக் கம்பன் காணவிரும்பினான்.

---

4. மேலது, 70.
5. மேலது, 79.
6. கம்ப.பால. நாட்டு.84.
7. மேலது, 90.
8. கம்ப.பால.நகரப்.165.
9. மேலது,166.

கலைஞர் கண்ட கனவு

பாரதியாரின் 'கற்பனையூர்' எனும் கவிதையும் ஓர் அளவிற்கு இத்தகைய இயல்பு வாய்ந்ததாகும். வ.ரா.வின் 'கோதைத்தீவு' ஆங்கிலத்தில் தாமஸ் மூர் என்பவர் எழுதிய 'கற்பனையுலகி (Utopia)ன்' தழுவலாகும். அல்டவுசு அக்சிலியின், 'துணிவுமிகு புது உலகம்' (Brave New World), 'துணிவுமிகு புது உலகிற்கு மறுமுறை செல்லல்' (Brave New World Revisited) என்பனவும், எச்.ஜி.வெல்சின் 'கால இயந்திரம்' (The Time Machine) போன்றவையும் இத்தகையனவேயாகும். டாக்டர் மு.வரதராசனார் அவர்கள் தாம் காண விரும்பிய புதிய சமுதாயத்தை, கனவினில் கண்ட காட்சியாகக் கி.பி.2000த்தில் உலகம் அடையக்கூடிய முன்னேற்ற வளர்ச்சியாகப் – படம்பிடித்துக் காட்டியுள்ளார்.

சமய உலகம்

இத்தகைய 'கற்பனையுலக'க் கனவு, உலகின் பல்வேறு சமயத்தினரிடமும் இருந்து வந்துள்ளது. 'சுவர்க்கம்', 'மேலுலகம்' என்னும் இந்தியச் சமயத்தினரின் நம்பிக்கைகள் இத்தகையனவே. விவிலியத்தில் சிறப்பித்துப் பேசப்படும் 'இறைவனின் இராச்சியம்' (Kingdom of God) ஒருவகை மெய்யுணர்வுக் கற்பனையே.

ஐரோப்பியர் கண்ட கற்பனை உலகம்

சமயச் சார்பற்ற நிலையில், கிரேக்க நாட்டுப் பேரறிவாளன் பிளேட்டோ, 'புதியதோர் உலகை'ப் படைக்க விரும்பினான். அவ்விருப்பத்தைக் குடியரசு (Republic) என்னும் தம் நூலின் வாயிலாக, அவன் உலகிற்கு உணர்த்தினான். சற்றேறக்குறைய நானூறு ஆண்டுகளுக்கு முன்னர் இங்கிலாந்தில் வாழ்ந்தவர் சர் தாமஸ் மூர் என்பவராவர். அவர் பொதுவுடைமைப் பொது நல நாடு ஒன்றைப் பற்றிக் கனவு கண்டார். அந்நாட்டிற்கு 'உடோபியா' (Utopia) என்று பெயரிட்டார். பிற்காலத்தில் புதிய உலகைப்பற்றிய கனவைக் குறிக்கும் சொல்லாக இச்சொல் பெருவழக்குற்றிருப்பதைக் காணுகின்றோம்.

சோசலிச சமுதாயச் சிந்தனையாளர்கள் அனைவருமே, ஒரு வகையான 'கற்பனை உலக'க் கனவைக் கண்டுள்ளனர். அக் கனவுகள் அனைத்தும் காரல்மார்க்கின் 'பொதுவுடைமைச் சமுதாயமாக' வடிவம் பெற்றுள்ளன. இந்நூற்றாண்டின் முற்பகுதியில் இங்கிலாந்தில் வாழ்ந்த எச்.ஜி.வெல்சு (H.G.Wells) இத்தகைய 'புதிய உலகை'க் காண விரும்பியவராவார். அவருடைய 'கால இயந்திரம்'

(The Time Machine) எனும் கற்பனைக்கனவு (1865) சிறப்புமிக்க சிந்தனை வளம் வாய்ந்தது. இதேபாணியில், அவர் படைத்த மற்றொரு நூல் **புதிய கற்பனையுலகம்** (A Modern Utopia) என்பதாகும் (1905). இவ்விரு நூல்களும், அறிவியல் வளர்ச்சியால் உலகிற்குக் கிடைத்துள்ள அரும்பெரும் நன்மைகளை மையமாகக் கொண்டு கற்பனை செய்யப்பட்ட சமுதாயச் சிந்தனைகளாகும். இவ்விரு நூல்களின் தாக்கம், டாக்டர் மு.வ. அவர்களின் கி.பி.2000த்தில் ஓரளவிற்குப் பதிந்துள்ளதைக் காணுகின்றோம்.

இராம இராச்சியம்

தாம் காணவிரும்பிய எதிர்கால இந்தியாவினை, அண்ணல் காந்தியடிகள் 'இராம இராச்சியம்' என்று போற்றியதை நாம் நன்கு அறிவோம். நம் நாட்டின் தந்தை கண்ட அந்தப் 'புதிய உலகம்' பற்றிய கருத்துகள், நம் பேராசிரியரின் உள்ளத்தைக் கவர்ந்ததில் வியப்பு இல்லை.

உந்துதல் சக்தி

பேராசிரியர் மு.வ.அவர்கள் 'புதியதோர் உலகை'க் காண விழைந்ததற்குரிய உந்துதல் சக்திகள் பல. அவர் வாழ்ந்த காலத்திய அரசியல், சமூகப், பொருளாதாரச் சூழல்களே அச்சக்திகளாகும். ஏறக்குறைய இருநூறு ஆண்டுகள் ஆங்கிலேயரின் ஆதிக்கத்திற்குட்பட்டு, அடிமை நாடாய் இந்தியா விளங்கியது. அவ்வடிமைத்தளையை உடைத்து எறிய இந்திய விடுதலைப்போராட்டம் நடந்து கொண்டிருந்த காலத்தில் வாழ்க்கையைத் தொடங்கியவர் டாக்டர் மு.வ. அவ்விடுதலைப் போராட்டத்தின் வெற்றியை, அவர் 1947இல் இந்திய விடுதலையாகக் கண்டார். விடுதலை பெற்ற இந்தியா, எதிர்காலத்தில் எவ்வாறு விளங்க வேண்டும் என்பதைப்பற்றி இலக்கியவாதியான மு.வ. அவர்கள் எண்ணிய எண்ணங்களின் – கட்டிய மனக்கோட்டைகளின் – திரண்ட வடிவமே கி.பி.2000 எனும் நூலாகும். கி.பி.2000த்தில் இந்தியா மட்டும் அல்லாமல், உலகமே தாம் காணும் புதுமைக்கோலத்தில் பொலிவுற வேண்டுமென்று அவர் விரும்பியதை. இந்நூல் எடுத்துரைக்கின்றது.

'கற்பனையான இலட்சிய சமுதாயத்தை' காண உதவிய உந்துதல் சக்திகளுள் மேற்குநாட்டுக் கல்வியும், கட்டற்ற சிந்தனை உரிமையும் குறிப்பிடத்தக்கன. பிரஞ்சுபுரட்சி உலகிற்கு வழங்கிய சமத்துவம், சகோதரத்துவம், சுதந்திரம் பற்றிய கொள்கைகளின் தாக்கம் பல்வேறு வடிவங்களில் உந்துதல் சக்தியாக அமைந்தது. அரசியல் விடுதலை மட்டும் போதாது, பொருளாதார விடுதலையே இந்தியருடைய

வாழ்க்கைய வளமுறச் செய்யும் என்னும் நம்பிக்கையும், இந்தியாவில் தொழிற்புரட்சி தோன்ற வேண்டும் என்ற எண்ணமும், சாதி சமய வேறுபாடற்ற சமுதாயம் உருவாக வேண்டும் என்னும் ஆர்வமும் டாக்டர் மு.வ. அவர்களைக் கற்பனையில் ஆழ்த்தியது. அதன் பயனாக, நாம், 'கி.பி.2000' எனும் புத்துலகப் புதுவாழ்வுப் பொன்னேட்டைப் பெற்றுள்ளோம்.

இந்நூலின் நோக்கையும் போக்கையும் நம் ஆசிரியர்,

இந்த நூலில் நனவும் உள்ளது; கனவும் உள்ளது. நனவு நிகழ்காலம்; கனவு எதிர்காலம். நனவு கனவு என்பவற்றை மறந்து நோயும் மருந்துமாகக் காணலாம். நோய்கள் எல்லோருக்கும் அனுபவமாகத் தெரிந்தவை. மருந்துகளோ எண்ணத்தால் உன்னத்தக்கவை. இந்த நோய்களை இந்த மருந்துகள் தீர்க்குமா என்று எண்ணிப் பார்த்தல் வேண்டும்...

> இந்தக் கனவில் காண்பது ஒருவகை அரசியல் பொருளியல் சமூக அமைப்பின் உருவெளியே; சட்ட விளக்கங்களும் அல்ல; புள்ளி விவரங்களும் அல்ல. எதிர்காலத்தைப் பற்றி நம்பிக்கை கொண்ட உணர்வதற்கும், தெளிவு கொண்டு எண்ணுவதற்கும் ஒரு தூண்டுகோலாக அமைவதே இந்தக் கனவின் பயன். நம்பிக்கையும் தெளிவும் பெற்று உணர்ந்து எண்ணத் தொடங்கிவிட்டால் படிப்படியாக உலகம் சீர்ப்படுவது திண்ணம். ஒருவர் இருவர் எண்ணிப் பயன் இல்லை. மக்கள் பெரும்பாலோர் எண்ண வேண்டும். அவ்வாறு எண்ணும் நாள் என்று வருமோ, அன்றே புத்துலகம் பிறந்துவிடும்.[10]

என்று தெளிவுறுத்தியுள்ளார்.

பொதுவுடை

அத்தகைய புத்துலகம் எவ்வாறு இருக்கும் என்பதை இப்பொழுது காண்போம். ஒரு நாட்டில் வாழும் மக்களிடையே ஒற்றுமையும், ஒருமைப்பாடும் வளர்வதற்குரிய நெறிமுறைகளுள், முதலாவதாக நம் பேராசிரியர் குறிப்பிடுவது **பொதுவுடை** என்பதாகும். அந்தப்புதிய உலகிற்கு வரும் எல்லாரும் அப்பொதுவுடையை உடுத்திக்கொள்ள வேண்டுமாம்.

---

10. கி.பி.2000, முன்னுரை.

இந்த உடை தனிச்சிறப்பு உடையது. புதிய உலக அமைப்பு ஏற்பட்டபின் அது அழியாமல் நிலைபெறுவதற்கு இதுதான் காரணம். நீங்களும் இந்த உடை உடுத்திக் கொண்டால் நல்லது. வேற்றுமை ஏற்படுத்தாமல் இருப்பீர்கள். அது எங்களுக்கு உதவியாகும்.[11]

என்று அந்தப் புதிய உலகத் தொண்டர் அறிவிக்கின்றார். அந்தப் பொதுவுடையை அணிந்துகொண்ட நம் ஆசிரியருக்குப் புதிய ஊக்கம் பிறந்ததாம். 'ஊருக்குப் புதியவன் என்ற எண்ணம் போய் எல்லா உரிமையும் பெற்றவன் போல் ஆனேன்'[12] *என்று அவர் மகிழ்கிறார்.*

சமயப் பொதுமை

விருந்தினர் மாளிகையில் பல்வேறு சமயத்தினர் முழு உரிமையுடன் தத்தம் சமயத் திருநூல்களை ஓதி, உள்ளம் நைந்துருகுவதை நம் ஆசிரியர் பார்க்கின்றார். தேவாரம், திருவாசகம், திருவாய்மொழி, மஸ்தான் சாயபு பாடல், விவிலியம் ஆகியவற்றைப் போற்றும் மக்கள், ஒரே இடத்தில் அன்போடும் பண்போடும் வாழ வேண்டும் என்னும் ஆசிரியரின் வேட்கையை இது புலப்படுத்துகிறது.

அடிப்படை விதிகள்

அந்த விருந்தினர் மாளிகையில், புதியதாக வருபவருக்கு ஒரு சிறு புத்தகம் அளிக்கப்பட்டது. அதில், இருபது விதிகள் குறிப்பிடப் பட்டிருந்தன. அவற்றுள் முக்கியமாமன மூன்றைப் பார்ப்போம்.

(1) உலகத்தில் மக்கள் எல்லாரும் வாழவேண்டும். ஆதலால் எந்த வேற்றுமையையும் மறந்து அன்பைப் பாராட்டுங்கள்.

(2) எங்காவது எவராலாவது குறை இருந்தால், அரண்மனை எண் – 4 ஒழுங்குத் தொண்டர்க்குத் தெரிவியுங்கள். அதற்காக எவரிடமும் வெறுப்புக் கொள்ள வேண்டாம்.

(3) இந்த விருந்து மனையைக் கடந்து வெளியே செல்லும்போது **பொதுவுடை** *அணிந்து செல்லுங்கள்;* **பொதுவுள்ளம்** *பெற்றுச் செல்லுங்கள்.*[13]

---

11. மேலது, ப.29.
12. மேலது, ப.30.
13. கி.பி.2000, ப.34.

இவ்விதிகள், அன்பின் அடிப்படையில்தான், ஒழுங்கும் சீர்மையும் வாய்ந்த புதிய சமுதாயம் அமைய இயலும் என்பதை அறிவிக்கின்றன.

பொதுவான அமைப்பு

மக்கள் வாழ்க்கைக்குத் தேவையான பொருள்கள் அனைத்தையும் அளிக்கும் அமைப்பிற்கு அரண்மனை (காப்பு இல்லம்) என்பது பெயர். உணவுச்சீட்டு, உடைச்சீட்டு, நாடகச் சீட்டு, உலகஞ் சுற்றுஞ் சீட்டு, விடுமுறைச் சீட்டுப் போன்ற பல சீட்டுகளை வழங்கும் தொண்டர்கள் (அதிகாரிகள்) அதில் பணி புரிகின்றனர். மனிதன் பொதுவான அமைப்பின் மூலம், தனக்கு வேண்டியவற்றை எளிதில் பெற்றால்தான், சோர்வின்றி, கடமையைச் சரியாகச் செய்ய முடியும் என்பதும், அதிகாரிகள் எல்லாம் மக்களின் தொண்டர் எனும் உணர்வோடு பணிபுரிய முன்வரவேண்டும் என்பதும் இதனால் பெறப்படுகின்றன.

செல்வமும் புகழும்

மனிதரிடையே போட்டியும் பொறாமையும் மனக்கசப்பும் நீங்குவதற்குரிய வழியை அந்தப் புத்துலக மக்கள் அறிந்துள்ளனர். தனிமனிதன் அளவற்ற செல்வம் சேர்க்க இடந்தருவது சமூகத்திற்கு எவ்வளவு கெடுதியோ, தனி மனிதன் அளவற்ற புகழ்தேட இடங்கொடுப்பதும் அவ்வளவு கெடுதியாகும்”[14] என்னும் தெளிவு பெற்றால், உலகம் உய்யும்.

இல்வாழ்க்கை

ஆணும் பெண்ணும் கூடிவாழும் இல்லற வாழ்க்கை புதுப்பொலிவுடன் அவ்வுலகில் தோன்றுகிறது. ‘வாழ்க்கையில் அன்பை வளர்க்க வேண்டும்’ என்னும் சட்டம் செய்ததோடு, ‘உடன்படிக்கை ஒழிப்புச் சட்டம்’ என்னும் மற்றொன்றையும் செய்தார்களாம்.[15] அவற்றின் விளைவாகக் காதல் வாழ்க்கையே பெருமைமிகு வாழ்க்கை நெறியாக மாறிவிட்டது. ஆணுக்குப் பெண் அடிமை என்னும் நிலை மறைந்தது.

பெண்கள் ஆண்களோடு சரிநிகர் சமானமாக அனைத்து உரிமையும் பெற்றிருந்தனர்; உரிமை மிக்க துணைவியராக விளங்கினர்; ஆண்களைப் போலவே கல்வி கற்றும், தொழிலகங்களில் தொழில் செய்தும் வாழும் தகுதியுடையவராகவும் உள்ளனர்.

---

14. கி.பி.2000, ப.76.
15. மேலது, ப.92.

பெண்களுக்கு முழு உரிமை இருத்தலைக் கண்டு வியந்து வந்த நான், உணவு விடுதியில்தான் அதற்குரிய காரணத்தையும் கண்டேன். வீடுதோறும் சமையலறை வகுத்து வீட்டுத் தலைவியைச் சமையற்காரியாக்கி நாள் முழுவதும் ஓய்வில்லாமல் உழைக்க வேலையும் பெருகச் செய்து... அடிமையாக்கி[16]

இருந்த அவலநிலை நீங்கியது. ஊருக்குப் பொதுவான உணவு விடுதிகள் ஏற்பட்டதனால், பெண்களுக்கு விடுதலை கிடைத்தது.

சமையல் என்ற ஒன்றைக் கூட்டுறவு முறையில் தெருக்கள் தோறும் அமைத்துக் கொண்டமை பெண்ணுரிமை பிறக்க உதவியது. இதனால், 'சமையலறை அடிமைகளை நாட்டுத் தாய்மார்களாக'[17] அந்நாட்டில் போற்றும் பண்பு சிறப்புற்று விளங்குகிறதாம். அந்தப் புத்துலகப் பெண்கள், புன்னகை எனும் கவர்ச்சிமிகு நகை ஒன்றையே அணிந்துள்ளனர்.

முதியோரைப் போற்றுதல்

வயது முதிர்ந்த பெரியோர்கள் தங்கி வாழும் விடுதிக்குப் பேரின்பம் என்பது பெயர். அதை **அமைதி நிலையம்** எனவும் வழங்குவராம். அப்பெரியோர்கள் குழந்தைகளோடு கொஞ்சி விளையாடியும் அருளாளர்களின் திருநூல்களை ஓதியும் தங்கள் வாழ்நாளை இனிது கழிக்கின்றனர். முதியோர்களைப் பேணும் பொறுப்பு அரசின் கடமையாக அமைந்துவிட்டதைக் காணுகின்றோம்.

உணவுமுறை

அந்த உலகத்திய மக்களின் உணவு முறையும் நம் கருத்தைக் கவருகிறது. நான்கு வகையான உணவுக்கூடங்கள் நாட்டிற்குப் பொதுவானவையாக அங்குள்ளன. A பிரிவு உணவுக்கூடத்தில் பழங்களும் தேனும் உணவுப் பொருள்களாகக் கொடுக்கப்பட்டன. B பிரிவு உணவுக்கூடத்தில் அரிசிச்சோறும் காய்கறி வகைகளும் கலந்த உணவு வழங்கப்பட்டன. C பிரிவில் கோதுமைப்பூரி முதலியனவும், அடுத்துள்ள D பிரிவில் இறைச்சி கலந்த உணவுப் பொருள்களும் அவரவருடைய தேவைக்கு ஏற்றவாறு கொடுக்கப்பட்டன.

16. கி.பி.2000, ப.38.
17. மேலது, பக்.38-39.

வேலைப்பளு

அவ்வுலக மக்கள், ஒரு நாளைக்கு மூன்று மணி நேரமே வேலை செய்கின்றனர். இம்மூன்று மணிநேர வேலையின் மூலம், உலகத்தின் தேவையான பொருள்களுக்குமேல் இரண்டு மடங்கு உண்டாக்கப் படுகிறதாம்.[18]

கல்விமுறை

அந்த உலகின் கல்விமுறை புதுமையானது. கல்வி எல்லாருக்கும் இலவசமாக வழங்கப்பட்டது. "படிப்பு என்றால் குறித்த நேரத்தில் போய்க் குறித்த நேரத்தில் திரும்பி வருவது இல்லையாம். அங்கே பல மாணவர்களுடனும் ஆசிரியர்களுடனும் சேர்ந்து பழகிப், பல நல்ல பழக்க வழக்கங்களைக் கற்றுக்கொண்டு, அவர்களோடு உண்டு, உறங்கி ஒற்றுமையாக வாழ்ந்து வரவேண்டுமாம். விடுமுறை நாள்களில் பெற்றோர் வீட்டுக்குச் சென்று தங்கிவிட்டு வர உரிமை உண்டாம்."[19] பழங்காலக் குருகுலக்கல்வி முறையை ஓரளவிற்கு இம்முறை ஒத்திருப்பதைக் காணுகின்றோம்.

ஆண்டிற்கு நான்கு மாதங்கள் எல்லாக்கல்வி நிறுவனங்களுக்கும் விடுமுறை விடப்படுமாம். அப்போது ஐந்தாம் வகுப்புவரை படிப்பவர்களே, பெற்றோரோடு தங்குவதற்குச் செல்லுவராம். உயர்நிலைப்பள்ளி மாணவர், முதல் இரண்டுமாத விடுமுறையின் பொழுது பெற்றோரிடம் தங்குவராம்; அடுத்த இரண்டு மாத விடுமுறையின் போது ஆசிரியரோடு சுற்றுலாவிற்குச் சென்று, புதிய ஊர்களையும் தொழிற்சாலைகளையும் கண்டு வருவராம். கல்லூரி மாணவர் விடுமுறை முழுவதுமே. சுற்றுலாவில் கழிந்து விடுமாம்.[20]

அந்த உலகில் பள்ளிக்கூடங்கள் எப்போதும் பண்ணையை அடுத்தே உள்ளன. கல்லூரிகள் எப்போதும் அரண்மனை (காப்பகங்) களை அடுத்தே உள்ளன.

மற்றொரு புதுமையான செய்தி பள்ளிப்படிப்பு முடித்தவுடனே கல்லூரியில் சேர்ந்து படிக்க இயலாதாம். பள்ளிப்படிப்பிற்குப் பின்னர், ஐந்து ஆண்டுகள் தொழிற்சாலையில் தொழிலாளியாகப் பணிபுரிந்த பின்னரே கல்லூரியில் சேர அனுமதிக்கப்படுவராம்.[21] இம்முறை, மகிழ்ச்சியுடன் நாம் போற்றி வரவேற்கத்தக்கதாகும்.

---

18. கி.பி.2000, ப.98.
19. மேலது, ப.36.
20. கி.பி.2000, ப.67.
21. கி.பி.2000, ப.67.

கல்லூரிப் படிப்பு ஐந்து ஆண்டுகளாகும். கல்லூரிகளில் வாரத்தில் நான்கு நாள்கள் சொற்பொழிவு நடக்கும். எஞ்சிய ஓய்வு நேரத்தில் மாணவர் ஐந்துவகையான ஆராய்ச்சிகள் செய்து முடிக்க வேண்டுமாம். எனவே, மாணவர்கள் ஓய்வு கிடைக்கும்போது எல்லாம் நூல் நிலையங்களுக்குச் சென்று, தமக்கு வேண்டிய நூல்களைப் படித்துக் குறிப்புகள் எடுப்பர். நூல் நிலையங்களில் ஒவ்வோர் அறிவுத்துறையிலும் பயிற்சி பெற்றுள்ள ஆசிரியர் இருப்பாராம். பொதுமக்கள் தங்கள் ஐயங்களை அங்குள்ள ஆசிரியரிடமே கேட்டுத் தெளிவுபெற இம்முறை வசதியாக இருக்கிறதாம். 'இப்படித் தெரு நூல் நிலையங்களில் சில ஆண்டுகள் ஆசிரியராக இருந்தவர்களே, பிறகு கல்லூரிகளில் ஆசிரியராகும் தகுதி பெறுகின்றார்களாம்'[22]

நாட்டுப்பற்று

அந்த உலகில் 'நாட்டுப்பற்று, என்பது பொய்யாய்ப் பழங்கதையாய்ப் போய்விட்டது. நாட்டுப்பற்று குறுகிய மனப் பான்மையாம். மக்களுடைய அழிவுக்கும் சிந்தனைத் தேக்கத்திற்கும் காரணமாக நாட்டுப்பற்று இருந்ததாம். எனவே, அதையொழித்து, மனித இனப்பற்றை – அனைத்துலகப் பற்றை அவர்கள் வளர்த்துவிட்டனராம்.[23]

அரசியல் கட்சிகள்

இன்றைய உலகில் சனநாயகத்தின் முதுகெலும்பாகக் கருதப்படுவது பல்வேறு அரசியல் கட்சிகளாகும். ஆனால், பேராசிரியர் மு.வ.அவர்கள் காணவிரும்பிய புதிய உலகில், அரசியல் கட்சிகள் இல்லை. எனவே, "கட்சிப் பத்திரிகையும் கட்சி ஒழுங்கும் துணையாகக் கொண்டவர்கள், கட்சியின் வல்லமையால் தகுதியில்லாமலே முன்னுக்கு வரும் வாய்ப்பு ஒழிந்ததாம்" இதனால், கட்சி வெறியும், புகழ் முதலாளிகளின் கொடுங்கோன்மையும் மறைந்து போய்விட்டன.[24]

தேர்தல் முறை

அரசியல் கட்சிகளே இல்லாத நாட்டில், நடைபெற்ற தேர்தல்முறை நம் கருத்தைக் கவருவதாகும். கல்லூரியில் கற்றவர்களே, மக்கள் தொண்டர்களான அரண்மனை அதிகாரிகளின் பதவிகளுக்குப் போட்டியிட இயலும்.[25]

---

22. மேலது, ப.85.
23. கி.பி.2000, பக்.90-91.
24. மேலது, ப.76.

> ஒரு லட்சம் மக்கள் கொண்ட பகுதிகளை எல்லாம் ஊர் என்று வகுத்து ஓர் அரண்மனை ஏற்படுத்துகிறார்கள். ஒவ்வோர் அரண்மனையிலிருந்தும் இரண்டு இரண்டு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்து உலகப் பேரவைக்கு அனுப்புகிறார்கள்.[26]

என்பதிலிருந்து அரண்மனை அமைப்பினைப் பற்றியும், உலகப் பேரவை பற்றியும் அறிய முடிகிறது.

ஒவ்வொரு தெருவிலிருந்தும் கல்லூரியில் கற்றவரிடையே தேர்தல் நடைபெறும். இருபது பேர்களே உணவு விடுதி, தெருக்காப்பு, கல்வித்துறை, நூல்நிலையம், பேரின்பம், அரண்மனை போன்ற நிறுவனங்களில் பணிபுரியத் தேர்ந்து எடுப்பது வழக்கமாம். ஒரு தெருவில் தேர்தலுக்கு நிற்கும் தகுதியுடைய எல்லாருடைய பெயரையும் அட்டைச் சீட்டுகளில் எழுதி ஒரு குடத்தில் போடுவர். பின்னர், அரண்மனை அனுப்பியுள்ள பள்ளிச்சிறுமி ஒருத்தியை, நன்கு குலுக்கப்பட்ட அக்குடத்திலிருந்து 20 சீட்டுகளை எடுக்கச் சொல்லுவர். அவளே, அச்சீட்டுகளில் எழுதப்பட்டுள்ள பெயர்களைப் படிப்பாள். அப்பெயர்களுக்குரியவர் பணிமக்களாகத் தேர்ந்து எடுக்கப்பட்டவராவர். இவ்வளவு எளிமையான முறையில் அவர்கள் தேர்தலை நடத்தினர்.[27]

இத்தேர்தல் முறையில் சாதி சமய வெறிகளுக்கோ, பண பலத்திற்கோ, கட்சிகளின் கொடுமைகளுக்கோ சிறிதும் இடமில்லை. இந்தத் தேர்தல்முறை புதியதன்று. கி.பி.பத்தாம் நூற்றாண்டில் பேரரசன் இராசராசசோழன் காலத்திற்குமுன்பிருந்தே தமிழ்நாட்டின் ஊராட்சி மன்றங்களுக்கு, இத்தகைய தேர்தல்முறை நடைபெற்று வந்ததைச் சரித்திரம் பேசுகிறது. உத்தரமேரூர்க் கல்வெட்டுகள் இக் 'குடவோலைத் தேர்தல்' முறையின் நடைமுறை விதிகளைத் தெளிவாக எடுத்துரைக்கின்றன.

உலகப் பேரவை

ஊர்களை ஆட்சி புரிவதற்கு, ஓர் இலட்சம் மக்களுக்கு ஓர் 'அரண்மனை' இருந்ததை நம் ஆசிரியர் குறிப்பிடுகின்றார். ஆனால், நாட்டு ஆட்சியை நடத்திய அமைப்பு யாது என்பதை அவர் குறிப்பிடவில்லை. எனினும், பல்வேறு நாடுகளும் சேர்ந்து உலகை ஆளும் உலகப் பேரவையின் செயல்முறைகளை ஆசிரியர் விளக்கி யுள்ளார். மக்களின் தொகைக்கு ஏற்ப, ஒவ்வோர் நாடும், உலகப் பேரவையில் இடம்பெற்றது. அரண்மனை ஒவ்வொன்றிலும் இருந்து

26. மேலது, ப.95.
27. கி.பி.2000, பக்.70-72.

இரண்டு பிரதிநிதிகள் உலகப்பேரவைக்கு அனுப்பப்பட்டனர். மூலப்பொருள் பங்கிடும் போராட்டம் அவ்வுலகப் பேரவையால் தீர்த்து வைக்கப்பட்டது[28] என்பதையும் அறிகிறோம். அப்பேரவையின் செயல்முறை இன்றைய ஐ.நா. அமைப்பை (U.N.O) விடப் பன்மடங்கு சிறந்ததாகக் காணுகின்றோம்.

தனியுரிமை

டாக்டர் மு.வ.கண்ட கி.பி.2000த்தில், எல்லாம் அரசுடைமையாக இருப்பனபோல் தோன்றுகின்றன.[29] ஆனால், பொதுவுடைமை அரசுகளில் உள்ள கெடுபிடிகளையோ, தனியுரிமைப் பஞ்சத்தையோ அப்புதிய உலகில் காண இயலவில்லை. வீடுகளிலும் விருந்து மனைகளிலும் இருக்கின்றபொழுது பொதுவுடையை அணியத் தேவையில்லை; அவரவர் விருப்பத்திற்கேற்ற உடைகளை அணியலாம் என்னும் வழக்கம் அங்குள்ளதைக் காணுகின்றோம்.[30] எனவே, தனிமனிதன் விருப்பு வெறுப்புகள் தனிவாழ்வில் மதிக்கப்பட்டமை புலனாகின்றது. அவரவர் விருப்பப்படி வழிபாடு செய்யும் உரிமை அங்கு வழங்கப்பட்டிருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.[31] தனியுடைமை இருப்பதை மக்களுக்கு வீடுகள் சொந்தமாக உண்டு என்பதனாலும் அறிகிறோம்.

அந்தப் புதிய உலகில் பிச்சை எடுப்போரும் இல்லை; பிச்சை கொடுப்போரும் இல்லை.[32] எனவே, வறியவரும் இல்லை. 'எல்லார்க்கும் எல்லாம்' எனும் சமவுடைமைச் சமுதாய வாழ்வே, அந்த உலகின் சிறப்பிற்குக் காரணமாகும்.

கி.பி.2000

டாக்டர் மு.வ. அவர்கள் காணவிரும்பும் புத்துலகம் முழுமையான கற்பனை உலகம் அன்று. இன்றைய உலகில், மனித இனத்தின் நல்வாழ்விற்கு இடையூறாகவும் முன்னேற்றத்திற்குத் தடையாகவும் பல அமைப்புகளும் பழக்க வழக்கங்களும் உள்ளன. அவற்றை மாற்றியமைப்பதன் மூலம், புதிய சமுதாயத்தை உருவாக்க முடியும் என்பதே டாக்டர் மு.வ.அவர்களின் கருத்தாகும். கி.பி.2000த்தில் மனிதன் மனிதனாக மாண்புற்று வாழ்வதற்கு ஏற்ற வாய்ப்பு வசதிகள் உண்டு. மண்ணில் நல்லவண்ணம் வாழ்வதற்கு வேறென்ன வேண்டும்? அந்த நாளை ஆவலோடு நாம் எதிர்பார்ப்போமாக!

28. மேலது, ப.96.
29. கி.பி.2000, பக்.17,25, 36-53.
30. மேலது, ப.29.
31. கி.பி.2000, ப.33.
32. மேலது, ப.51.

நூலாசிரியரின் வாழ்க்கைக் குறிப்பு

1) தோற்றம் – மறைவு	*20.11.1931 – 05.05.1989*
2) பிறந்த ஊர்	*கருங்குழி, மதுராந்தகம் வட்டம், செங்கற்பட்டு மாவட்டம்*
3) கல்வி *பள்ளிக்கல்வி*	*சிந்தாதரிப்பேட்டை ஆண்கள் உயர்நிலைப்பள்ளி (1943–1948), சென்னை.*
4) புகுமுக வகுப்பு	*விவேகானந்தா கல்லூரி, மயிலாப்பூர், சென்னை 1949 – 1951*
5) இளங்கலை (ஹானர்ஸ்) தமிழ் பின்னர் முதுகலை தமிழ்	*பச்சையப்பன் கல்லூரி சென்னைப் பல்கலைக்கழகம், முதல் வகுப்பு, முதல் நிலை (1951 – 1954)*
6) முதுகலை வரலாறு	*சென்னைப் பல்கலைக்கழகம் தனிநிலைப் படிப்பு (1956)*
7) முதுகலை இலக்கிய ஆராய்ச்சி	*"பழந்தமிழ் இலக்கியத்தில் அறம்" (ஆங்கிலத்தில்) அண்ணாமலை பல்கலைக்கழகம் (1963)*
8) மொழியியல் பெருஞ்சான்று	*அண்ணாமலை பல்கலைக்கழகம் (1963)*

9) முனைவர் பட்டம்		பேராசிரியர் மு.வரதராசனாரின் படைப்பிலக்கியம் ஓர் ஆய்வு, சென்னைப் பல்கலைக்கழகம் 1978.
10) ஆசிரியர் பணி	1.	6 ஆண்டுகள், பயிற்சி ஆசிரியர், அரசர் கல்லூரி, புதுக்கோட்டை 1954 – 1959.
	2.	7 ஆண்டுகள், துணைப்பேராசிரியர், மாநிலக் கல்லூரி, சென்னை, 1962 – 1968
	3.	2 ஆண்டுகள், முதல்வர், மணலித் தமிழ்க் கல்லூரி சென்னை 1968 – 1969
	4)	3 ஆண்டுகள் திருக்குறள் ஆராய்ச்சித்துறைத் தலைவர் சென்னை பல்கலைக்கழகம், 1969 – 1972.
	5)	19 ஆண்டுகள் இணைப்பேராசிரியர் மற்றும் இயக்குநர் (ஆராய்ச்சியில்) உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்,
தெரிந்த பிறமொழிகள்:		சமஸ்கிருதம், இந்தி, ஆங்கிலம்
விருதுகள்	1.	பிராங்கிலின் ஜெல் மெடல் சென்னைப் பல்கலைக்கழகத்தில் பி.ஏ.ஹானர்ஸ் படிப்பில் முதல்நிலை பெற்றமைக்காக (1954)
	2.	சாகித்திய அக்காதெமி விருது (1974) திருக்குறள் நீதி இலக்கியம்
	3.	திரு.வி.க விருது 1965

ஆசிரியரின் நூல்கள்

தமிழ் இணைய கல்விக்கழக மின்நூலகம் –
தமிழினையம் – இணையதளத்தில்

https://www.tamil/digitallibrary.inஇல் புத்தகங்களை
படிக்கலாம் - பதிவிறக்கம் செய்யலாம்

(அ) வரலாற்று நூல்கள்:

1. சிந்துவெளி தரும் ஒளி, வள்ளுவர் பதிப்பகம், புதுக்கோட்டை, 1959.
2. வரலாறும் - வாழ்வும் மீனாட்சி பதிப்பகம், புதுக்கோட்டை, 1960.
3. தமிழர் நாகரிக வரலாறு – முதல் பகுதி – "விடி வெள்ளி", தொல்காப்பியர் நூலகம், சிதம்பரம், 1962.
4. முதலாம் இராசராசன், தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம், சென்னை, 1975.
5. இனமரபு வரலாறு (தொல் பழங்கால வரலாறு) தமிழ்நாட்டு வரலாற்றுக் குழு, சென்னை, 1975.
6. வரலாற்று வஞ்சி, தமிழ் எழுத்தாளர் கூட்டுறவுச் சங்கம், 1977.
7. இலங்கையில் தமிழ்ப் பண்பாடு, சேகர் பதிப்பகம், சென்னை, 1979.
8. சிந்துவெளி எழுத்து வடிவங்கள், மணியகம், சென்னை, 1981.
9. குறுநில மன்னர் வரலாறு – தமிழ்நாட்டு வரலாறு, சங்க காலம், பண்டைய அரசியல், தமிழ்நாட்டு வரலாற்றுக் குழு, சென்னை, 1983.
10. Rajaraja, the Great, Madras publications, 1984.

11. தென்கிழக்கு ஆசிய நாடுகளில் தமிழ்ப் பண்பாடு, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், 1987.

12. Chieftains of the Sangam Age, 2001.

13. தமிழ்ப் பண்பாடு, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், 1994.

14. தமிழ்நாடு வரலாறு சங்கக் காலம் – வாழ்வியல் (நாகரிகமும். பண்பாடும்), தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம், 1983.

15. History of Tamilnadu (A Birds Eye View Authors Guild of India, 1986.

(ஆ) ஓரங்க நாடகம்:

16. அடிமை விலங்கு (வரலாற்று நாடகம்), மணியகம், சென்னை, 1979.

17. பொற்கொடி (வரலாற்று நாடகம்), மணியகம், சென்னை, 1981

(இ) திறனாய்வும் ஆராய்ச்சியும்:

18. திருக்குறள் நீதி இலக்கியம், சென்னைப் பல்கலைக்கழகம், 1971 (சாகித்திய அகாதெமி பரிசினை 1974-இல் பெற்ற நூல்)

19. திருக்குறளில் கற்பனைத் திறனும் நாடகநலனும், சென்னைப் பல்கலைக்கழகம், 1973.

20. வாழ்வும் இலக்கியமும், மணியகம், சென்னை, 1978.

21. திருக்குறளும் இந்திய அறநூல்களும், மணியகம், சென்னை, 1979.

22. அறிஞர் அறவாழி, மணியகம், சென்னை, 1978.

23. சான்றோர் கண்ட திருவள்ளுவர், மணியகம், சென்னை, 1979.

24. ஒளிவிளக்கு (திருக்குறள் ஆய்வு) பாரி நிலையம், சென்னை, 1979.

25. தமிழ் நிலவு, மணியகம், சென்னை, 1981.

26. மு.வரதராசனாரின் படைப்பு இலக்கியம், பாரி நிலையம், 1984.

27. தமிழ்க் கவிதையில் பாரதியின் தாக்கம், தமிழ்க் கடல் பதிப்பகம், சென்னை, 1984.

28. தெ.பொ.மீ. ஒரு தமிழ்க்கடல், சென்னை பல்கலைக்கழகம், 2001.

29. திரு.பூ.ஆலால சுந்தரஞ் செட்டியாரின் வாழ்க்கை வரலாறு, மணியகம், சென்னை, 1982.

(ஈ) உரையும் பதிப்பும்:

30. தனிப்பாடல் திரட்டு (உரையுடன்), மீனாட்சி பதிப்பகம், புதுக்கோட்டை, 1960.

31. திருக்குறள் (கையடக்கப் பதிப்பு), வள்ளுவர் பதிப்பகம், புதுக்கோட்டை, 1960.

32. தமிழ் இலக்கியக் கொள்கை, தொகுதி-3, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 1977.

33. Historical heritage of the Tamils, Vol.I.international Institute of Tamil Studies, Madras, 1983.

34. தமிழ் இலக்கியக் கொள்கை, தொகுதி-1 (பதினெண்கீழ்கணக்கு), உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

35. திறனாய்வு அணுகுமுறைகள் (க.த.திருநாவுக்கரசு மற்றும் கு.பகவதி), உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்.

(உ) தொகுப்பும் பதிப்பும்:

36. தொல்காப்பிய நூலடைவு, சென்னைப் பல்கலைக்கழகம், 1971.

37. திருக்குறள் நூலடைவு, சென்னைப் பல்கலைக்கழகம், 1972.

38. *Tributes and Translations of Tirukkural, 1986.*

39. *Historical Heritage of the Tamils Dr. S.V.Subramaniyan & Dr.K.D.Thiruavukkarasu IITS, Tharamani, 1985*

(ஊ) தமிழாக்க நூல்கள்:

40. ஜி.எம். டிரெவெலியனின் இங்கிலாந்தின் வரலாறு, தமிழ் வெளியீட்டுக் கழகம். சென்னை, 1965.

41. வின்செண்ட் ஸ்மித்தின் ஆக்ஸ்போர்டு இந்திய வரலாறு-3, தமிழ் வெளியீட்டுக் கழகம், சென்னை, 1967.

42. இலட்சுமிநாத பெஸ்பரூவா,சாகித்திய அகாதெமி, புதுதில்லி, 1970.

43. இராசாராம் மோகன்ராய், சாகித்திய அகாதெமி, புதுதில்லி, 1970.

44. ஜீவனானந்த தாஸ், சாகித்திய அகாதெமி, புதுதில்லி, 1970.

(எ) இலக்கணம்:

45. எட்டாம் வகுப்பு தமிழ் இலக்கணம், பாடநூல் நிறுவனம், 1978.

★★★

ஆசிரியரின் தமிழ்க் கட்டுரைகள்

1950 – 51

1. பனைமர நிழலில், விவேகா, சென்னை, 1950.
2. பசிப்பிணி, விவேகா, சென்னை, 1951.

1952 – 53

இலக்கியம் காட்டும் எழிலோவியம்:-

3. முல்லை சிரித்தது
4. பெண்ணா? பேயா?
5. மின்னிகரிடையான்
6. கள்வன் மகன்
7. உயிரும் உடலும் கலைமன்றம், சென்னை, 1952-53.
8. ஆன்ம நேயம்
9. மருந்து
10. பெரும்பிணி
11. பொய்யும் மெய்யும்
12. வெண்ணிலவு

1953 – 1954

13. தமிழ்நெறி, விந்தியா, பூனா, 1953
14. வள்ளைப்பாட்டு, கலைக்கதிர், கோவை, 1954.
15. போரும் காதல் வாழ்வும், விந்தியா, 1954.
16. பாரதிகண்ட தமிழ்ச் சமுதாயம், விந்தியா, பம்பாய், 1954
17. ஓங்குக நல்லது எது? திருவள்ளுவர், திருச்சி, 1954.
18. வள்ளுவர் கண்ட மகளிர், திருவள்ளுவர், திருச்சி 1954
19. திருக்குறளின் ஆசிரியர் ஒருவரா? பலரா? திருவள்ளுவர், திருச்சி, 1954.

1955 – 56

20. தமிழக வரலாற்றில் சில புதிர்கள், குருகுலம், வாலாஜாபாத், 1955.
21. மெய்ப்பாடுகளும் ஒன்பான் சுவையும், குமரி மலர், சென்னை, 1955
22. புரட்சிக் கவிஞரின் "புரட்சிக் கவி" - ஒரு திறனாய்வு, குமரி மலர், 1956
23. தமிழ்த் தென்றல், விந்தியா, பூனா, 1956.
24. வீரகாப்பியமும் கலைக் காப்பியமும், கம்பன் மலர், காரைக்குடி, 1956

1957

25. முதியோர் கல்வியும் சோசலிச சமுதாயமும், ஆதாரக் கல்வி, 1957.
26. உறையூர் ஏணிச்சேரி முடமோசியார் யவனரா? (மூன்று கட்டுரைகள்), எழில், காரைக்குடி, 1957.
27. திருக்கோவையாரின் திறம், ஞானசம்பந்தம், தருமை, 1957.
28. தமிழ் நிலவு, தமிழ்நாடு, மதுரை, 1957.

1958

29. இசுலாமியர் வளர்த்த தமிழ், சீதக்காதி தமிழ்ச் சங்க மலர், கீழக்கரை, 1958.
30. தமிழகத்தில் ஒரு ஹோமர், கம்பன்மலர், காரைக்குடி, 1958.
31. ரோமானியர் கண்ட தமிழகம்,எழில், காரைக்குடி, 1958 (5 கட்டுரைகள்)
32. மருதணாரின் காப்பியநெறி, எழில், காரைக்குடி, 1958.

1959

33. புதுக்கோட்டை தொண்டைமான்களின் தோற்றம், அரசர் கல்லூரி மலர், புதுக்கோட்டை, 1959.

34. மனிதனும், மனச்சான்றும், எழில், காரைக்குடி, 1959

35. அறம்பிறழ்ந்த ஆட்சியாளன், கலைக்கதிர், கோவை, 1959

36. கிரேக்க நாகரிகமும் தமிழ் நாகரிகமும் (6 கட்டுரைகள்), கலைஞன் 1959.

37. தமிழகத்தின் மண்ணியல் அமைப்பு, அண்ணல் சுப்பிரமணியனார் மணி மலர், வள்ளுவர் பதிப்பகம், புதுக்கோட்டை 1959.

1960

38. மனிதன் - அன்றும் இன்றும், தருமச் சக்கரம், சென்னை, 1960.

39. சங்க காலத்தில் ஒரு வரலாற்றுப் பேராசிரியர், எழில், 1960.

40. சான்றோர் யார்?, நண்பன், திருச்சி, 1960.

41. தமிழகத்தில் தொல்பொருள் ஆராய்ச்சி (10 கட்டுரைகள்) தமிழ்ச்செல்வி, புதுவை, 1960.

42. மனிதம், புதுமை, திருச்சி, 1960.

43. தமிழகத்தில் விடிவெள்ளி, குருகுலம், வாலாஜாபாத் 1960.

44. கவிஞனின் மூன்று குரல்கள், குருகுலம், வாலாஜாபாத் 1960.

1961

45. மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழும், காளிதாசரின் குமார சம்பவமும், குமர குருபரன், சீவைகுண்டம், 1961

46. வள்ளுவர் காட்டும் வாழ்க்கை நெறி, திருவள்ளுவர், திருச்சி, 1961.

47. தமிழகத்தில் தொல்பொருள் ஆராய்ச்சி (1960 வரை) தமிழ்ச்செல்வி, சிலம்பு 1, முத்து 8 முதல் 12 வரை 1961.

1962

48. பிளேட்டோ கண்ட இலட்சிய மனிதன், முக்கனி, சென்னை, 1962.

49. அரிஸ்டாட்டில் கண்ட இலட்சிய மனிதன், முக்கனி, சென்னை, 1962.

50. கன்பூசியஸ் கண்ட இலட்சிய மனிதன், முக்கனி, சென்னை 1962.

51. தமிழன் கண்ட இலட்சிய மனிதன், முக்கனி, சென்னை, 1962.

1963

52. வள்ளலார் காட்டிய வழி, குருகுலம், வாலாஜாபாத், 1963.

53. இலக்கியமும் வாழ்க்கையும், முக்கனி, சென்னை 1963.

54. முருகனும், முத்தமிழும், முக்கனி, சென்னை, 1963.

55. அடிகளின் அறைகூவல், குருகுலம், வாலாஜாபாத், 1963.

56. பிள்ளைத்தமிழின் அமைப்பும் அழகும், குமரகுருபரன், சீவைகுண்டம், 1963.

57. தென்னிந்தியாவும் இலங்கையும், கலைச்செல்வி, யாழ்ப்பாணம், 1963.

(நான்கு கட்டுரைகள்)

1964

58. நாகரிகமும் பண்பாடும் (5 கட்டுரைகள்), புதுமை, திருச்சி, 1964.

59. தென்னிந்தியாவும் இலங்கையும் (தொடர்ச்சி -5 கட்டுரைகள்), கலைச்செல்வி, யாழ்ப்பாணம், 1964.

60. உலக நாகரிகத்தில் தமிழ்ப்பண்பாடு, கலைச்செல்வி, யாழ்ப்பாணம், 1964. (3 கட்டுரைகள்)

61. பொய்தீர் ஒழுக்கநெறி, சென்னை மாநகரத் தமிழாசிரியர் கழக மாநாட்டு மலர், சென்னை, 1964.

1965

62. தன்னுணர்ச்சிப் பாட்டு, அறுவடை, காஞ்சி, 1965.
63. நெடுநல்வாடை - திறனாய்வு: தமிழ்ச்செல்வி, புதுவை, 1965.
64. தாய்மொழியும் பிறமொழி ஆதிக்கமும், காஞ்சி, 1965.
65. சோழர் காலத்திய சமுதாயநிலை, கல்வெட்டுக் கருத்தரங்கக் கட்டுரைகள், சென்னை, 1965.

1966

66. திருநெறி, சுத்த சன்மார்க்கம், வேலூர், 1966.
67. மெய்யுணர்வுக்காதல் நெறி, சத்தியஞானசபை, நூற்றாண்டு விழா மலர், வேலூர், 1966.
68. இன்பம், கல்வி, சென்னை, 1966.
69. தமிழ்மொழியின் நெடுங்கணக்கு, நக்கீரர் கழக ஆண்டு மலர், சென்னை, 1966.
70. திருக்குறளின் மொழியியல்புகள், பச்சையப்பன் கல்லூரி 125ஆவது ஆண்டு விழா மலர், சென்னை, 1966.

1967

71. தமிழக வரலாற்றின் படிப்பினைகள், சிந்தாதிரிப்பேட்டை உயர்நிலைப்பள்ளி மலர், சென்னை, 1967.

    சிந்தாதிரிப்பேட்டை, கல்யாணம் மகளிர் உயர்நிலைப்பள்ளி மலர், சென்னை, 1967.
72. பரணியின் பல்சுவை - இன்பச்சுவை, கலைஞன், திருச்சி, 1967.
73. மும்மணிகள், கலைஞன், திருச்சி, 1967.

1968

74. அச்சுப்புத்தகத்தின் தோற்றம், ஆரம்பக்கல்வி, சென்னை, 1968.

75. இந்திய நாகரிகத்தில் தமிழ்ப் பண்பாட்டின் கூறுகள், இரண்டாவது உலகத் தமிழ் மாநாட்டு மலர், தமிழக அரசின் வெளியீடு, சென்னை, 1968.

76. இளங்கோ கண்ட இயற்கை, தமிழகம், சென்னை, 1968.

77. வால்ட்விட்மனும் புதிய கவிமரபும், கவிதை, சென்னை, 1968.

78. இன்றைய தமிழ்க் கவிதைகளும், புதுமைப் போக்குகளும், கவிதை, சென்னை 1968.

79. கவிஞர் தமிழ் ஒளியின் புரட்சிப் படைப்பு, கவிதை, சென்னை, 1968.

80. ஆராய்ச்சி அறிஞர் சிவராசபிள்ளை, குமரிநாடு, நாகர்கோயில், 1968.

81. எல்லிஸ் கலைக்களஞ்சியம் தொகுதி 10, தமிழ்வளர்ச்சிக் கழக வெளியீடு, சென்னை, 1968

82. கல்வெட்டுகளால் அறியப்படும் சோழர் காலத்திய சமுதாய அமைப்பு, கல்வெட்டுக் கருத்தரங்கு, புக்ஸ் இந்தியா பிரைவேட் லிமிடெட், சென்னை - 1, 1968.

1969

83. உலகில் தோன்றிய முதல் நாவல், குமுதம், சென்னை, 1969.

84. தென்கிழக்கு ஆசிய நாடுகளில் தமிழர் நாகரிகம், மதுரை வரலாற்றுப் பேரவை மலர், மதுரை, 1969.

85. தமிழகத்தின் இசைக் கருவிகள்,குழந்தை வீணை காயத்ரி பாராட்டுவிழா மலர், சென்னை, 1969.

86. வரலாற்று வஞ்சி, மறைமலையடிகள் நினைவுமலர், நாகப்பட்டினம், 1969.

87. திருக்குறளின் தனிச்சிறப்புகள், Annals of Oriental Research சென்னை பல்கலைக்கழகம், சென்னை, 1969.

88. நிலமும், நீரும், தமிழ் உறவு மகளிர், சென்னை, 1969.

89. திருக்குறளின் மாட்சி, மன்றம், சென்னை, 1969.

90. மன்னரை அணுகும் முறை, குறள் மலர், திருச்சி, 1969.

91. அவையும் அறிஞனும், குறள்மலர், திருச்சி, 1969.

92. திருவள்ளுவர்ஆண்டு ஈராயிரம், திருவள்ளுவர் சபை, சிந்தாரிப்பேட்டை, 1969.

93. வள்ளுவர் உலகிற்கு வழங்கும் செய்தி, திருவள்ளுவர் ஈராயிரமாண்டு விழா மலர், சென்னை, 1969.

94. திருக்குறளும் சங்க இலக்கியங்களும், சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, 1969 (மலர்)

95. குறளோவியம், திருவள்ளுவர் ஈராயிரம் ஆண்டுவிழா மலர், புதுக்கோட்டை, 1969.

96. அடிகள் கண்ட அம்பலவாணர், அருட்பெருஞ் சோதி, சென்னை, 1969.

97. சீவகசிந்தாமணி கு. மதுரை முதலியார் எழுபதாம் ஆண்டு நிறைவு விழா சிறப்பு மலர், மாருதி பிரஸ், இராயப்பேட்டை 1969.

1970

98. திருக்குறளும் சமண ஆகமங்களும், நல்லறம், சென்னை, 1970.

99. இந்திய நாடகக் கலையின் தந்தை டி.கே. சண்முகம் மணிவிழா மலர், சென்னை, 1970.

100. வள்ளுவர் காட்டும் பொருளியியல், இராசபாளையம் திருவள்ளுவர் மன்ற மலர் 1970.

101. சமணமும் தமிழும், தில்லித் தமிழ்ச் சங்க வெள்ளிவிழா மலர், தில்லி, 1970.

102. பண்டைத் தமிழ் மகளிரும் கச்சணிதலும், இரண்டாவது இந்தியப் பல்கலைக்கழக தமிழாசிரியர் கருத்தரங்க மலர், திருச்சி 1970.

103. நான்கு நாணல்கள் ஒரு மதிப்பீடு - திறனாய்வு, தமிழுறவு மலர், சென்னை, 1970.

104. தமிழக மறுமலர்ச்சி இயக்கத்தின் தந்தை, நண்பர் வட்ட மலர், சென்னை, 1970.

105. நெஞ்சுக்கு நீதி (குறள் விளக்கம்), நல்லறம், சென்னை, 1970.

106. திறந்த புத்தகம், காந்தியடிகள் நூற்றாண்டு விழா மலர், சென்னை, 1970.

107. திருக்குறளுக்கு உரைகள் வேண்டுமா? (Annals of Oriental Research) சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை, 1970.

108. காமத்துப்பாலின் கருத்தோவியங்கள், (Annals of Oriental Research) சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை, 1970.

109. புண்ணும் வடுவும் (குறளாய்வு), ஆரம்பக் கல்வி, சென்னை, 1970.

110. சங்க இலக்கியங்களில் திருக்குறள், கழகப்பொன்விழா மலர், கழகம் சென்னை -1, 1970

111. நாவலர் நற்றமிழின் காவலர், நாவலர் நெடுஞ்செழியன் பொன்விழா மலர், சென்னை -7, 1970.

1971

112. பண்டைத் தமிழ்ச் சமுதாயமும், நல்லறமும், சென்னை 1971.

113. தமிழகத்தின் ஆண்டுக்கணக்குமுறை, மூன்றாவது இந்தியப் பல்லைக்கழகத் தமிழாசிரியர் கருத்தரங்க மலர், அண்ணாமலை நகர், 1971.

114. வரலாற்றின் எச்சரிக்கை விசயநகர பாமினி அரசுகள், தமிழரசு, சென்னை, 1971.

115. தாய்மொழிவழிக் கல்வியே தாயகத்திற்குத் தேவை, முரசொலி, சென்னை, 08.01.1971

116. தமிழறிஞர் வி. கனகசபை பிள்ளை, கலைச்செல்வி, யாழ்ப்பாணம், 1971.

117. பழமொழிகள் உணர்த்தும் கடவுட்கொள்கை, சிதம்பரம் சிவகாமி அம்மை கும்பாபிஷேக மலர், சிதம்பரம், 1971.

118. பழமொழிகள் காட்டும் மகளிர் இயல்பு, கல்யாணம் மகளிர் உயர்நிலைப்பள்ளி ஆண்டு மலர், சென்னை, 1971.

1972

119. வள்ளுவர் கண்ட மனிதன் - 1, தமிழியல் (Jots) சென்னை, 1972.

120. திருக்குறளும் தம்மபதமும், தருமச்சக்கரம், சென்னை, 1972.

121. ஐந்திரம் நிறைந்த தொல்காப்பியன், நான்காவது இந்தியப் பல்கலைக் கழகத் தமிழாசிரியர் கருத்தரங்க மலர், திருவனந்தபுரம், 1972.

122. முப்பாலுள் முதுமொழிகள், கி.ஆ.பெ.வி. மலர், கோவை, 1972.

123. இலக்கியம் உணர்த்தும் வரலாறு, தமிழுறவு, சென்னை, 1972.

124. அறங்கூறும் அவையம், தமிழ்ப்பணி, சென்னை 1972.

125. பழமொழிகளில் பழந்தொழில், நிலவளம், சென்னை, 1972.

126. பைந்தமிழ்ப் பாவலர்: கல்யாணம் மகளிர் உயர்நிலைப்பள்ளி ஆண்டு மலர், 1972.

127. பழமொழிகள் உணர்த்தும் கடவுள் கொள்கை, திருக்கும்பாபிஷேக மலர், சபாநாயகர் கோயில், சிதம்பரம் 1972.

128. தமிழர் திருநாள், சமயம், 1972.

1973

129. கற்பனைக்கு ஒரு கவிஞரேறு, தமிழ்ப்பணி, சென்னை, 1973.

130. மூவகை மனிதர், கனகசபைப்பிள்ளை மணிவிழாமலர், சிதம்பரம், 1973.

131. மனிதனாக வாழ வாழ்க்கைத் தத்துவம், சன்மார்க்க சங்கமலர், காஞ்சி, 1973.

132. வள்ளலாரின் வாழ்க்கைத் தத்துவம், சன்மார்;க்க சங்கமலர், காஞ்சி 1973.

133. சீவகசிந்தாமணி ஒரு காப்பியமாகுமா? திருக்கோயில், சென்னை, 1973.

134. ஊன்றுகோல் (குறள் வழிக்கதை), கரும்பு, திருச்சி, 1973

135. அழுக்காறு வேண்டாம் (குறளமுதம்), சி.ப. மலர், சென்னை, 1973.

136. பெண்வழிச் சேறல், கல்யாணம் மகளிர் உயர் நிலைப்பள்ளி ஆண்டு மலர், சிந்தாதிரிப்பேட்டை, 1973.

137. வள்ளுவர் கண்ட மனிதன் -2, தமிழியல், சென்னை, 1973.

138. பாரதியாரின் இலக்கியக் கொள்கை, ஐந்தாவது இந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் கருத்தரங்க மலர், சென்னை, 1973.

139. திராவிட இனத்தின் தோற்றம் (ஒரு மறு ஆய்வு), தமிழாய்வு தொகுதி 2, சென்னைப் பல்கலைக்கழகம் வெளியீடு - 1973.

140. பாரதியின் இலக்கியக் கொள்கை, ஆய்வுக்கோவை தொகுதி 5, சென்னை மாநிலக் கல்லூரித் தமிழ்த்துறைச் சார்பு வெளியீடு 1973.

1974

141. சும்மா, மலைச்சாரல், சோளிங்கபுரம், ஏப்ரல், 1974.

142. நூறாண்டு வாழ்க - திறணாய்வு, தமிழ்ப்பணி, 1974.

143. வாணிதாசரின் வளமார் தமிழ், தமிழ்ச்சாரல், 1974.

144. கணக்காயர், ஆசிரியர் நரசிம்மன் அவர்கள் நினைவுமலர், சென்னை, 1974.

145. தமிழ் வளர்த்த பெரியார்கள், மு.சு. பூரணலிங்கம் பிள்ளை, நூலகம், சென்னை, 1974.

146. தமிழ் வளர்த்த பெரியார்கள், திருமணம் செல்லக் கேசவராய முதலியார், நூலகம், சென்னை, 1974.

147. வரலாறும், பண்பாடும், பேராசிரியர் அ.மு.ப. கருத்தரங்க மலர், சென்னை, 1974.

148. தாயா? தமக்கையா? ஆறாவது கருத்தரங்கு ஆய்வுக் கோவை, புதுவை, 1974.

149. தமிழும் மலையாளமும், செந்தமிழ்ச் செல்வி, சென்னை, 1974.

1975

150. எழிலோவியம் காணவாரீர்.

151. தமிழிற்கு ஓர் அரன்

152. அறிஞர் அறவாழி

153. சிலப்பதிகாரத்தின் மாண்பு

154. இராசராசன் கொலைகாரனா? புலமை தொகுதி 1 பகுதி 1, சென்னை - 18, 1975.

1977

155. டாக்டர். மு.வ.வின் புதிய உலகம் திறனாய்வுக் கட்டுரைகள், அணியகம், சென்னை - 30, 1977.

1978

156. கந்தபுராணக் காப்பிய நலம் திருக்கோயில் மாலை 20 மணி 4, ஜனவரி 1978.

157. கந்தபுராணக் காப்பிய நலம் திருக்கோயில் மாலை 20 மணி 5, பிப்ரவரி 1978.

158. கந்தபுராணக் காப்பிய நலம் திருக்கோயில் மாலை 20 மணி 6, மார்ச் 1978.

159. கந்தபுராணக் காப்பிய நலம் திருக்கோயில் மாலை 20 மணி 7, ஏப்ரல்1978.

160. கந்தபுராணக் காப்பிய நலம் திருக்கோயில் மாலை 20 மணி 8, மே 1978

161. கந்தபுராணக் காப்பிய நலம் திருக்கோயில் மாலை 20 மணி 9, ஜூன் 1978

162. கந்தபுராணக் காப்பிய நலம் திருக்கோயில் மாலை 20 மணி 10, ஜூலை 1978

163. கந்தபுராணக் காப்பிய நலம் திருக்கோயில் மாலை 20 மணி 12, செப்டம்பர் 1978

164. கந்தபுராணம், தமிழ் இலக்கியக் கொள்கை தொகுதி 3, உலகத்தமிழ் ஆராய்ச்சி நிறுவனம் சென்னை - 20, 1978.

165. நூல் அறிமுகம் - காளிதாசன் உவமைகள், புலமை தொகுதி -4, பகுதி 3,4, சென்னை -18, 1978.

166. முக்காவல் நாடு, ஆய்வுக்கோவை தொகுதி 10, பகுதி 3, இந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் மன்ற வெளியீடு அண்ணாமலை நகர், 1978.

1979

167. கடவுள் நெறி, திருக்கோயில் மாலை 21, மணி 11, ஆகஸ்டு 1979.

168. கல்லாடம் தமிழ் இலக்கியக் கொள்கை தொகுதி 4, உலகத்தமிழ் ஆராய்ச்சி நிறுவனம் சென்னை 20, 1979

169. திருவள்ளுவரும் சர்வக்ஞரும், திருவள்ளுவர் 2010-ஆம் ஆண்டு மலர் பெங்களூர்த் தமிழ்ச்சங்கம், பெங்களூர் 42, 1979.

1980

170. வாணிதாசன் கவிதைகளில் படிமக் காட்சி, ஆய்வுக்கோவை 12, தொகுதி 1, இந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் மன்ற வெளியீடு, அண்ணாமலை நகர், 1980.

171. பண்பாடு சமஸ்கிருத மயமாக்கப்படுதல்

172. வரலாற்றியல், ஜைன இளைஞர் மன்றம், சென்னை - 17.

173. மறுமலர்ச்சி

174. சிலப்பதிகாரத்தால் அறியப்படும் அரசியல் உறவு.

175. தமிழ் உரைநடை

176. உவமை

177. பொற்காலம்

178. பாவியலில் கற்பனை

179. கம்பனுக்கும் ஒரு தாசன் விக்ரமன் பொன்விழா மலர் 17.03.1978.

180. கல்லணையைக் கட்டியது யார்?

181. பசி

182. அறிவு என்பது என்ன?

183. மணிமேகலை காட்டும் கடவுள் நெறி

184. சிற்றிலக்கியங்கள் உணர்த்தும் இலக்கியக் கொள்கை

185. முடமோசியார் - யவனரா?

186. பழியும், பாவமும்

187. வினையின் பயன்

188. பழமொழிகள் உணர்த்தும் கடவுள் நெறி

189. இருட்டறை

190. மதுராந்தகம்

191. குறவஞ்சி

192. திருக்குறளை வேதமாகப் போற்றுவது பொருந்துமா?

193. வேளிர்

194. மனம்

195. திராவிட மொழிகளில் நீதி இலக்கியம்

196. தேசீயம்

197. வரலாற்றுக் காலம்

198. வள்ளலார் காட்டிய வழி

199. இலக்கியப் படிமங்களில் உறையூர் ஏணிச்சேரி முடமோசியார்

200. வேதங்கள்

201. வீரயுகப் பாடல்கள்

1988

202. தமிழ்நாட்டில் வைணவம் தோற்றமும், வளர்ச்சியும் சப்தகிரி, திருப்பதி, நவம்பர் 1988

203. தமிழ்நாட்டில் வைணவம் தோற்றமும், வளர்ச்சியும் சப்தகிரி, திருப்பதி, டிசம்பர் 1988

204. தமிழ்நாட்டில் வைணவம் தோற்றமும், வளர்ச்சியும் சப்தகிரி, திருப்பதி, ஜனவரி 1989

205. தமிழ்நாட்டில் வைணவம் தோற்றமும், வளர்ச்சியும் சப்தகிரி, திருப்பதி, பிப்ரவரி 1989

206. தமிழ்நாட்டில் வைணவம் தோற்றமும், வளர்ச்சியும்

206. தமிழ்நாட்டில் வைணவம் தோற்றமும், வளர்ச்சியும் சப்தகிரி, திருப்பதி, மார்ச் 1989

207. தமிழ்நாட்டில் வைணவம் தோற்றமும், வளர்ச்சியும் சப்தகிரி, திருப்பதி, ஏப்ரல்1989

208. சீனாவில் சிறப்புற்ற காஞ்சி இளவரசர், தினமணி, 15.02.1989

209. மறுமலர்ச்சி இயக்கத்தின் வெற்றிமுரசு

210. பதினெண் கீழ்கணக்கின் கற்பனைவளம்

211. பகைத் திறந்தெரிதல்

212. நான் கண்ட அடியார்க்கு நல்லார் தி.கி.நாராயணசாமி நாயுடு 80 ஆண்டு நிறைவு விழா மலர் 30.10.1985

213. திருநெறி ஐந்திரம் நிறைந்த தொல்காப்பியம்

214. தமிழரின் கலைக் கோட்பாடு உ.த.ஆ. நிறுவனம் 09.02.1987

215. பழந்தமிழ்க்குடிகள், 'முதன்மொழி" உலகத் தமிழ்க் கழக மாதிகை சென்னை 16.

216. ஒன்றே தெய்வம் இராமலிங்க வள்ளலார் - வானொலி, ஆல் இண்டியா ரேடியோ, சென்னை-4, நாள் 07.11.71

217. A Tamil Savant From the City of Madras (08.01.1901 to 27.08.1988) (08.01.1901 வழ 27.08.1988)

218. மறுமலர்ச்சித் தமிழ் உரை நடை

219. சித்தர்களின் மெய்ஞ்ஞானம் - உ.த.ஆ. நிறுவனம் 08.06.1977 83-ஆம் ஆய்வுமன்ற கருத்தரங்கு

220. சான்றோர்கள் கடைப்பிடிக்கும் பழக்க வழக்கங்களும் மரபொழுக்கங்களும்

221. படிமங்கள்

❑

நூலாசிரியர், அவர் படைப்புகள்
பற்றிய இணையதளம்

இ-புத்தகத்தை வாசிக்க /
பதிவிறக்கம் செய்ய

நூலாசிரியர், அவர்
படைப்புகள் பற்றிய யூடியூப்

ISBN: 978-93-48345-02-8

978-93-48345-02-8